பக்கங்கள் : பதினெட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆவணி 16 புதன்கிழமை (01-09-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:281

# சமாதான முயற்சிக்கு உயிரூட்டுவது சந்திரிகா கையில் என்கின்றார் பாலா

## நேற்று சொல்ஹெய்மிடம் தெரிவிப்பு

லண்டன்,செப்ரெம்பர்1

**சமாதான முயற்சிகளுக்கு - அமைதி நடவடிக்கைகளுக்கு - மீண்டும் உயிர் ஊட்டுவது ஜனாதிபதி சந்திரிகாவின் கைகளில்தான் தங்கியிருக்கிறது.**

**- இப்படி நேற்று லண்டனில் தமது இல்லத்தில் தம்மைச் சந்தித்த நோர்வே அனுசரணைக் குழுவின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்மிடமும் கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்ஹரிடமும் தெரிவித்தார் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்.**

நேற்றுக் காலை ( இலங்கை நேரடிப்படி பிற்பகல்) சுமார் மூன்று மணிநேரம் இந்தச் சந்திப்பு நீடித்தது.

போர்நிறுத்தத்தை முறையாகக் கடைப்பிடித்தல், சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பித்தல் ஆகியவை தொடர்பாக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து புலிகள் தரப்பின் ஆலோசனைகளை நேற்றைய சந்திப்பில் சொல்ஹெய்ம் கோரினார்.

அதற்குப் பதிலளித்து மதியுரைஞர் பாலசிங்கம் அவரிடம் கூறியதாவது:-

யுத்த நிறுத்தம் (18ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகளுக்கு புத்துயிர் அளிக்க 13 ஆம் திகதி சொல்ஹெய்ம் வருகின்றார்!

கொழும்பு, செப்.1

விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தை சந்தித்துப் பேச்சு நடத்திய நோர்வே சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் சமாதானப் பேச்சுகளுக்கு உயிரூட்டுவதற்காக எதிர் வரும் 13ஆம் திகதி கொழும்புக்கு வரவுள்ளார்,

இலங்கையில் நான்கு நாள்கள் தங்கியிருந்து சமாதான முயற்சிகளுக்கு புத்துயிரூட்டும் நடவடிக்கைகளில் அவர் ஈடுபடுவார்.

எதிர்வரும் 15 ஆம் திகதி கிளிநொச்சி செல்லும் சொல்ஹெய்ம் அங்கு விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து சமாதான முயற்சிகளை முன்நகர்த்துவது குறித்தும் ஆராய்வார்.

கொழும்பில் தங்கியிருக்கும் சமயத்தில் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரையும் ஏனைய அரசியல் கட்சிகளின் (18ஆம் பக்கம் பார்க்க)

**பட்டதாரிகள் நியமனம்: 2ஆவது பட்டியல் 2ஆம் பக்கத்தில்**

## வட்டக்கச்சியில் விவசாயக் கண்காட்சி

வட்டக்கச்சி,செப்.1

வட்டக்கச்சியில் இன்று முதல் எதிர்வரும் 4ஆம் திகதி வரை மாபெரும் விவசாயக்கண்காட்சி நடைபெறவுள்ளது. இன்று காலை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் இந்தக் கண்காட்சியை ஆரம்பித்து வைக்கவுள்ளார். வடக்கு-கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் எஸ்.தங்கராஜன் உட்பட அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உயர் அதிகாரிகள் பலரும் இன்றைய ஆரம்ப நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர்.(4-405)

(விரிவான செய்தி 9ஆம் பக்கத்தில்)

**ஒலிம்பிக் கோலாகலம்: பரிசுபெறுவோர் விவரம் 05ஆம் பக்கத்தில்**

### ட்றோலர் படகு சுடப்பட்ட சம்பவம்:

## குருநகர்ப் பகுதி மீனவர்கள் நேற்றுத் தொழில் பகிஷ்கரிப்பு


துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் எரிந்த படகு.

யாழ்ப்பாணம்,செப்.1

குருநகர்ப் பகுதி மீனவர்கள் நேற்றுக் கடற்றொழிலுக்குச் செல்லாமல் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

குருநகர் சென்ஜேம்ஸ் வீதியில் அமைந்துள்ள குருநகர் கடற்றொழிலாளர் அபிருத்திச் சங்கம் முன்பாக நேற்றுக்காலை 10 மணி முதல் ஒன்று கூடிய மீனவர்கள் அதிருப்தியும் ஆத்திரமும் அடைந்த நிலையில் காணப்பட்டனர்.

குருநகர் மீனவர்களுக்குச் சொந்தமான ட்றோலர் படகுகளை நோக்கி நேற்றுமுன்தினம கடலில் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் துப்பாக்கிப் பிரயோகச் சம்பவத்துக்குக் கண்டனமும் எதிர்ப்பும் தெரிவித்தே மீனவர்கள் நேற்றுப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

காலையில் ஒன்றுகூடி தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்த மீனவர்கள் பின்னர் யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசப் பணிமனையையும் தாக்கிச் சேதப்படுத்தினர். அந்தப் பணிமனை வளவில் அமைந்திருந்த வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனப் பெயர்ப்பலகையையும் அடித்து நொறுக்கினர். இதன் காரணமாக அந்த அலுவலகம் உடனடியாக இழுத்து மூடப்பட்டது.

யாழ். சின்னக்கடைப் பொதுச்சந்தை மற்றும் இறைச்சிக்கடைகள் என்பனவும் மூடப்பட்டன. (18ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கில் மீண்டும் படையினருடன் சந்திப்பு நடத்தப் புலிகள் இணக்கம்

## நாளைமறுதினம் வவுணதீவில் கலந்துரையாடல்

மட்டக்களப்பு,செப்.1

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளுக்கும் படைத்தரப்பினருக்கும் இடையில் தடைப்பட்டிருந்த நேரடிச்சந்திப்பு மற்றும் கலந்துரையாடல்களை மீள ஆரம்பிக்கச் செய்வதற்கு கண்காணிப்புக்குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் டொன் புருஹொவ்டே எடுத்த அயராத சமரச முயற்சி வெற்றியளித்திருக்கின்றது.

நாளைமறுதினம் 3ஆம் திகதி (வெள்ளிக் கிழமை) வவுணதீவுப் பிரதேச செயலகத்தில் சந்தித்துப் பேசுவதற்குப் புலிகளும் படையினரும் இணங்கியிருக்கின்றனர்.

கிழக்கில் கடைசியாகக் கடந்த ஜூன் 5ஆம் திகதி இதே வவுணதீவுப் பிரதேச செயலகக் கட்டடத்தில் புலிகளின் பிரதிநிதிகளும் அரச பாதுகாப்புப் படைகளின் அதிகாரிகளும் சந்தித்துப் பேசியிருந்தனர். அதன்பிறகு - சுமார் மூன்று மாதங்களாக - சந்திப்பு இடம் பெறவில்லை.

கிழக்கில் புலிகளுக்கு எதிரான வன்முறைகள் தீவிரமடைந்ததையடுத்து இத்தகைய சந்திப்புக்களை விடுதலைப் புலிகள் இரத்துச் செய்தனர்.

புலிகளுக்கு எதிரான வன்முறைகளுக்குப் படைத்தரப்பே பின்னணி என்று குற்றம் சுமத்திய புலிகள், அந்நிலைமை மாறும் வரை படையினரைச் சந்தித்துப் பேசுவது அர்த்தமற்றது என்றும் அறிவித்திருந்தனர்.

அரசுப் படை அதிகாரிகளும், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் நேரடியாகச் சந்தித்துப் பேசுவதன் மூலம் மட்டுமே இத்தகைய வன்முறைச் (18ஆம் பக்கம் பார்க்க)

## ஆகக்கூடிய வட்டி!

இப்போது தேசிய சேமிப்பு வங்கி உங்களுடைய புதிய நிலையான வைப்புகளுக்கு மிகவும் கவர்ச்சிகரமான வட்டி வீதங்களை வழங்குகின்றது. அருகிலுள்ள தேசிய சேமிப்பு வங்கி கிளைக்கு விரைந்து செல்லுங்கள்.

| தவணை வைப்புக்கள் | | வட்டி வீதம்* (வருடத்துக்கு) | வ.வி.வ |
|---|---|---|---|
| நிலையான வைப்பு | 03 மாதங்கள் | 7.7% | 7.92% |
| | 06 மாதங்கள் | 7.8% | 7.95% |
| | 12 மாதங்கள் | 8.0% | 8.0% |
| | 24 மாதங்கள் | 8.4% | 8.07% |
| | 12 மாதங்கள் (மாதாந்தம்) | 7.75% | 8.03% |
| | *12 மாதங்கள் (மாதாந்தம்) ஓய்வூதியம் பெற்றவர்களுக்கு | 8.25% | 8.57% |
| *கௌரவ | | 9.75% | 10.20% |
| தேசிய சேமிப்பு சான்றிதழ் (3-48 மாதங்கள்) | | 7.75%-9.0% | 8.0% |

*விதிமுறைகளுக்கு அமைய

NSB

# பட்டதாரிகள் நியமனம்: இரண்டாவது பட்டியல்

### வேலணை

ஏ.ஆனந்தவிஜி, எம்.வனஜா, வி.விஜயநேசன், எஸ்.சிவேந்திரன், எஸ்.கிருபானந்தி, ஆர்.தவமோகன், ரி.சிறீசெல்வம், வி.திரிலோகசுந்தரி, வி.திரிபுரசுந்தரி, வி.கணேஸ்குமார், ஆர்.விஜயலக்ஷி, ஆர்.அரியரட்ணம், ஆர்.ரமணன், ஆர்.தேவகலா, எஸ்.சிவகாந்தி, எஸ்.மதனகௌரி, எம்.தயாளினி, ரி.யோகேஸ்வரி, ரி.ஜெகதீஸ்வரி, வை.அனிருத்தனன், எஸ்.நிராஜினி, எஸ்.உமையாள், வி.முரளிதாஸ், பி.சசிகலா, எம்.ரூபகௌரி, ஏ.அங்கயற்கண்ணி, எஸ்.தர்சினி.

### யாழ்ப்பாணம்

எஸ்.ஆர்.மேரிரொஷாந்தி, ஜீ.டி.மரியதாசன், சி.ஜே.ஆர்.மரியநாயகம், வை.கேதீஸ்வரி, பி.மேரிலக்ஷனா, வி.சண்முகரட்ணம், வி.யூலியஸ், இ.நாகேஸ்வரன், எம்.பத்மராஜா, வி.சுபாசினி, எஸ்.ஸ்ரீசிவசக்தி, ஏ.வசந்தகுமாரி, பி.சுதாஜினி, ஏ.ஜெனபேட், ஜே.நித்தியானந்தா, எஸ்.சுபாபதி, ஜே.எவ்.மோசஸ், ஜே.ஜே.டியோனி, ஜே.ஜஸ்ரீன், வி.பத்மகுமார, கே.பிரபா, சி.சத்தியவாணி, வி.ஆனந்தரூபி, ரி.வினோதன், எப்.றெஜிஸ் நியூட்டன், வி.நிக்கலஸ், ஜே.ஜோன் கியூபேட், பி.றொபினறெனோலா, எஸ்.துஸ்யந்தி, டிடிஸ்ரெமினாஜீவனி, பீ.லியன் அலெக்ஸி, எஸ்.சுபாஜினி, என்.கவிதா, பி.பஞ்சலிங்கம், ரி.சுதர்மினி, ஆர்.ஞானவதி, கே.சித்ரூபினி, எம்.பெர்னாட் ரமேஸ், கே.கஜந்தினி, ஜே.ஞானாம்பிகா.

எஸ்.மீனாம்பிகை, வி.அமில்டன், எஸ்.விஜயதிலக், ஜி.கிருஷ்ணமலர், ஏ.ஜி.சஜிக்குமார், ஜே.ஏ.தேவபாலன், ரி.எம்.வசந்தநாயகம், ஏ.அன்ரநீற்றா, ஜ.பிரேம்நாத், ஆர்.ரமணகிருஷ்ணா, ஜே.ஜெயந்தன், யே.நித்தியானந்தன், எஸ்.அனிற்கலிற்றாஸ், எஸ்.றொமேஸ், ஏ.ஜேசுதாஸ், எஸ்.கிருபாகரன், சி.ஏ.அரவிந்தன், ஏ.பாலேந்திரா. வி.ஜுட்சதீஸ்குமார், சி.ஓ.சிவநாதன், பி.காண்டீபன், ஜி.பிரேமலதா, எஸ்.வினோபாகரன், ஏ.அன்ரன்போல், யு.நவரட்ணம், ஏ.தீபன்திலீசன், எஸ்.சுகந்தன், இ.ஜே.ஜெஸ்லி, எஸ்.சோபிதா, ரி.கஸ்தூரி, ரி.கோகுலன், எஸ்.ஜெயந்தஜெயஸ்ரீ, கே.ராஜரட்ணம், எல்.ஜெயமங்கலஜெராட், ஜே. அருளானந்தம், ஆர்.திரில்லியாத்பெலீஸியா, இ.ஆர்.சாந்தகுமார்.

பி.மதன், பி.விஜிதா, ரி.சிவதர்சினி, கே.ஈ.ஜெனீற்றா, ஏ.அலையரசி, ஜி.அமலராணி, ஜே.ஏ.எம்.சுபோதினி, ஜி.கொலஸ்ரினா, ஏ.எப்.ரட்ணகுமார், ஏ.சுவேந்தினி, ஏ.ஜே.அலெக்ஸாண்டர், என்.பிரபாகரன், எஸ்.பிரஜெட்டநிலா, எம்.ஜிபலாறோஸ், எம்.எஸ்.எம்.சிவரூபி, ஆர்.ராஜ்குமார், ஆர்.பெர்னிடடா, ஜே.அமோறின், என்.ஷகீலா, ஆர்.பத்மப்பிரியா, எம்.அலஸ்ரீன், ஜி.ஷர்மிளா, ஏ.என்.அனுகீதா, எம்.துஷ்யந்தி, கே.பிறேம்ரோஸ், ஜே.ஜரின்சுபத்திரா, ஏ.வை.வெனிற்றா, எஸ்.மேரிஇமாகுலேட்டா, கே.சதீஸ்வரன், ஆர்.ஜெயராம், ஏ.ஜே.எம்.அமலினி, ஏ.வாசுகி, எம்.பிரசாந்தன், எஸ்.ஜெயசீலன், கே.பிரதீபன், ரி.கோபிநாத், ஆர்.சிவரஞ்சினி, ஜே.விக்னேஸ், ஈ.அர்னோல்ட்.

ஈ.நளாயினி, எம்.மதுமதி, எஸ்.டெனியசோதரன், ஏ.பீன்ஸ்ராஜ்குமார், பி.கம்சத்வனி, ஏ.டிரோசினிபரீனா, ஜி.குணஜினி, எஸ்.கேசவன், பி.சசிகலா, பி.கவிதா, என்.சங்கீதா, எஸ்.ஆர்.மோகனதாஸ், எம்.பிரியசாந்தி, எஸ்.ஆர்.ஏ.மலர்விழி, எஸ்.சாந்தலிங்கம், ஜி.தினேஸ்பிரியாரங்கன், ஆர்.நிஷாந்தினி, எஸ்.தயாபரி, பி.கல்கி, சி.சிந்தியா, ஏ.மரியசீலி, ரி.அபராஜிதா, ரி.அரவிந்தன், கே.நிரஞ்சன், எம்.மனோகரன், ரி.சதீசன், ஜே.சி.சகீலா கிருஷாந்தி, ரி.தவப்பிரியா, இ.சாந்தினி, எம்.மோகனலக்ஷ்மி, ஆர்.ஆர்.மருசிலீன், எஸ்.சிவஸ்ரீ, எஸ்.பி.நைல்ஸ், எஸ்.என்.பொன்ராணி, ஜே.கரோலின். எஸ்.சுதர்சன், ஜே.விக்னராஜன், எஸ்.ஸ்ரீபன், ஆர். உதயனன், எஸ்.ஜெனரத்தினம், ஆர்.ஜெயசுதா.

### நல்லூர்

பி.அனுசா, கே.கேதீஸ்வரி, ரி.விசாகன், எஸ்.வைதேகி, என்.சியாமளா, எஸ்.சிவநேசன், எஸ்.சத்தியநாதன், கே.சதீஸ்குமார், ஆர்.கலாவதி, ஆர்.புஸ்பமாலா, ரி.தயாளினி, எஸ்.சுகந்தினி, ஆர்.ரஜிதா, ரி.எஸ்.அகிலன், ரி.காண்டீபன், எஸ்.ஹரிதாஸ், ரி.கவிதா, எஸ்.சசிரேகா, ஜே.சுபாஜினி, கே.சரத்சந்திரா, கே.வசந்தமாறன், பி.தமிழ்மாறன், எம்.தர்சினி, எஸ்.இராஜசேகரம், ஏம்.சிவதாஸன், கே.திருமகள், வி.முருகிரீஸ்வரன், ஆர்.வத்சலா, ஜே.அஞ்சனா, ரி.ஜெயந்தினி, யூ.விரிட்யட்ஜெட்நளாயினி, எம்.உதயகுமார், எஸ்.கலைராணி, வி.கமலகரன், பி.நிஷாந்தன், எஸ்.சங்கரதாஸ், ஆர்.குமரன், ரி.விஜிதா, எஸ்.தனுஜா.

எம்.ஏ.சங்கர், எஸ்.ஞானாகி, ஜே.எஸ்.ஏ.சுபோதினி, கே.விக்னராஜா, ரி.தீபா, கே.பெமினா, என்.நரேந்திரா, பி.ரேணுகா, என்.ரஜனி, ஜே.எஸ்.கலாவதி, எஸ்.சுதர்சன், எஸ்.சுனித்திரா, ஜே.பவித்திரா, ஜி.சிவாஜினி, கே.கஜந்தினி, எஸ்.ரோகிணி, கே.அருள்விழி, கே.விமலினி, கே.தயாளினி, எஸ்.கர்ணன், எம்.அனிதா, பி.பாலமகிந்தன், எம்.சுஜாதா, எஸ்.மரியாஇயுடிக்ஷலா பிரிஜ்ஜட், எஸ்.பகீரதன், எஸ்.மகேந்திரராஜ், எஸ்.குமுதினி, பி.ராதிகா, எஸ்.கலைவாணி, பி.சுபாசினி, எஸ்.கோமதி, கே.தமிழினி, வி.குமுதினி.

எஸ்.சுமதி, எஸ்.லோகேஸ்வரி, ரி.கேதீஸ், கே.கிரிதரன், எஸ்.சந்திரகலா, ஆர்.ரமேஸ், பி.விஜி, பி.சஜி, பி.சாந்தநாயகி, ஆர்.அரவிந்தன், ரி.கவிதா, ஜி.கல்பனா, வை.கேமா, கே.செல்வராசா, கே.தேவகௌரி, எஸ்.கார்த்தியாஜினி. டபிள்யூ. ஜெயமலர், எம்.யசோதரா, எஸ்.தாட்சாயினி, எஸ்.வி.பிரபாலினி, எஸ்.எஸ்.விஜிதா, எஸ்.எஸ்.சாந்தி, ஆர்.எம்.எஸ்.ஜெயந்தி, ரி.ஜெயலக்ஷ்மி, எம்.உஷாநந்தினி, வை.செந்தூரன், எஸ்.கிருஷ்ணவதனா, எஸ்.காயத்திரி, ரி.பகீரதி. எஸ்.கலைச்செல்வன், எஸ்.சுகந்தினி, கே.வதனா, ரி.கணேஸ்வரி, வி.சுபாஜினி, பி.பிரியதர்சினி, எஸ்.முகுந்தன், எம்.சுதா, எஸ்.பாலசுகி.

எஸ்.பிரபாசினி, ரி.அம்பிகைபாகன், என்.சசிக்குமார், கே.சசிகரன், கே.குமணன், சி.ராஜேஸ்வரி, எஸ்.திருக்குமரன், ரி.ராதா ஜெயலக்ஷ்மி, கே.மோகனாம்பிகை, வி.வனஜா, பி.துஷியன், எம்.சந்திரதாஸ், எஸ்.சிறீஸ்கந்தராஜா, எம்.ஸ்ரீகாந், சி.துஷ்யந்தி, ஜி.நாமகள், எஸ்.சுடர்விழி, எம்.ரஜீனி, எஸ்.சுகந்தி, கே.செந்தில்நாதன், எஸ்.சிவபாலன், ஆர்.சர்மிளா, எஸ்.சதீஸ், கே.பிரபாஞ்சலி, ஆர்.பொன்னம்பலம், ஜே.சுதர்சனா, பி.யாழினி, ஜி.சிவனேஸ்வரி, எஸ்.சசிகுமாரசர்மா, எஸ்.சர்மினி, ரி.தயாளினி, எம்.ரமணன், ரி.செந்தூரன்.

ரி.சசிக்குமார், எஸ்.மாதங்கி, கே.சத்தியப்பிரியா, ஆர்.கிருஷ்ணானந்தன், எஸ்.சுதா, எஸ்.சிவகுமாரன், ரி.சிவகுமாரன், சி.சசிகலா, ரி.தர்சினி, சி.ஜேசுராஜன், கே.சிவாஜினி, பி.சிவாஜினி, எஸ்.தர்சினி, ஆர்.கிருஷ்ணகுமார், எம்.ஏ.நந்தலட்சுமி, கே.கதிரமலை, எஸ்.சசிகலா, கே.ரேணுகா, ஆர்.சிலஜா, ஆர்.சமித்திரா, ஆர்.கஸ்தூரி, கே.கலையழகன், கே.கலையமுதா, எஸ்.சிவகரன், எஸ்.சுகன்யா, ஆர்.அகல்விழி, ஆர்.விஜயகுமாரி, ரி.உதயேஸ்வரி, கே.ஆர்.லங்கினி, எஸ்.தனுஷா, எஸ்.பிரசாந்தி, ஏ.கலைவாணி.

எம்.சுகுணேஸ்வரன், எம்.ரதீஸ்குமார், ரி.அருட்செல்வன், பி.கிருபானந்தி, எம்.கவிதாஞ்சனி, வி.தயாபரன், ஜி.அன்ரனி தவச்செல்வம், ஆர்.நளாயினி, எஸ்.சுகந்தினி, யு.ஜெயதாரணி, ஆர்.சாந்தி, வி.சிவாஜினி, கே.சிவானந்தினி, எஸ்.வணிகரன், எம்.சுகந்தன், என்.லோஜினி, கே.சிறீதரன், என்.சியாமளா, ரி.அங்கயற்செல்வி, எஸ்.ஜே.விஜயபாலா, ரி.தவவாசுகி, ஜே.ராதா, ஆர்.நஜன், எஸ்.நவநீதகிருஸ்ணன், எஸ்.கல்யாணி, பி.நளாயினி, எஸ்.சிந்துஜா, பி.கமலதாசன், எஸ்.அகிலன், எஸ்.சுரதா, பி.மகேந்திரவர்மன், எஸ்.கௌசல்யா, பி.உமையாள், எஸ்.கமலக்கண்ணன், எஸ்.விக்கினேஸ்வரன், ஜி.பாமராணி, ஆர்.திவிசா.

எம்.அசோக்குமார், எம்.எம்.நவநீதகிருஷ்ணன், பி.பகீரதன், எஸ்.குழலி, என்.பாலவதனி, எஸ்.விமலன், யு.ஞானசக்தி, என்.சி.உமாகாந்த், எம்.தபேந்திரன், எஸ்.வெண்மதி, எஸ்.சுபாஜினி, எஸ்.ஜெயதர்சினி, எஸ்.சுஜிதா, எஸ்.தீவிகா, வி.சுஜாதா, எம்.குமாரிகௌசலை, ரி.தயாழினி, ரி.சிவகுமார், எம்.ரோகிணி, என்.கவிதா, எஸ்.சகாஜா, ஆர்.சுதர்சினி, எஸ்.பக்தகௌரி, என்.காந்தலீலா, என்.சசிகலா, எஸ்.செல்வநாயகம், கே.பாமினி, எஸ்.கல்பனா, என்.தர்சினிதேவி, வி.ஜெயதாசன், எம்.கணேசானந்தன், என்.சுதர்சன், என்.சசிநந்தினி, பி.கௌரி, எஸ்.யோகராஜா, எஸ்.அபிராமி, கே.செல்வம்மகேசன், ஜே.சிவபாதசேகரம், எஸ்.சிவநேசன், ஜி.வாசுகி.

எஸ். கவிதா, கே.பிரேமிளா, எம்.பிரசாந்தி, எம்.மதிவதனி, எஸ்.சரள்வரோஜினி, கே.தேவகுமார், எஸ்.துஷாந்தி, எஸ்.திலகவதி, கே.அனுராதா, எஸ்.சுகந்தினி, எம்.யசோதரதேவி, எஸ்.குகனேஸ்வரி, எஸ்.சிவானி, ஏ.சண்முகதாஸ், வி.சர்மிளா, ரி.சத்தியலோஜினி, எஸ்.மதினி, எஸ்.சஞ்செயன், எஸ்.யாமினி, ஆர்.செந்தவி, வி.கே.ரதிகரன், எம்.சரஸ்வதி, எம்.அபிராமி, ஜி.அற்புதராஜா, வி.கோமதி, கே.உசாநந்தினி, கே.பாலமுருகன், எஸ்.கோகுலம், எஸ்.சாந்தினி, ஜே.சுஜாதா, எஸ்.ராம்ரமணன், ஆர்.காந்தலிங்கம், ரி.விஜயகௌரி, என்.ஜெயதீபன்,

ஆர்.சுஜீபா, கே.சசிகலா, எஸ்.செல்வதாஸ், ஜி.நர்மதா, கே.தங்கலட்சுமி, காயத்திரிகந்தன், ரி.ரமிளாதேவி, எஸ்.மஞ்சுசீதா, எஸ்.அனுராதா, எஸ்.உமாச்சந்திரன், ரி.எஸ். தயாளன், ஜி.சந்திரதீபா, பி.கோமதி, எல். மீரா, பி.பிரியதர்ஷினி, எஸ்.சகிலா, எஸ்.தியாக வதி, வி.ரி.எஸ்.சிவோதயன், எஸ்.வித்தியாதரன், கே.கோடீஸ்வரன், ரி.குமாரதாஸ். ரி.யசித்தா, எம்.ரஞ்சுதமலர், எஸ்.பாமினி, ஜீ.பி.ஞானப்பிரகாசம், இ.மயூரன், ஜே.நிரோ சானந்த், எஸ்.சந்திரசேகர், எம்.நாமகள், எஸ். சிவஞானவதி, ஜே.வாசுகி, ஆர். ராஜிகா, எஸ். சுரேந்தினி, ஏ.கணேஸ்குமார், ஏ.அமுதினி, எஸ்.கவிதா, ஏ.சியாமளா, பி.பிரசாந்தனன், ரி.வடிவரசி, சி.குகாஜினி, எம்.பிரபாகரன்.

### தென்மராட்சி

கே.சந்திரரஜினி, பி.நவகுமாரி, எம்.ரஜிதா, என்.அருட்செல்வி, எஸ்.சசிகலா, என்.திருச்செல்வி, எஸ்.ஜனந்தன், வி.மதியழகன், பி.சசீதை எம்.சாமினி, சி.எஸ்.தயாநந்தினி, எஸ்.செந்தூரன், கே.நாகேஸ்வரி, கே.கௌதா, ரி.சத்தியேந்திரம்பிள்ளை, எஸ்.பற்குலேந்திரன், ஏ.சிவரஞ்சனி, கே.சசியோகா, எஸ்.ஜனார்த்தனன், ஜே.பவானி, ரி.தர்மசீலன், வி.மங்களேஸ்வரி, எஸ்.வசந்தகுமாரி, வி.சுதர்சன், கே.வதனி, எஸ்.தர்சினி, ரி.விஜயகலா, பி.பாலகுமாரி, வி.சர்வானந்தன், கே.உமாசுதன், என்.அருளேஸ்வரி, ஆர்.சுகிர்தா, எஸ்.சுதாஜினி, ரி.சுபாஜினி, கே.அனுஷா, கே.அகல்யா, பி.ஜெனிற்றாமெர்லின், பி.சிவசீலா, ஆர்.நந்தினி, என்.ராசலிங்கம், ஜி.வளர்மதி, பிரதீதா, எம்.நகுலேஸ்வரி, கே.கமலபாபு, டி.அஜிதா, எஸ்.மஞ்சுலா, ரி.உமாநிதி, எம்.பாஸ்கரன், வி.உதயகுமாரி, எஸ்.திருச்செந்தூர்ச்செல்வன், கே.கணேஸ்வரன், எஸ்.சியாமளா, ஏ.சர்மினி, ஏ.சாமினி.

ரி.சுந்தாரூபி, கே.வித்தியானந்தன், எஸ்.கருணாகரன், கே.சுகந்தா, கே.நளாயினி, வி.உமாராணி, ரி.ஜீவநந்தினி, எம்.விமலரஞ்சினி, கே.மயூரன், எஸ்.கலைமகள், கே.கோமதி, வி.பாக்கியவதனி, ஜி.வசந்தநாயகி, எஸ்.சிவமணி, எஸ்.ராஜலக்ஷ்மி, கே.கருணைச்செல்வி, எஸ்.தேவகி, வி.பரமேஸ்வரி, கே.கலைச்செல்வி, எம்.பாலரஞ்சினி, கே.ஆனந்தி, ஆர்.புனிதமலர், எஸ்.விஜியமலர், ஏ.கணேஸ்வரன், வி.சனாதனன், என்.சுபந்தினி, ஆர்.ரஜினி, என்.நிர்மலா, ரி.கிறிஸ்தோப்பர், வி.விஜயேந்திரன், எஸ்.வஜினா, கே.வினோதினி, எஸ்.கஜேந்தினி, பி.அகிலநாயகி, எஸ்.திரிபுரசுந்தரி, கே.சிவகுமார், பி.உசந்தினி, பி.பிரபாகரன்,

ஏ.குமுதமனோகரி, சி.யசோதரா, எஸ்.அழகேஸ்.வரன், கே.சஜீதா, எஸ்.குகதாசன், என்.ஜெகதா, கே.விரதசாரணி, கே.குணரட்ணம், கே.மைதிலி, எஸ்.சுதாமதி, என்.லினஸ்குமார், கே.ஜெயசுதா, எஸ்.உசாநந்தி, எம்.குகனேஸ்வரி, என்.கோகிலவதனி, எஸ்.சூரியகுமார, கே.காந்தவேள், எஸ்.சிவரஞ்சன், கே.கலைவாணி, எஸ்.கமலினி, எஸ்.சிவானுஜா, எஸ்.ராஜேஸ்வரன், ஜி.கஜேந்தினி, எஸ்.வதனா, எஸ்.கருணாகரன், எஸ்.ரஞ்சனா, ரி.கிருபானந்தி, ரி.முரளிதரன், என்.சுதந்திரன், வி.நந்தகோபன், கே.காயத்திரி, எஸ்.வசந்தமாலா, ஏ.ஜெகனேஸ்வரி, எஸ்.ஜெசிகுமார், கே.தவனேசன், வி.செல்வகுமார், எஸ்.சுதர்சன், கே.மகேந்திரன், கே.கணேசன், எஸ்.சிவசுதன், ரி.மனோகரன், வி.செந்தூரன், என்.மதுராகரன்.

வி.வி.நாகவதனி, வி.எழினி, ஜி.சுஜித்தா, ஆர்.ராணிமலர், ஆர்.நாகநாதன், ஆர்.ஜமீலா, பி.அகல்ஜா, எஸ்.வீரசுதாகரன், பி.பிரணவன், ரி.ஜெராஜா, எம்.கமலாம்பிகை, எஸ்.கிருஷ்ணவேணி, கே.இராஜதுரை, ரி.சிவமதி, எஸ்.சுகந்தினி, ஆர்.பாஸ்கரன், எம்,தேவகுமாரன், எம்.மங்களேஸ்வரன், எஸ்.துஷ்யந்தி, எம்.லச்சுமணன், ரி.லம்போதரன், வி.மதிவதனி, எஸ்.தேவராஜசிங்கம், என்.சிவகௌரி, ஏ.நிருபாராணி, எஸ்.சிவகுமர், கே.சுபாசினி, ரி.மனோபவானி, கே.சுதாரணி, ரி.பிரதீபன், கே.வளர்மதி, எம்.பாபுஜி, என்.திருலாசினி, என்.அகல்யா, கே.மதுரவாசினி, ரி.பிரமீலா, என்.சுமதி, எஸ்.பிரேமினி, கே.யாழினி, கே.வாசுகி, கே.ரஞ்சிதமலர், ரி.தர்மினி, கே.சிவசுதனி, ஜே.சதாசிவம், எம்.ராஜேந்திரன், எம்.சுதர்சினி.

பி.சியாமினி, எஸ்.ரேகா, ஜி.கிருஸ்ணராணி, ஆர்.புஸ்பரூபி, பி.சுபாஜினி, வி.தயாசீலன், ஆர்.ஜனாதன், ஜி.அகல்ஜா, எஸ்.மோகனதாஸ், எஸ்.சிவாஜினி, எஸ்.ஜெயந்தினி, பி.பார்த்தீபன், எஸ்.மதீஸ்வரன், எம்.ஜெயந்தி, என்.ஜெயசீலன், ஜே.கவிதா, வி.நர்மதா, கே.தவசொரூபி, ஜி.அங்கயன், எஸ்.மேரி கிறிஸ்தோப்பர், எஸ்.புவனதாஸ், கே.கார்த்திகாஜினி, கே.மீனலோஜினி, ஜே.சுகந்தினி, எம்.சுமதி, எஸ்.சுபாசினி, எம்.மாதங்கி, கே.சிவகுமார், கே.சுகந்தினி, எஸ்.நளாயினி, கே.தவலோஜனி, எம்.சிவலிங்கம், எஸ்.குணந்தினி, எஸ்.ஜெகந்தன், எஸ்.தர்சனா, ஜே.ஆர்.நந்தினி, ஆர்.கந்தையா, ரி.வளர்மதி.

ஆர்.ஜயந்தினி, எஸ்.சிவநந்தினி, கே.குணரத்தினராஜா, வி.மதியானந்திலன், ஜி.கலைமகள். வி.சுதர்சினி, எஸ்.நேதாஜி, ஏ. திலீபன், வி.நாகரோகினி, ஜே.தீபா, ரி.சிவகுகன், எம்.ஏ.ஜே.ஜோசவ்வின், என்.மிதிலா, ரி.கிருபாகரன், ஏ.பொர்ணாதித், கே.நிலாந்தி, கே. சுபாஜினி, எஸ்.வரதீஸ்வரி, என்.தமிழ்ச்செல்வன், எம்.ரி.நிரோசன். என்.பிரபாகரன், எஸ்.பிரதீபன், சி.ராஜமோகன், கே.சுபாசினி, வி.கவிதா, என்.ராஜன், கே.ஜேசுதாசன், ரி.ரஜீதா, ஜி.பத்மவேணி, எஸ்.சுபாஜினி, எஸ்.மயூரன், என்.சுகன்யா, ஆர்.விஜயாலினி, வி.கவிதா, எஸ்.யசோதரன், வி.சனாதனன், கே.சுதன், எஸ்.ஜானகி, வி.கவிதா, என்.விபுலன், எஸ்.ஸ்ரீதரன், ரி.கௌசல்யா, பி.கோகிலகுமாரி, பி.ராகுலன், வி.நவகுலன், பி.சற்குணசீலன், எம்.வித்தியா, எஸ்.சியாமா, வி.சரஸ்வதி, ரி.ஸ்ரீநந்தினி, எம். எஸ்.சுதர்சன்.

### கரவெட்டி

எம்.வாசுகி, என்.சிவமாலா, என்.சிவநாதன், பி.குணவதனி, ரி.கேசவன், கே.யசோதரன்; கே.கந்தவேள், என்.காண்டீபன், எஸ்.நவநீதன், வி.பிரபாகரன், ஆர்.சண்முகதாஸ், எஸ்.பிரேமிலா, எம்.புனிதராஜா, ஆர்.கிருஷ்ணதாஸ், எஸ்.வைகுந்தவாசன், ஆர்.சாந்தநாதன், எஸ்.உதந்தினி, எஸ்.விவேகானந்தம்.

எஸ்.கருணானந்தம், பி.வாகீசன், கே.கமலதா, கே.அகல்யா, எஸ்.கீதையமுதான், கே.கிருபாகரன், வீ.விமலதாஸன், ஆர்.மாலினி, எஸ்.பிரேமிலா, எஸ்.கௌசிகா, ஜி.ஜெயகாந்தன், எஸ்.தனுஷா, ஆர்.ராஜன், எஸ்.பிரிந்தன், எஸ்.வதனி, ரி.தாட்சாயினி, கே.இந்திரா, எஸ்.நகுலேஸ்வரி, ரி.சசிகரன், கே.வசந்தன், கே.ஜெயசீலன், எஸ்.சிவாநந்தினி, எஸ்.ராஜ்குமார், வி.யாழினி, ஆர்.விஜிதன், ஜி.குணதயாளன், ஏ.சுதா, வி.நிருஜா, ஆர்.சற்குணதேவி, வி.வாணி, எஸ். நிரஞ்சனா, ஆர்.அகிலன், பி.வானதி, ஏ.தயாபரன், ஆர்.பிரகலாதன், எஸ்.பாலமுருகன்.

ஆர்.தயாகரன், ஆர்.கேதீஸ்வரன், கே.அன்பரசி, என்.சந்திரகாசன், வி.வைதேகி, ரி.சிவகுமார், ரி.குமுதா, ஆர்.நிமலன், ஏ.உதயகுமார், எஸ்.ஞானச்செல்வன், எஸ்.சிற்குமாரன், எம்.மாதவன், ஆர்.கேசவமூர்த்தி, கே.தயா, ஏ.ஞானப்பழம், எஸ்.அகிலன், கே.தவமலர், எஸ். எஸ்.சூரியமூர்த்தி, ஜி.அகிலன், ஆர்.ரஞ்சிதன், ஆர்.சந்திரகாசன், வி.நகுலன், ரி.மகேஸ்வரன், கே.ஜெயதார், கே.ஸ்ரீகந்தராஜா, ஜே.ஜெயசுதன, டி.திலீபன், வி.கருணாகரன், ரி.செல்வமுரளி, வை.மதன், வை.சாந்தரூபன், எஸ்.விநோதம், வி.மணிமாறன், ஏ.ஜெயதீபன்.

ரி.சுகந்தி, கே. மோகனதாஸ், எல்.தயாபரன், ரி.உதயதாஸன், என்.மோகனதாஸன், ஆர்.சாந்தினி, ரி.பிரதாப், எஸ்.பத்மினி, பி.தேவதி, எஸ்.ஜி.பஞ்சநாதம், எஸ்.செல்வராஜா, கே.குணேஸ்வரி, கே.விக்னராஜா, ரமிதா, ஜே.சுப்பிரமணியம், வி.குணபாஸ்கரலிங்கம், ரி.தயாதர்ஷினி.

### பருத்தித்துறை

என்.லோதிரூபன், ஜி.தவச்செல்வி, எஸ்.பவானி, கே.பகீரதிதேவி, ஏ.நளாயினி, எஸ்.அருள்கேசஸ்வரன், என்.கோமளா, எஸ்.எம்.தர்சினி, எஸ்.ரகுமான், ஆர்.சிவசேனசன், ரி.ஜே.குணராஜ், ரி.சண்முகதாஸ், பி.அனுசா, ஆர.மைதிலி, ஜி.மகாதேவி, ஆர்.குமுதா, எஸ்.மாலினி, வி.அனுசா, ரி.மஞ்சுளா, எஸ்.புனிதவதி, என்.ஜெயகணேஷ, ஏ.சாந்தினி, என்.ராசகுமார், எஸ்.கயனி, எஸ்.தியாகராஜா, எம்.கதிர்வடிவேல், ரி.சுஜாதா, ரி.கஸ்தூரி, கே.சியாமளாதேவி, எஸ்.அந்தோன்பொவனர்கஸ், கே.லலிதா, எஸ்.மகேஸ்வரி, ரி.யசோதா, ஆர்.மாலதி, எஸ்.செந்தூரன், எஸ்.மீரா, கே.பிரேமசுதா, வி.பவதாரணன், எஸ்.சிறிலலிதா, எஸ்.தில்லைநாதன், எஸ்.பாமதி, எம்.பிரேமினி, கே.நகுலதாஸ், ரி.ஜுலிசன்ஜென்ராஜ், எஸ்.அமுதா, ரி.மேகலா, ரி.ராஜசிறிதரன், ரி.ராஜசிறிகாந்தன், கே.சிவனேஸ்வரி, ரி.அம்பிகைதாசன், ஏ.அகிலா, ஆர்.கருணாகரன், ஆர்.குகதாஸ், எஸ்.சதாரூபினி, எஸ்.பிரதீபன், ஜே.சிவானி, பி.பிரபாகரன், பி.ரஜனி, ஆர்.அசோகன், எஸ்.வாசுகி, வி.இளமதனன், எஸ்.பகீரதன், ஆர்.சுஜாதா, வி.ஜெயராஜன், கே.மங்களேஸ்வரன், கே.கிருஷ்ணகுமார், கே.ஆனந்தகிருஷ்ணன், வி.லலிதா, ஏ.ரசிகலா, ஏ.ராதிகா, ஆர்.ரமேஷன், ரி.தயாள், ரி.ராமேஸ்வரன், எஸ்.ரங்கநாதன், பி.தாரகா, எஸ்.வைகுந்தன், ஆர்.நரேந்திரா, கே.ஞானதர்சினி, ஆர்.தயாபரன், எஸ்.சிவசெல்வன், யு.சிவசெல்வி, எஸ்.கோநாத், வி.கோபிராஜ், எஸ்.முகுந்தன், கே.கவிதா, கே.மலர்வதனி, ரி.சுதாராணி, கே.சுதாகரன், எஸ்.சகுந்தலாதேவி, வி.வீரகுமார், எஸ்.சரோஜா, ரி.வாசுகி, வி.சிறிதரன், எம்.வைரவிப்பிள்ளை, எஸ்.காயத்திரா, பி.சுதர்சன், கே.மதிவாணன், ரி.சுகந்தி, கே.பானுமதி, பி.கேதீஸ், ஆர்.நிர்மலன், எம்.ஜெயக்குமார், ரி.சிவகரன், என்.நளினி.

### கோப்பாய்

ரி.ஜெயகாந்தன், எம்.ஈஸ்வரதாஸ், ரி.வரதன், கே.ஜீவாஜினி, ஆர்.சுபீஸ்கரன், எஸ்.ஜெயதர்வினி, எஸ்.விக்னவேல், ரி.தயானந்தினி, எஸ்.செல்வகஜந்தினி, கே.பரராஜசிங்கம், வி.சிவலட்சுமி, ஆர்.சஞ்சீவன், ரி.சுமதி, எஸ்.மயூரன், எஸ்.திருப்பதிக்கந்தன், எம்.கேமமாலினி, எம்.சுரேஸ்வரன், எம்.நவகந்தா, பி.மதியழகன், எஸ்.ரேவதி, பி.செல்வம், பி.வாகீசன், கே.எஸ்.சுதாசினி, ரி.பாலகிருஷ்ணன், எம்.கொலஸ்ரீனா, ஆர்.சுகந்தினி, எஸ்.யமுனாராணி, எஸ்.ஜெசிந்தன், கே.கலைந்தினி, ஆர்.விக்னராஜ், எஸ்.வி.ரங்கன், என்.சுதர்சினி, எஸ்.சுஜீவகுமார், பி.நாகேஸ்வரபாலா, என்.கமிலஸ், கே.பிரபாகரமூர்த்தி, எஸ்.பன்னீர்செல்வம், ஆர்.கேசவன், கே.துஸ்யந்தன்.

எம்.விமலராணி, கே.பவனந்தினி, எஸ்.சந்திரரூபன், எஸ்.மீராதேவி, எஸ்.தயாநிதி, எஸ்.மகிந்தினி, ஆர்.ரமி, ஆர்.துவாரகா, எஸ்.சர்மிளா, என்.ரமிளா, எஸ்.கே.கிருபாகரன், சி.மலர்விழி, ரி.ஜெகநாதன், ரி.சுதாஜினி, ஏ.ஆர்.நிதர்சனா, யு.உமிலாதேவி, சி.யமுனாமலர், எஸ்.கல்பனா, பி.ரவீந்திரன், எம்.அகிலா, எம்.துரைராஜா, ஆர்.லங்கேஸ்வரி, வை.அருந்ததி, ஆர்.துஸ்யந்தன், எஸ்.சிவகௌரி, எஸ்.ராஜலக்சுமி, ரி.தெய்வரதி, ரி.சுசீலாதேவி, எஸ்.புரணி, ஜி.அனிந்திதை, என்.சசிகலா, எஸ்.பாலகுமாரினி, பி.கௌரி, எஸ்.ஜெயந்தினி.

ரி.மனோரஞ்சனி, ரி.வளர்மதி, கே.வாகீஸ்வரி, எல்.நளாயினி, பி.ஆரணி, ஏ.குருநாதன், எ.சுஜாதா, பி.குகனேஸ்வரன், வி.சுதர்சினி, கே.அபர்ணா,ரி.வனஜா, கே.கோபினி, எஸ்.திருமாறன், ரி.ஹரிகரன், ஜே.றெஜிதரன், கே.பொன்னுத்துரை, வே.நிரஞ்சன், எம்.ஸ்ரீதரன், வி.வைதேகி, எஸ்.மஞ்சுளா, ஆர்.மதிரூபன், வி.சுகிதா, எஸ்.தியாகராஜா. ஆர்.மதனரூபி, வி.கயல்விழி, கே.ரஞ்சிதமலர், எஸ்.யோகலட்சுமி, கே.தவநிதி, ஆர்.தாரணி, என்.குகதாஸன், எம்.மோகன்றாஜ், என்.பஞ்சசீலன், கே.மனோகரன், எஸ்.யமுனா, எஸ்.கங்கா, எம்.கலைச்செல்வி, பி.விநோதினி, எஸ்.கே.ஜங்கரன், ஆர்.குகராஜா, ஜி.நாதச்சந்திரன், வி.பிரேம்குமார், எஸ்.செந்தில்வேல், ரி.சிவகுமாரி, ரி.கௌரி, பி.பரமேஸ்வரன், பி.கிருஷாந்தி.

எஸ்.கவிதா,எஸ்.ரவிதாஸ், பி.ராதாபை, ஜே.ஜுட் ரஜிதா, எஸ்.ஸ்ரீசேதுபரன், ஆர்.கலாஜினி, ரி.மூதினி, கே.நகுலன், எஸ்.துஷிதா, எஸ்.சிவச்செல்வன், ரி.மதிமேகனா, ஆர்.பிரதீபா, எஸ்.சிந்தாமணி, எம்.கண்ணகி, ஆர்.கலைவாணி, கே.லெட்சுமணன், என்.சிவதாஸன், ரி.கிரிதரன், வி.சசிகுமார், எஸ்.குகன், பி.சத்தியன், பி.சத்தியன், ஆர்.சிவதர்ஷிகா, ஏ.குமுதினி, ஏ.அரவிந்தன், வி.முத்ரூபன், எஸ்.பிரஷாந்தன், எஸ்.தர்ஷினி, எஸ்.முத்தமிழ்ச்செல்வி.

ஆர்.பிரேமசாந்தி, கே.பதநீசன், கே.நிமலதாஸ், என்.கஜானி, என்.ஜெயகௌரி, என்.வனஜா, எம்.சிவச்செல்வன், எம்.ராமரூபன், எஸ்.ஜெயமதி, ரி.தவபாக்கியராஜா, ஏ.அமுதசொரூபன், எஸ்.சுதர்சன், ஆர்.சுஜிதா, எஸ்.முகுந்தன், எஸ்.அமுதா, ஏ.கௌசலா, ரி.ஜெயசுதன், எஸ்.இளங்கோதை.

### கிளிநொச்சி மாவட்டம்

### கண்டாவளை

ஆர்.குமுதினி, ரி.அஜந்தா, எஸ்.கவிதா, எஸ்.அகிலேஸ்வரன், எஸ்.ஜீவகன், ரி.அம்பிகாவதி, ரி.கோணேஸ்வரி, எஸ்.ஈழமதி. எஸ்.லதாநந்தினி, ரி.ஜெயகவிதா, ரி.திசைரூபன், ரி.ஸ்ரீபன் ரஞ்சித், ஜே.ஜெயதீஸ்வரன், ரி.பிரபாகரன், எஸ்.வளர்மதி.

### கரைச்சி

என்.சுஷாகரன், வி.தவகிருபா, கே.மகிந்தன், எஸ்.சந்திரப்பிரியா, கே.சுப்பிரமணியம், எம்.கயல்விழி, கே.சேரன், என்.ஞானராஜ், எஸ்.ரம்பியாதேவி, கே.யோகநாதன், ரி.மதிவதனி, ஆர்.ரி.முரளிதரன், ஈ.லோகேஸ்வரன், எஸ்.மேரி வலன்ரீனா, கே.அஜந்தரூபி, ஜே.ஜெயச்சந்திரன், கே.நளாயினி, ஜே.லமாறின்ஜெயந்த. எஸ்.விமலகுமார், ஆர்.சந்திரலேகா, ஏ.ஜமுனா, ஜி.விஜியா, எஸ்.ஞர்னசீலன், பி.சுகத்குமார், எம்.சிவநாதன், கே.கனேஜினி, கே.சந்திரவதனி, ஏ.சோதிமலர், பி.தர்சினி, என்.கயல்விழி, பி.யாழினி, எஸ்.பிரியதர்ஷினி, பி.பரமோதயன், எஸ்.தாரணி, என்.சுரேஷ்குமார், ஜி.ரயணகுமார், எஸ்.திருவருட்செல்வன், என்.சிவரஜனி, பி.கௌசலா, கே.பி.சுஜீவன், வி.மாதவன், கே.நந்தினி, என்.சுகந்தினி, எம்.விஷ்ணுதேவன், ஜி.பரணிதரன், கே.சிவகுமார், என்.ஜெயகரன், எஸ்.ஜீவா, எம்.சசிரேகா, எஸ்.மலரவன், எஸ்.சுகந்தன், எஸ்.பிரதீபன், சி.தனலக்ஷ்மி, பி.சுரேந்திரன், எஸ்.பிறேம்குமார், பி.பகீரதி, ஜி.கவிதா. பி.லுரேந்திரன், ஏ.கலைவாணி, கே.துரியோதனன், எஸ்.ஜகதீஸ், வீ.ஏ.கே.அன்ரனி. கே.நிமலதேவா, எஸ்.செந்தில்குமரன். எஸ்.விஜியதேவி, சி.மாலினி, கி.விமலதாஸ்.

### பச்சிலைப்பள்ளி

என்.பிரேமவாசன், எஸ்.பௌலினாமேரி, எஸ்.சுபாஜினி, எஸ்.சிவாநந்தினி.

### பூநகரி

எஸ்.நகுலேஸ்வரன், ஆர்.அரவிந்தன், ரி.ஜெயந்தினி, எஸ்.லதீஸ்குமார், எஸ்.கலைஞானவதி, எம்.முத்துக்குமரன், ரி.யோகநாதன், ஜி.கலைவாணி, வி.விமலராணி, வி.கலாஜினி, ஜே.ஞானசௌந்தரி, ஆர்.தர்சினி, வி.சிவநேசன், வி.மஞ்சுளா.

(மிகுதி நாளை)

உதயன்

## எழுச்சியை ஏற்படுத்துமா இந்தப் பிரசாரம்?

ஈழத்தமிழர்கள் தரப்பின் நியாயத்தை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தெளிவுபடுத்தும் விதத்திலும், எழுச்சியை ஏற்படுத்தும் விதத்திலும் பல வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் தீர்மானித்திருக்கின்றார்கள்.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் தாங்கள் நடத்திய கலந்துரையாடலின்போதே இந்த முடிவை அவர்கள் எடுத்திருக்கின்றார்கள்.

இராணுவப் பலத்திலும், அரசியல் வலுவிலும் இன்று ஓங்கிநிற்கும் தமிழர் தரப்புக்கு அவசரமாகவும், அவசியமாகவும் தேவைப்படுவது ஆதரவுப்பலம் தான்.

தமிழர்கள் தங்களின் நீதியான கோரிக்கைகளை - நியாயமான அபிலாஷைகளை - பெற்றுக்கொள்ளவும், உரிமைப் போராட்டத்தை வென்றெடுக்கவும் கௌரவமான வாழ்வியல் இருப்பை உறுதிப்படுத்தவும் இன்று அவர்களுக்குத் தேவைப்படுவது சர்வதேச மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் தார்மீக ஆதரவுதான்.

அந்தப் பலமும் கிடைத்துவிட்டால் தங்கள் உரிமைகளை அவர்கள் நிலை நாட்டிக்கொள்வது ஒன்றும் கஷ்டமான விடயம் அல்ல.

அதனைச் சரியாக அடையாளம் கண்டுகொண்டு அத்திசையில் முன்நகர நடவடிக்கை எடுத்திருக்கின்றார்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள்.

அத்துடன், நியாயத்துக்காகச் சமராடும் தமது இனத்தின் இந்தப் போராட்டத்திற்குத் தாம் எந்த வகையில் உதவமுடியும் என்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் உணர்ந்து, அந்தப் பணியை முன்னெடுப்பதற்கு - பொறுப்பேற்றுச் செய்வதற்கு - முன்வந்திருக்கின்றார்கள். அதுவரவேற்கத்தக்கது.

அண்மையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக் குழு ஒன்று கிளிநொச்சிக்குச் சென்று விடு தலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசியது.

அதன்பின்னர், ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பில் அதன் தலைமைப் பதவியைத் தற்போது வகிக்கும் நெதர்லாந்து நாட்டின் கொழும்புத் தூதரகத்தினால் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது.

அந்த அறிக்கை ஈழத் தமிழர் தரப்புக்கு எதிரான கடும்போக்கை - பக்கச் சார்புப் போக்கை - வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தது. இதுகுறித்து உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் தமிழர்கள் அதிருப்தியும் கவலையும் அடைந்தனர்.

இந்தப் பக்கச்சார்பு அறிக்கையைச் சுட்டிக்காட்டி, அதைக் கண்டித்து, உண்மையைத் தெளிவுபடுத்தி, அதுவிடயத்தில் தமிழரின் ஆட்சேபத்தையும், எதிர்ப்பையும் வெளிப்படுத்தி பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால், எதுவுமே பெரிதாக நடந்ததாக இல்லை. தமிழர் தரப்பின் மெத்தனப்போக்கினால் நெதர்லாந்துத் தூதரகத்தினால் வெளியிடப்பட்ட அந்த ஒரு பக்கச்சார்பு அறிக்கையில் கூறப்பட்டவையே உண்மை நிலை என்ற எண்ணம் சர்வதேச ரீதியிலும், தேசிய மட்டத்திலும் பதிக்கப்படும் நிலைமை ஏற்பட்டது. இந்த உதாசீன செயற்பாடு குறித்து தமிழர் ஆர்வலர்கள் விசனமும் எரிச்சலும் வெளிப்படுத்தத் தவறவில்லை; தங்களுக்குள் அவர்கள் குமைந்து - புளுங்கி - கொண்டார்கள்.

மக்களின் வாக்குகள் மூலம் தெரிவான மக்கள் பிரதிநிதிகளே இதுபோன்ற விடயங்களில் உண்மையை அம்பலப்படுத்தி, நிலைமையை நேர்சீராக்க வேண்டியவர்கள் என்பதைச் சுட்டிக்காட்டவும் அவர்கள் தவறவில்லை.

இப்போது தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் எடுத்திருக்கும் முடிவு எதிர்காலத்தில் இவ்வாறு தமிழர்களுக்கு விரோதமான வகையில் மேற்கொள்ளப்படும் தவறான - பக்கச்சார்பான - கண்மூடித்தனமான - பிரசாரங்களுக்கு ஆப்புவைக்கும் என நம்பலாம்.

தென்னிலங்கையில் அரசும், பேரினவாத சக்திகளும், அவற்றுக்குத் துணைபோகும் ஊடகங்களும் தமிழர்களுக்கு எதிராக 'கோயபலஸ்' பிரசாரத்தில் - விஷமத்தனமான - பொய்யான - நீதி, நியாயமற்ற - கதைகளைப் பரப்புவதில், முனைப்பாக இருக்கும் போது தமிழர் தரப்பு வாய்மூடி மௌனம் காத்தால், தமிழர் தரப்பின் நியாயங்கள் அடிபட்டுப்போய்விடும்.

அத்தகைய நிலை ஏற்படாமல் - அல்லது தற்போது நீடிக்கும் அந்த நிலை தொடராமல் - தவிர்ப்பதற்கு, இப்போது கூட்டமைப்பு எம்.பிக்கள் எடுத்திருக்கும் முயற்சி நன்கு உதவும்.

ஆனால், இது விடயத்தில் தீர்மானம், வெறும் கூட்டத்தில் எடுத்த முடிவாக இல்லாமல் செயலிலும் செய்து காட்டப்படவேண்டும்.

செய்வார்களா நமது மக்கள் பிரதிநிதிகள்? பொறுத்திருந்து பார்ப்போமே!

# இனியும் தாமதிக்காமல் பேச்சை ஆரம்பியுங்கள்!

## ஜனாதிபதிக்கு யாழ். ஆயர் அழுத்தம்

யாழ்ப்பாணம்,செப்.1

புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகார வரைபின் அடிப்படையில் இனி மேலும் தாமதிக்காமல் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கும்படி யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மைக்காலத்தில் இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையின் உயர் மட்ட அங்கத்தவர் ஒருவர் விடுத்துள்ள கடுமையான அழுத்தம் என்று இக்கோரிக்கை கருதப்படுகிறது.

ஜே.வி.பியுடனான உறவுகளையும், உடன்பாடுகளையும் முறித்துக்கொண்டு, சந்திரிகா தலைமையிலான சுதந்திரக்கட்சி, விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த இடைக்கால தன்னாட்சி அதிகார அலகின் கீழ் பேச்சுக்களை உடனே ஆரம்பிக்கவேண்டும் என்று யாழ். ஆயர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இனவாதத்தைத் தூண்டும் அமைப்பு என்று ஜே.வி.பியைக் குறிப்பிட்டுள்ள யாழ். ஆயர், தமிழர்களின் அடிப்படை உரிமைகளை வழங்கவும் தமிழ்ம் தேசியப் பிரச்சினைகளை ஆலோசிக்கவும் ஜே.வி.பி கட்சி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இடம் கொடுக்கப்போவதில்லை என்றும் சந்திரிகா தலைமையிலான அரசு இதனைப் புரிந்துகொண்டு ஜே.வி.பியைத் தூக்கி எறிந்துவிட்டு நாட்டு மக்களின் அவசரப் பிரச்சினையான இனப்பிரச்சினைக்குத் தீர்வுகான, விடுதலைப் புலிகளுடன் உடனே பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி அலகு, சில சக்திகளினால் தவறாகப் பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது. தமிழர்களின் அடிப்படைப் பிரச்சினைகளான உணவு, உடை, உறைவிடம் குறித்த அவசிய தேவைகளைக் கவனிக்கவே இந்த இடைக்கால நிர்வாகம் என்பதை அரசும், சிங்கள மக்களும் புரிந்து கொள்வது அவசியம். இதை ஜே.வி.பி. போன்ற இனவாதக் கட்சிகள் தொடர்ந்தும் குழப்ப முயற்சித்தால், விடுதலைப் புலிகள் இதற்கெதிராக உரிய கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று நாம் கேட்டுக்கொள்கிறோம் - என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் கிளிநொச்சி, யாழ். நகர் பகுதிகளுக்கும் கிழக்கில் மட்டு. நகர், திருகோணமலைக்கு விஜயம் மேற்கொண்ட முக்கிய சர்வதேசப் பிரதிநிதிகள், கத்தோலிக்க ஆயர்களைச் சந்தித்து நிலைமைகளை ஆராயத் தவறியதில்லை.

இந்நிலையில் வடக்கில் மிக முக்கிய குரலாகக் கருதப்படும் கத்தோலிக்க ஆயரின் இக்கருத்து, தெற்கிலுள்ள கத்தோலிக்க திருச்சபை உயர் பீடத்தையும், சர்வதேச நாடுகளின் கவனத்தையும் பெரிதும் கவரும் என்று தெரிவிக்கப்படுகிறது. (க)

# இராணுவம் கையகப்படுத்தி வைத்திருக்கும் வீடுகள் உடனடியாக விடுவிக்கப்படவேண்டும்

## மனித உரிமை ஆணைக்குழுவுக்கு மகஜர்

யாழ்ப்பாணம்,செப்.1

இராணுவம் கைவசப்படுத்தி வைத்திருக்கும் வீடுகள் அவற்றின் உரிமையாளர்களிடம் உடனடியாகக் கையளிக்கப் படவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்து தென்மராட்சி பொது அமைப்புகளின் ஒன்றியம் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளது. தென்மராட்சி பொது அமைப்புகளின் ஒன்றியத்தின் தலைவர் க.அருந்தவபாலன், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக இணைப்பாளர் றொஹான் சந்திரசேகரவிடம் இந்த மகஜரை நேற்றுக் கையளித்தார்.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:-

தென்மராட்சிப் பிரதேசத்தில் மக்களின் குடியிருப்புப் பிரதேசங்களையும் வீடுகளையும் தொடர்ந்தும் இராணுவத்தினர் கையகப்படுத்தி வைத்திருப்பதனால் இப் பிரதேச மக்கள் எதிர்நோக்கிவரும் இன்னல்களையும் நெருக்கடிகளையும் பல்வேறு சந்தர்ப்பங்களில் அறிக்கைகள் மூலமாகவும் போராட்டங்கள் வாயிலாகவும் தங்களுக்கும், சம்பந்தப்பட்ட அனைவருக்கும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்திலுள்ள பெரும்நிலப் பரப்பு அதிஉயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் மக்களின் பாவனைக்குத் தடுக்கப்பட்டிருப்பதுடன், உயர்பாதுகாப்பு வலயத்தினுள் அடங்காத பகுதிகளையும் வீடுகளையும் கூட இராணுவத்தினர் தம் வசம் வைத்துள்ளனர். இதனால், இக்குடியிருப்பு மக்கள் வீடு வாசல்கள் அற்று அகதிவாழ்வு வாழ்ந்து பல்வேறு இன்னல்களை எதிர்நோக்குகின்றனர்.

குறிப்பாக உசன் பகுதியில் பலவீடுகளை இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ளனர். புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி தனிப்பட்ட வீடுகள் யாவும் அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்படவேண்டியது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. உடன்படிக்கை கைச்சாத்தாகி இரண்டரை வருடங்கள் கடந்த நிலையிலும் வீடுகள் உரியவர்களிடம் கையளிக்கப்படவில்லை. இராணுவத்தினரின் இச்செயற்பாடு பாரிய யுத்த நிறுத்த மீறல் என்பதை தாங்கள் அறிவீர்கள். இவ்விடயம் தொடர்பாக உசன் பகுதி மக்கள் தங்களுக்கும் இராணுவத் தளபதிக்கும் உசன்பகுதி இராணுவப் பொறுப்பதிகாரி அரச அதிபருக்கும் என சம்பந்தப்பட்ட சகல தரப்பின ருக்கும் வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டும் எந்தவிதமான பயனுமில்லாத நிலையில் கடந்த 9ஆம் திகதி தென்மராட்சி பிரதேச செயலகத்தின் முன் மறியற் போராட்டம் ஒன்றையும் நடத்தித் தமது இருப்பிடங்களை தம்மிடம் கையளிக்குமாறு கோரிக்கைகளை முன்வைத்தனர். அத்துடன், அவர்களது கோரிக்கை நிறைவேறாதவிடத்து கடந்த 25ஆம் திகதி முதல் மறியற் போராட்டத்தில் ஈடுபடப்போவதாகவும் தங்களுக்கு அறிவித்திருந்தனர்.

இன்றுவரை அவர்களது கோரிக்கைக்கு எந்தவிதமான பதிலும் கிடைக்கவில்லை என்பது மிக வருத்தத்துக்குரிய ஒரு விடயமாகும்.

இதேபோல தென்மராட்சிப் பிரதேசத்தில் தனங்களப்பு, மறவன்புலவு, எழுது மட்டுவாழ, கரகம்பகம் மற்றும் ஒட்டுவெளி போன்ற பலபகுதிகளில் வாழ்ந்து தற போது அகதிகளாக அலைந்துகொண்டிருக்கும் மக்கள், தமது வாழ்விடங்களில் வாழ விடுமாறு எத்தனையோ தடவைகள் பல்வேறு வழிகளில் வேண்டுகோள் விடுத்தும் எப்பயனும் கிடைக்கவில்லை. சுதந்திரமாகக் கடற்றொழிலை மேற்கொள்ள அனுமதிக்குமாறு கோயலாக்கண்டி மக்களால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கும் சாதகமான பதில் இதுவரை இல்லை.

எனவே, எமது மக்களின் பின்வரும் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு ஆவன செய்யுமாறு தங்களை தென்மராட்சி பொது அமைப்புகளின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறோம்.

★ உசன் போன்ற பகுதிகளில் இராணுவம் கையகப்படுத்தி வைத்துள்ள வீடுகளை அவற்றின் உரிமையாளர்களிடம் உடனடியாகக் கையளித்தல்.

★ உயர் பாதுகாப்பு வலயம் என்ற கட்டுப்பாடுகளை அகற்றி தனங்களப்பு, மறவன்புலோ, எழுதுமட்டுவாழ, கரம்பகம், ஒட்டுவெளி போன்ற கிராம மக்களை குடியேற அனுமதித்தல்.

★ கோயிலாக்கண்டி மீனவர்களை சுதந்திரமாகக் கடற்றொழில்செய்ய அனுமதித்தல்.

இக்கோரிக்கைகளுக்கு உரிய தீர்வை விரைவில் பெற்றுத்தருவீர்கள் என எதிர்பார்க்கின்றோம். உரிய தீர்வு கிடைக்காதவிடத்து இப்பிரதேச மக்களும் பொது அமைப்புகளும் இணைந்து தென்மராட்சிப் பிரதேசத்தின் சகல அரசநிர்வாகச் செயற்பாடுகளையும், பிரதான போக்குவரத்தையும் ஸ்தம்பிக்கச்செய்வதற்கான தொடர் வெகுஜனப் போராட்டத்தில் ஈடுபட ஆயத்தமாகிறார்கள் என்பதையும் தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம் - என்றுள்ளது.

(8-5-7)

# அல்லைப்பிட்டி பிரதான வீதியை திருத்துமாறு கோரி மகஜர்

கொக்குவில்,செப்.1

அல்லைப்பிட்டி பிரதான வீதியைத் திருத்தஞ்செய்யுமாறு கோரி அல்லைப்பிட்டி மக்கள் குழுவினர் வீதி அபிவிருத்தித் திணைக்கள நிறைவேற்றுப் பொறியிலாளருக்குக் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ். நகரிலிருந்து சுமார் 6கிலோ மீற்றர் தூரத்திற்குள் அமைந்திருக்கும் அல்லைப்பிட்டி, மண்கும்பான் கிராமங்களில் சுமாரா் 600 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்துவருகின்றன.

இக்கிராம மக்கள் சுமார் 4கிலோ மீற்றர் தூரம் வரை சேதமடைந்து காணப்படும் அல்லைப்பிட்டி - மண்கும்பான் வீதியூடாகப் போக்குவரத்துச் செய்வதில் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இடப்பெயர்வின் முன்னர் இவ்வீதியூடாக வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையின் 743ஆம் இலக்க பஸ் சேவை நடைபெற்றுவந்தது. மீளக்குடியமர்வின் பின்னர் இச்சேவையை மீள ஆரம்பிக்குமாறு போக்குவரத்துச் சபையிடம் கேட்டபோது இந்த வீதியினர் சீரின்மை காரணமாக அதனை நடத்தமுடியாது என்று தெரிவிக்கப்பட்டது.

எனவே, மண்கும்பான் - அல்லைப்பிட்டி வீதியினைத் திருத்தியமைத்து மக்களின் போக்குவரத்துப் பிரச்சினையை நிவர்த்தி செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது.

(8-76)

# தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களின் நான்கு குழுக்களின் விவரங்கள்

கிளிநொச்சி,செப்.31

விடுதலைப் புலிகளுக்கும் தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சந்திப்பில் 4 குழுக்கள் அமைக்க முடிவாகியுள்ளது.

அக்குழுக்களில் இடம்பெறும் உறுப்பினர்களின் விவரம் வருமாறு:-

★ நாடாளுமன்றச் செயற்பாட்டுக் குழு - ஆர்.சம்பந்தன், என்.ரவிராஜ், எம்.கே. சிவாஜிலிங்கம், என்.துரைரத்னசிங்கம்.

★ தமிழ்த் தேசிய விழிப்பூட்டல் குழு - மாவை சேனாதிராசா, எஸ்.பத்மநாதன், எஸ்.ஜெயானந்தமூர்த்தி, எம்.கே.ஈழவேந்தன், செல்வி தங்கேஸ்வரி, எஸ்.சிவநேசன், சிவசக்தி ஆனந்தன், அரியநேந்திரன்.

★ தென்னிலங்கை சமூகத்துக்கு விழிப்பூட்டல் குழு - சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவநாதன் கிஷோர், எஸ்.கனகரத்தினம், விநோ(நோகராதலிங்கம்), எஸ்.கனகசபை.

★ சர்வதேச ராஜதந்திர செயற்பாட்டுக்குழு - ஜி.ஜி.கஜேந்திரகுமார், எஸ். கஜேந்திரன், திருமதி பத்மினி சிதம்பரநாதன், ஜோசப் பரராஜசிங்கம், செல்வம் அடைக்காலநாதன் (ஐ-3)

### நாளை

ஆவணி 17
வியாழக்கிழமை
(02.09.2004)
திதி : திருதியை
காலை 6.14 வரை.
நட்சத்திரம் : ரேவதி
முன்னிரவு 9.54 வரை
சுபநேரம்: 7.35 - 9.05
ராகுகாலம்: 1.35- 3.05
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

உலகம் என்னும் மருத்துவமனையில் வாழும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வியாதி உண்டு.

## தென்மராட்சி வலய அதிபர்களுக்கான கூட்டம்

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 8 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு சாவகச் சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (8-117)


# காடின் றெஸ்ரோறன்ட் பிள்ளையார் இன்

## PILLAIYAR INN GARDEN RESTAURANT

நல்லூர்க் கந்தனின் திருவிழாவை ஒட்டி காடின் றெஸ் ரோறன்ட் காலை 6 மணி தொடக்கம் இரவு 12 மணிவரையும் திறந்திருக்கும்.

★ காலை உணவு ★ மதிய உணவு
★ இரவு உணவு ★ ஆட்டா/குரக்கன் பிட்டு
★ நாவுக்கினிய இனிப்புப் பண்டங்கள் மற்றும் உங்களுக்கு வேண்டிய சைவ, அசைவ உணவுகளை மூன்று சமையல் வல்லுநர்கள் வழங்குவார்கள்.

மேற்கூறிய உணவு வகைகளுக்கு ஆகக்குறைந்தது மூன்று மணித்தியாலங்களுக்கு முன்பாக ஓடர்களைப் பதிவுசெய்து வரவும். முன் கூட்டியே பதிவுசெய்தால் தாமதிக்காமல் உணவுகளை வழங்கமுடியும்.

உங்கள் விசேட வைபவங்களான திருமணம், பிறந்தநாள் விழா, வியாபாரக்கூட்டம் மற்றும் வைபவங்களைக் கொண்டாட குளிரூட்டப்பட்ட/குளிரூட்டப்படாத மண்டபங்களுண்டு.

குளியலறையுடன் கூடிய குளிரூட்டப்பட்ட அறைகள், குளிரூட்டப்பட்ட வாகனங்கள், Expo Aviation (எக்ஸ்போ) விமானப் பயணச் சீட்டுக்கள் இவையாவையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளத் தொடர்புகொள்ளவேண்டிய இடம்:

*பிள்ளையார் இன் (Stores)*
*31,மானிப்பாய் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

Tel. 021-222 5595, 021-222 2829
Fax 021 222 5595.
E-Mail:Piyarinn @sltnet.lk
WEB.http: //PillaiyarInn.Com

(35983)(43-14-16)


## தென்மராட்சியில் 5 குளங்கள் புனரமைக்கப்படவுள்ளன

தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த ஐந்து குளங்கள் புனரமைக்கப்படவுள்ளன. இதற்கான நிதியினை விவசாய அமைச்சு ஒதுக்கியுள்ளது.

கண்டுவில்குளம் (சாவகச்சேரி), நெணியன்குளம் (கைதடி), தனிவளைக்குளம் (நாவற்காடு), குட்டியன்குளம் (விடத்தற்பளை), கோப்பயன்குளம் (மிருசுவில்) ஆகியவையே புனரமைக்கப்படவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் தெரிவித்தார். (8-117)

## வடக்கு - கிழக்கில் மரநடுகைத் திட்டம்

தென்மராட்சி, செப்.1

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மரம் நடுகைத் திட்டத்தினை ஆரம்பிக்க சுற்றாடல் இயற்கை வளங்கள் அமைச்சு ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் நடுகைக்குத் தேவைப்படும் மரக்கன்றுகளின் விவரங்களை அனுப்பிவைக்குமாறு அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவித்துள்ளார்.

(8-117)

## சிறுநீரகம் தேவை

அவசர சிறுநீரக மாற்று சிகிச்சைக்காகக் காத்திருக்கும் ஒருவருக்கு B(-) (பீ நெக்கற்றீவ்) இரத்த வகையைச் சார்ந்த சிறுநீரகம் தேவை.

**தொடர்புகொள்ளவும்:**
021 226 3116
077 6232019

(35986)

## 21ஆம் அணி மருத்துவபீட மாணவர்களுக்கு!

இன்று (01.09.2004) புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு அணிக் கலந்துரையாடல் எமது வளாகத்தில் நடைபெறவுள்ளதால் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

*மருத்துவபீடம்,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*
- 21 ஆவது அணி பிரதிநிதி.
(35985)(43-14-16)


## நல்லதொரு வாய்ப்பு

### Institute of Computer Studies
### கணனிக் கல்வி நிறுவனம்

Main Street, Pandateruppu. — I.C.S — பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

**Certificate Courses**
Micro soft Windows
Micro soft Word
Micro soft Excel
Microsoft Access
Micro soft Power Point

**சிறுவர்களுக்கான**
Micro soft Kids Programme

உங்கள் கணனித் தொழில்நுட்பத்தை வளர்த்துக்கொள்ள எங்களுடன் இணைந்துகொள்ளுங்கள். (35994)(38-14-16)

பிரத்தியேக ஆங்கில வகுப்புகள் ஒழுங்கு செய்யப்படும்.


## தும்பளை இலட்சுமணன் தோட்ட பிள்ளையார் கோயில் பாலஸ்தாபனம்

மேற்படி கோயிலில் பாலஸ்தாபனம் செய்வதற்கு நாளை (02-09-2004) வியாழக்கிழமை இறையருள் கைகூடியுள்ளது. கிரியைகள் நாளைகாலை 9.46 மணியளவில் ஆரம்பமாகும். பிற்பகல் 5.00 மணியளவில் ஏனைய கிரியைகள் ஆரம்பமாகித் தொடர்ந்து இரவு 8.30 மணியளவில் பாலஸ்தாபனம் நடைபெறும்.

2004.09.03 வெள்ளிக்கிழமை காலை 5.24 மணி தொடக்கம் 7.25 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் விநாயகப் பெருமானுக்கு பாலஸ்தாபன குடமுழுக்கு அபிஷேகம் நடைபெறும்.

**பிரதம குருக்கள்:** சைவ சித்தாந்த செம்மல்,
கிரியா கலாமணி, கிரியாஜோதி,
சிவஸ்ரீ வே.யோகராசா குருக்கள் அவர்கள்.

அடியார்கள் வைபவத்தைச் சிறப்பிப்பதுடன் விநாயகப் பெருமானின் அருளையும் பெற்றுய்வீர்களாக.

திருப்பணிக்கு உதவ விரும்புவோர் பரிபாலனசபையுடன் தொடர்பு கொள்க.

(C/37367)(43-14-16) - ஆலயபரிபாலன சபையினர்.



உ
சிவமயம்

# திருமண அழைப்பு

*அன்புடையீர்,*

நிகழும் மங்களகரமான தாரண வருஷம் ஆவணி மாதம் 16ஆம் நாள் இன்று (01.09.2004) புதன்கிழமை பகல் 10.37 மணிமுதல் 12.17மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்,

எங்கள் புத்திரன்
திருநிறைசெல்வன்
**சுதாகரன்**
(கனடா)



எங்கள் புத்திரி
திருநிறைசெல்வி
**அருள்நிதி**
(கனடா)

இருவருக்கும் நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய திருமண மண்டபத்தில் திருமணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை வாழ்த்துவதோடு அதனைத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**தங்கள் நல்வரவை இனிதே நாடும்:**

திரு.திருமதி
இரத்தினகோபால்
(ஜெகா மோட்டேர்ஸ்)
சைவப் பாடசாலை வீதி,
வல்வெட்டி.



(இரு வீட்டார் அழைப்பு)

திரு.திருமதி
தில்லைநடராசா
(கனடா)
கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை

**முக்கிய குறிப்பு:** இந்த அழைப்பை எமது உற்றார், உறவினர், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(சி-37376)(14-16-43)

## பரிசளிப்பு விழா

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மறை மாவட்ட ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையும சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் சுசுந்தரசிவம், வித்துவான் ச.அ. அடைக்கலமுத்து ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(10-48)

## சமாதான உதைபந்தாட்டம்

கொழும்பு, சென். பீற்றர்ஸ் கல்லூரியினால் 2ஆவது வருடமாக நடத்தப்படும் ஏழு கல்லூரிகள் பங்கேற்கும் சமாதான உதைபந்தாட்டப் போட்டி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நாளை வியாழக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாக உள்ளது.

நாளை தொடக்கம் மூன்று தினங்கள் நடைபெறவுள்ள போட்டியில் கொழும்பு சென். பீற்றஸ் கல்லூரி, மன்னார் சென் சேவியர் கல்லூரி, யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி, இளவாலை சென். ஹென்றியரசர் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியவற்றின் உதைபந்தாட்ட அணிகள் பங்கேற்கவுள்ளன. (10)

## கண்ணீர் விழிகளில் இதய அஞ்சலி

### சிவப்பிரம்மஸ்ரீ
### சோ.சுப்பிரமணியக்குருக்கள் (இன்னாசா ஐயா)



(குமரகோட்டம் ஞானவைரவர் ஆலய பிரதம குருக்கள்)

எமது அன்பிற்கும் பெருமதிப்புக்குமுரிய குருக்கள் ஐயா அவர்கள் காலமானதால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இ.தங்கவேல், க.தளையசிங்கம், ந.சிவராசா, இ.கணேசதாஸ், பொ.புஸ்பராசா, த.கனகசபை, செ.தர்மலிங்கம், இ.இ.இரத்தினதாசன்.

*குமரகோட்டம்,*
*கோண்டாவில்.*
(35987)(43-14-16)

# மரண அறிவித்தல்கள்

## மார்சலின் செபஸ்தியாம்பிள்ளை

இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மார்சலின் செபஸ்தியாம்பிள்ளை 30.08.2004 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் மரியப்பிள்ளை மார்சலின் அவர்களின் அன்பு மகனும் திருச்செல்வம் றோசலின் அவர்களின் மருமகனும் வினிடிறெட் அவர்களின் அன்புக் கணவரும் சாமினி (கனடா), அன்ரன் (கனடா), தர்சினி (ஜேர்மனி), கிருபா (கனடா); சிறானி, டிலானி (கனடா), தேவா (கனடா), பற்றிக் ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகராஜ், பிறேமிளா, பேனாட், மஞ்சுளா ஆகியோரின் அன்பு மாமனாரும் நிரோஷா, மெஷான், ரம்மியா, றெஷான், கிமோஷன், அனுஷன், பேனி, சமில்டன ஆகியோரின் பேரனும் பிரான்சிஸ் றோசம்மா, ஞானப்பிரகாசம் முத்தம்மா, திரேசமா அடைக்கலமுத்து, அன்னம்மா ஜீவரட்ணம், எலிசம்மா அல்பிரட் யோசப் ஸ்ரெலா, சவிரிமுத்து சொர்ணம், சுவாம்பிள்ளை குளோறியா மலர் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (02.09.2004) வியாழக் கிழமை பி.ப. 3.30 மணியளவில் கல்லூரி வீதியில் உள்ள அவரின் இல்லத்தில் இருந்து புனித அன்னம்மாள் கோயிலில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக இளவாலை சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*கல்லூரி வீதி,*
*இளவாலை.*
(35990)(43-14-16)
தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## செல்வராஜா உதயகுமார்



(யாழ்.போதனா வைத்தியசாலை ஊழியர்)

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், நாயன்மார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராஜா உதயகுமார் 30.08.2004 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் விஜிதாவின் அன்புக் கணவரும் தனுஷன் (யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்), ஹேமதர்சிகா, ஹேமப்பிரியா (யாழ்இந்து ஆரம்பப் பாடசாலை), மதுமிதா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.09.2004) வியாழக் கிழமை செம்மணி வீதி, நாயன்மார்கட்டில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காலை 10.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*செம்மணி வீதி,*
*நாயன்மார்கட்டு.*
(35996)(43-14-16)
தகவல்:
விஜிதா (மனைவி).

உ
சிவமயம்

# திருமண அழைப்பு

*அன்புடையீர்,*

நிகழும் மங்களகரமான தாரண வருஷம் ஆவணி மாதம் 18ஆம் நாள் (03.09.2004) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிமுதல் 10.30 மணிவரை வரும் சுபமுகூர்த்த சுபவேளையில்

திரு.திருமதி இராஜதுரை
தம்பதிகளின்
கனிஷ்ட புதல்வன்
திருநிறை செல்வன்
**இராஜபிரதீபன்**
அவர்களுக்கும்



திரு.திருமதி சிவகணேசநாதன்
தம்பதிகளின்
ஏக புதல்வி
திருநிறை செல்வி
**சுமிதா**
அவர்களுக்கும்

திருமணம் நடைபெற இறையருளுடன் பெரியோர்களால் நிச்சயிக்கப்பெற்று தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி திருமண மண்டபத்தில் நடைபெறவிருக்கும் திருமண வைபவத்திலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் பங்குபற்றி மணமக்களை வாழ்த்தி நிகழ்வினைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை அன்புடன் எதிர்பார்க்கும்:

திரு.திருமதி இராஜதுரை
நீர்வேலி மத்தி,
நீர்வேலி.
T.P.: 0777 - 723025.

(இரு வீட்டார் அழைப்பு)

திரு.திருமதி சிவகணேசநாதன்
மகாதனை,
துர்க்காபுரம், தெல்லிப்பழை.
T.P.: 0777 - 667823.

(35989)(26-13-16)

# உதயன் ஒலிம்பிக் கோலாகலம்

ATHENS 2004

# அதிர்ஷ்டசாலிகள் தெரிவு

உதயன் - ஒலிம்பிக் கோலாகலம் 2004 பரிசுப் போட்டிக்கான சரியான விடை **அமெரிக்கா**

**உதயன் பணிமனையில் 31-08-2004 அன்று இடம்பெற்ற பரிசுக் கூப்பன் குலுக்கலில் பரிசுக்குரியவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். அவர்களது விவரம் வருமாறு:-**

### முதலாம் பரிசு : தொலைக்காட்சிப்பெட்டி


தெரிவுசெய்தவர் :
யாழ்.மின்னக உரிமையாளர்
திரு. ம.மதிஸன்
பரிசுக்குரியவர் :
**ஜீ.சுபன்**
காந்தருபன் அறிவுச்சோலை,
சிறுவர் இல்லம்,
கைவேலி, புதுக்குடியிருப்பு.



### இரண்டாம் பரிசு : வி.சி.டி ஸ்ரீரியோ செற்

தெரிவுசெய்தவர் :
பிறவுண் அன் நிறுவன முகாமையாளர்
திரு. ஏ.ஜி.ஜெரூட்
பரிசுக்குரியவர் :
**சிவானந்தன் சுனக்ஷன்**
செல்லத்துரை, C/o சிவானந்தன்
சைவப்பாடசாலை வீதி,
திருநெல்வேலி.





### மூன்றாம் பரிசு: 2 in 1 றேடியோ (சீடில்ஸ்)

தெரிவு செய்தவர் :
பிரதம ஆசிரியர்
பரிசுக்குரியவர் :
**ஜெயசுதர்ஜினி இராஜதுரை**
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.



### நான்காம் பரிசு : கைத்தொலைபேசி

தெரிவு செய்தவர் :
பவர் செலுலர் நிறுவன உரிமையாளர்
திரு. செ.ஜீவராஜா
பரிசுக்குரியவர் :
**ரஜனி தவநடராசா**
காளிகோயிலடி,
மூளாய் றோட்,
சுழிபுரம்.

### ஐந்தாம் பரிசு : கலர் பிரிண்டர்

தெரிவு செய்தவர் :
ஐ.ஐ.எஸ். நிறுவன இயக்குநர்
திரு.கே.விக்னேஷ்
பரிசுக்குரியவர் :
**பொன்ராசா புருஷோத்தமன்**
ஸ்ரேசன் வீதி,
கோண்டாவில்.



### ஆறாம் பரிசு: மோ.சைக்கிள் உபகரணங்கள்

தெரிவு செய்தவர் :
யமஹா பிளாஸா உரிமையாளர்
திரு. வீ.மகேந்திரகுமார்
பரிசுக்குரியவர் :
**மதன் விதூசனன்**
266, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.



## ஆறுதல் பரிசுகள் (பதினைந்து) : தைத்த ஆடைகள்

### சிவகணேசன் ஸ்ரோர்ஸ்

| தெரிவு செய்தவர் | பரிசுக்குரியவர் |
|---|---|
| 01) நிர்வாக இயக்குநர் | **தங்கமுத்து சிவலிங்கம்**, 78, கலட்டி அம்மன் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். |
| 02) பிரதம ஆசிரியர் | **ஜெயவிந்தன் சசிகலா**, பங்களா லேன், மல்லாகம். |
| 03) சிவகணேசன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் | **இராசசிங்கம் ஸ்கந்தராசா**, மடம் லேன், திருநெல்வேலி வடக்கு, திருநெல்வேலி. |
| 04) பொதுசனத் தொடர்பாளர் | **காந்தி அனுஜா**, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். |
| 05) நூலகர் | **கோகுலன் வரதராஜா**, 645, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். |
| 06) கணக்காய்வாளர் | **லூ.பீ.சாளினி**, சில்லாலை, பண்டத்தரிப்பு. |
| 07) யாழ்.மின்னக உரிமையாளர் | **கஸ்தூரிகா சந்திரகுமார்**, C/o கணபதிப்பிள்ளை, 26, விதானையார் வீதி, கொழும்புத்துறை மேற்கு. |



சிவகணேசன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்
கனகசபை அருள்நேசன்

| தெரிவு செய்தவர் | பரிசுக்குரியவர் |
|---|---|
| 08) பிறவுண் நிறுவன முகாமையாளர் | **குலசிங்கம் அனுசன்**, பெரியமாவடி, சாவகச்சேரி. |
| 09) பவர் செலுலர் உரிமையாளர் | **கணேசமணி சங்கீதா**, நுணாவில் சந்தி, சாவகச்சேரி. |
| 10) ஐ.ஐ.எஸ். இயக்குநர் | **குமுதினி சக்திலிங்கம்**, வேம்படி, வல்வெட்டித்துறை. |
| 11) யமஹா பிளாஸா உரிமையாளர் | **ஞானப்பிரகாசம் கோகிலன்**, புற்றளை, புலோலி தெற்கு, புலோலி. |
| 12) கணக்காளர் | **அ.மேரிநிர்மலா**, உயரப்புலம், ஆனைக்கோட்டை. |
| 13) சந்தைப்படுத்தல் அதிகாரி | **தேவராசா தேவவிநோதன்**, நாச்சிமார் கோயிலடி, கட்டுவன். |
| 14) செயலாளர் | **ரவிக்குமார் வித்தியா**, கரவச்சை ஒழுங்கை, அளவெட்டி வடக்கு, அளவெட்டி. |
| 15) செய்தி ஆசிரியர் | **இராசேந்திரம் ராஜீந்திரன்**, கூழாவடி லேன், ஆனைக்கோட்டை. |

# 21ஆவது ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
11 – 04 – 1936

மறைவு
26 – 08 – 1983

## திருமதி தியாகராசா மாணிக்கம்

(சின்னாலடி, காரைநகர்)

[திதி:1.9.2004]

ஆண்டுகள் இருபத்தொன்று ஆனாலும் உங்கள் முகம்
அகத்தைவிட்டு அகலவில்லை அம்மாவே!
ஈண்டு உங்களை நினைந்தே இப்பூவுலகில் வாழ்கிறோம்
ஆத்மசாந்திக்காக ஆண்டவனை வேண்டுகிறோம்.

பிரிவால் வருந்துகின்ற
**அன்புக் கணவர், மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

திரு.தியாகராசா மகேஸ்வரன் M.P.,
212,ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.:021 222 2024,
021 222 2025.

S.T.பரமேஸ்வரன் அன் கம்பனி,
77,ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.:021 222 5504

ஈஸ்வரன் ரேடர்ஸ்,
69,115,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.:021 222 2813,
021 222 3048, 3590.

குறிப்பு:-
அன்னாரின் ஞாபகார்த்தமாக இன்று (01.09.2004) புதன்கிழமை நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள துர்க்கா மணிமண்டபத்தில் அன்னதானம் வழங்கப்படும். இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அன்பர்கள், அடியார்கள் அனைவரையும் பங்குகொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(சி-37353)(42-13-18)

# யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அபிவிருத்திக்கு ரூ.10 லட்சம் ஒதுக்கீடு

## பத்மினி சிதம்பரநாதன் எம்.பி. தகவல்



வலி.தெற்கு, செப்.1

யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கென ஒதுக்கப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட நிதியில் இருந்து இம்மாவட்டத்தைச் சேர்ந்த சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து பத்து லட்சம் ரூபா நிதியினை யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை அபிவிருத்திக்கென ஒதுக்கி உள்ளனர். இந்த நிதியினைக்கொண்டு படிப்படியாக எமது விளையாட்டுத்துறை அபிவிருத்தி செய்யப்படும்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான திருமதி பத்மினி சிதம்பரநாதன்.

கொரியாவில் நடைபெற்ற சர்வதேச மதங்களுக்கிடையிலான சமாதான தடகள விளையாட்டு விழாவில் கலந்து வெள்ளிப் பதக்கம் பெற்ற வலிகாமம் வடக்குப் பிரதேச வீரர் சி.கமலமோகனுக்கு அளிக்கப்பட்ட கௌரவிப்பு விழாவில் திருமதி பத்மினி சிதம்பரநாதன் கலந்துகொண்டு உரையாற்றினார்.

வலி.வடக்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில், பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ப.இராஜகோபாலன் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

விளையாட்டு சாதனை வீரர் சிவகுமார் கமலமோகனுக்கும், அவருக்கு பயிற்சி அளித்த யாழ்.பிரதேச செயலக விளையாட்டு அதிகாரி செல்வராசா ரமணனுக்கும் பிரதேச மக்களால் பாராட்டு விழா நடத்தப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் தமது உரையில் மேலும் குறிப்பிட்டதாவது -

எம்மை எதிர்நோக்கி உள்ள பாரிய பிரச்சினைகளை தீர்ப்பதில் முழுக் கவனத்தையும் செலுத்தி வருவதால நாம் விளையாட்டுத்துறைக்கு பெரிய முக்கியத்துவம் கொடுக்க வில்லை. அதனால் அத்துறை வளர்ச்சியடையவில்லை.

சிங்கள தேசத்தில் வீராங்கனையை வளர்ப்பதில் எத்தனையோ நிறுவனங்களும் அரசும் கவனம் செலுத்தி வருகின்றன. நாம் விளையாட்டு அபிவிருத்திக்கு மட்டுமல்ல வேறு எத்தனையோ விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து போராடவேண்டியுள்ளது.

எங்களுக்கென்ற உரிமை, நீதி, விடுதலை கிடைத்த பின்னர்தான் நாம இதுபோன்ற துறைகளுக்கான வளர்ச்சியில் கூடிய கவனம் செலுத்த முடியும். எமது உரிமைகளை பெறத்தான இடைக்காலத் தன்னாட்சி வரைபை சமர்ப்பித்தோம். இடைக்கால நிர்வாக சபை கிடைத்தால் ஊழலற்ற முறையில் சகல விடயங்களும் நடைபெறும என்று கூறினார்.

ஜனாதிபதியின் செயற்பாடுகளைப் பார்த்தால் ஒரு நேரம் யுத்த மேகம் சூழுவதைப்போல இருக்கும் இன்னொரு பக்கம் பார்த்தால் பேச்சு வார்த்தை தொடங்கப்போவது போல இருக்கும். பிரச்சினைக்குரியவர் தான் அதற்கான தீர்வைக் கூறமுடியும் மற்றவர்கள் தீர்வைக் கூறினால் அது திணிப்பாக அமையும் பிரச்சினைகளுககுரிய நாம் வைத்த தீர்வை அடிப்படையாகக்கொண்டு பேச்சுகள் ஆரம்பிக்கப்படவேண்டும் அதனூடாக நீதியான தீர்வு கிடைக்க நாம் எல்லோரும் சேர்ந்து குரல் கொடுக்க வேண்டும் என்று அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டார்.

இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட உதவிப் பிரதேச செயலர் திருமதி எ.அன்ரன் யோகநாயகம் பேசுகையில்,

பல பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு விளையாடச் சந்தர்ப்பம் கொடுப்பதில்லை. பாடசாலை, ரியூசன் என மாறிமாறி கல்வி கற்கவே அனுப்புகின்றனர். கமலமோகனின் பெற்றோர் விளையாட்டுத்துறைக்கு தமது பிள்ளையை அனுப்பியதனால்தான் இன்று இப்பெருமை கிடைத்துள்ளது. அவர்களை பாராட்ட வேண்டும் என்றார்.

காங்கேசன்துறை மக்கள் வங்கி முகாமையாளர் பொன்.கணேசமூர்த்தி பாராட்டுரை வழங்கினார்.

தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சி.சிவமகாராசா, சி.இராமலிங்கம் ஆகியோரும் உரையாற்றினார்கள். விளையாட்டுத்துறை சாதனையாளருக்கு கிராஸ்கொப் பேவ் விளையாட்டு கழகத்தின் சார்பில் அன்பளிப்பு வழங்கப்பட்டது. (ப-152)

# சமூகம் செய்யும் சேவையை மாணவர்கள் மறந்துவிடலாகாது

கோண்டாவில்,செப்.1

ஒரு சமூகத்தினுடைய மதிப்பானது கல்வி, விளையாட்டு, பொருளாதாரம், கலாசாரம், பண்பாட்டு வளர்ச்சியில்தான் தங்கியுள்ளது. அந்த வளர்சசியை இந்த கிராமத்திலே பார்க்கக் கூடியதாகவே உள்ளது.

கோண்டாவில் வடக்கு ஸ்ரீ வாகீஸவரி சனசமூக நிலையம், கல்விவளர்சசிக்கழகம், விளையாட்டுக்கழகம் ஆகியன இணைந்து நடத்திய விளையாட்டு விழா நிலையத்தலைவர் அ.கஜேந்திரகுமார் தலைமையில் நடைபெற்றபோது அதில் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்டு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவனேசன் உரையாற்றுகையில் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றுகையில்:

இந்த பகுதி வாழ்மக்கள் தேசியததினுடைய வெற்றிக்கு மிகவும் உழைத்திருக்கிறார்கள். அந்த வகையிலே எனது நன்றிகளையும், தமிழீழத் தேசியத் தலைவரினுடைய பாராட்டுதலையும் உங்களுக்கு தெரிவிக்க விரும்புகின்றேன். அன்று பின்தங்கிய நிலையில் காணப்பட்ட இந்த சமூகம் இன்று உயர்ந்து நிற்கிறது. இந்த வளர்ச்சியைக் கண்டு வியப்படைவதோடு மிக்க மகிழ்ச்சியடைகிறேன். அடிப்படை வசதியற்ற பல்வேறு கிராமங்களுக்கு நான் செல்கின்ற போதெல்லாம் அங்கு முன்னேற்றத்திற்கான வழிதெரியாமல் பலர் வாழ்ந்துகொண்டிருப்பதை என்னால் காணமுடிகின்றது. அதே சமயம் இங்கு துரித முன்னேற்றத்திற்கான மாற்றத்தை, உற்சாகத்தை காணக்கூடியதாகவும் உள்ளது. அதற்கு ஸ்ரீவாகீஸ்வரி ச.ச.நிலையம், கல்வி வளர்ச்சிக்கழகம், விளையாட்டுக்கழகம் என்பன வழிகாட்டி அனைவரையும் ஊக்கப்படுத்தி வருவது மகிழ்ச்சிக்குரியது.



இந்தக் கிராமத்திலே பல மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ளனர். அத்தோடு 5ஆம்தரப் புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை என்பவற்றில் சித்தியடைந்து கௌரவிப்பு பரிசில்பெற வந்திருக்கின்ற மாணவர்களை காணும போது எனது மனம் நிறைவடைகின்றது. இந்த வேளையிலே மாணவச் செல்வங்களுக்கு நான் கூறவிரும்புவது, இந்த சமூகத்திலே கல்வியைக் கற்று புத்திஜீவிகளாக உருவாக்கப் படுபவர்கள் இந்த சமூகம் தங்களுக்கு ஆற்றிய சேவையை மறந்துவிடக் கூடாது. இந்த சமூகத்திற்காக, எதிர் கால சந்ததியினரின் உயர்வுக்காக நீங்கள் உழைக்க வேண்டும் அப்போது தான் இந்தக் கிராமம் இன்னும் ஒருபடி மேலே உயர்ந்து நிற்கும் என்று கூறினார்.

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டியில் ஸ்ரீ வாகீஸ்வரி ச.சநிலைய கிராமம் இரண்டு சிறப்பான பரிசில்களைப் பெற்றிருக்கிறது. இன்னும் பல பரிசில்களைப் பெற வேணடும். யாழ்.மாவட்டத்திலே முன்மாதிரியான ஒரு கிராமமாக திகழ வேண்டும். அதற்கு அனைவரும் சேர்ந்து உழைக்க வேண்டும் என்று அவர் மேலும் பேசுகையில் தெரிவித்தார். (ப-49)

# வளங்களைப் பயன்படுத்திப் பிரதேச அபிவிருத்தியைப் பேணவேண்டும்

அச்சுவேலி,செப்.1

'அரசாங்கம் சமாதானத்தையும் தொடரமுடியாமல் சண்டையையும் தொடங்கமுடியாமல் திண்டாடிக் கொண்டு இருக்கின்றது. இந்நிலையில் எமது பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்க உதவி கிடைக்கும் என காத்துக்கிடக்காமல் பிரதேச வளங்களைப் பயன்படுத்தி உள்ளூராட்சி அமைப்பின் மூலம் எமது பிரதேசங்களை அபிவிருத்தி செய்யவேண்டும்".

- இவ்வாறு கூறினார் தமிழீழ விடுதலைப் புலிகளின் கோப்பாய்க் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.யாழவன்.

வலி.கிழக்குப் பிரதேச சபையின் உள்ளூராட்சி வார இறுதி நிகழ்வு ஆவரங்கால் சிவசக்தி மணி மண்டபத்தில் பிரதேசசபையின் செயலாளா க.இராசதுரை தலைமையில் நடைபெற்றது. விழாவில் கலந்துகொண்டு யாழவன் தொடர்ந்து உரையாற்றும் போது கூறியதாவது உள்ளூராட்சி அமைப்புக்கள் உரிய முறையில் செயற்பட்டால் கிராமிய மட்டத்தில் காணப்படும் பல்வேறு பிரச்சினைகளைச் சீர் செய்து மக்களுக்கான பல்வேறு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கமுடியும்.

மக்கள் உள்ளூராட்சி அமைப்புக்களின் செயற்பாடுகளுக்கு உரிய வரிகளை உரிய முறையில் செலுத்துவதோடு உள்ளூராட்சி அமைப்புக்களுடன் இணைந்து தொழிற்பட வேண்டும்.

இன்றைய அரசியல் சூழ்நிலையில் தமிழர் தாயகத்தின் அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகளில் நாம் அக்கறை கொண்டு தொழிற்பட வேண்டும். அரசாங்கம் சண்டையை முன்னெடுத்தாலும் அதனை எதிர்கொளவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தயாராக உள்ளனர். எமது பிரதேசம் யுத்த அனர்த்தங்களால் சீரழிக்கப்பட்டுள்ளது. அதனை மீண்டும் கட்டி எழுப்புவதற்கு அதிகாரம் உள்ள அமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

சமாதானம் வந்து விட்டது என மக்கள் எண்ணிக்கொண்டு இருக்காமல் தொழிற்பட வேண்டிய காலம் இது. தற்பொழுது நிலவுவது சமாதான முன்னெடுப்புக்கான யுத்தநிறுததமே ஒழிய சமாதானம் அல்ல. சமாதானமா? சண்டையா? என்பதைத் தீர்மானிக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தின் பக்கம் உள்ளது எனக் கூறினார்.

கலை நிகழ்வுகளும் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுககான பரிசளிப்பும் நடைபெற்றது. (ப-11)




# சமயம் மேலோங்க அறப்பணிகள் அவசியம்

யாழ்ப்பாணம்,செப்.1

ஆதியும் அந்தமும் இல்லாத அரும் பெரும் மதமாகிய எமது இந்துமதம் மேலோங்கி வளர வேண்டுமானால் அறப்பணிகளைக் கடைப்பிடிப்பது அவசியமாகும். அதுவே ஒரு சிறந்த பணியாகும்.

- இவ்வாறு தெரிவித்தார் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஆத்மகணானந்த சுவாமிஜி.

திருநெல்வேலி விவசாயக் கல்லூரி முன்பாக அமைக்கப்பட்டுள்ள கருணாலய இல்லத்திறப்பு விழாவில் கலந்துகொண்டு இல்லத்தினைத் திறந்து வைத்து உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையிலே கூறியதாவது:-

விலைவாசி வானளாவ உயர்ந்திருக்கும் இன்றைய கால கட்டத்தில் இப்படி ஒரு கருணாலயத்தை அமைத்துப் பொது சேவை செய்ய முன்வந்திருக்கும் பரமலிங்கம் குடும்பத்தினருக்கு நாம் என்றென்றும் கடமைப்பட்டவர்கள்.

ஆதரவற்ற இளஞ்சிறார்களுக்கு ஆதரவு காட்டி புகலிடம் கொடுத்து வாழ்வில் மலர்ச்சியையும் புத்துணர்ச்சியையும் நம்பிக்கையையும் ஊட்டிய ஸ்தாபகருக்கு எமது அன்பு நன்றிகள். கருணாலயத்தை சிறந்த முறையில் அமைத்தது மட்டுமன்றி அதன் வளர்ச்சிக்காகத் தன்னாலான மட்டும் முயன்று பயன்கருதாது சேவையாற்றும் அவருக்கு நிகர் அவரேதான் என்றார்.

சிவ தொண்டன் நிலைய தலைவர் செல்லத்துரை சுவாமிகள் பேசுகையில், கருணை என்றால் இரக்கம். கருணாலயம் என்றால் கருணையுள்ளங்களின் இருப்பிடம் என்று பொருள். துணையின்றித் தவிக்கும் குழந்தைகள் மகிழ்வுடனும் மனச்சந்தோஷத்துடனும் வாழ்வதற்கு உதவும் நோககுடனேயே இது அமைக்கப்பட்டது. இந்தக் கருணாலயம் நல்லமுறையில் வளர்ச்சியடைந்து சிறப்புற எல்லாம் வல்ல பரம்பொருளைத் தியானித்து பிரார்த்திக்கின்றேன் என்றார்.

நல்லை ஆதீன முதல்வர் தமதுரையில், மலர்கள் வாடாதிருக்க வேண்டுமானால் தண்ணீர் ஊற்றுதல் வேண்டும். அதேபோல் மழலைகள் சந்தோஷமாக வாழவேண்டுமானால் அவர்களுக்கு ஆதரவு தேவை. இளமையில் வறுமை கூடாது என்பர் பெரியோர். ஆகவே, மழலைச் செல்வங்கள் மகிழ்ச்சியுடன் வாழ இந்தக் கருணாலயம் பெரிதும் உதவும் என்றார். மற்றும் பலர் பேசினர். (ப-13)

# விளையாட்டுத்துறையை வளர்க்க உகந்த சூழல் இது

வடமராட்சி,செப்.1

இன்றைய சூழ்நிலையில் விளையாட்டுப் போட்டிகள் பல இடங்களிலும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. சமாதானம் நிலவும் இன்றைய நிலையில் விளையாட்டுத்துறையை நாம் வளர்த்துக் கொள்ளவேண்டும்.

- இவ்வாறு கூறினார் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம்.

வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் பொன்விழாவை ஒட்டி நடத்தப்பட்ட பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில வெற்றி பெற்றோர்களுக்கான பரிசளிப்பு விழா நெடியகாடு விளையாட்டு மைதானத்தில் கழகத்தலைவர் சூ.சே. குலநாயகம் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் எம்.கே.சிவாஜிலிங்கம் எம்.பி. மேலும் பேசுகையில் கூறியதாவது.

விளையாட்டுக்கள் எப்பொழுதும் விளையாட்டாக இருக்கவேண்டும். இப்பகுதியில் விளையாட்டுக்கள் வேறு விளையாட்டுக்களுக்கு செல்வதைத் தவிர்க்க வேண்டும். நாடாளுமன்றத்தில ஜே.வி.பியுடன் மோதி விட்டுப்பின்னர் கை குலுக்குகிறோம். விளையாட்டுத துறையில் முன்னேறி நாம் சிறந்த வீரர்களாக விளங்கவேண்டும். எதிர்காலததிலும் சிறந்த விளையாட்டு வீரர்கள் உருவாக வேண்டும்.

நெடியகாடு விளையாட்டு மைதானத்தை விஸ்தரிக்கவும் வளம்படுத்தவும் போதிய உதவிகளைச் செய்து தருவேன் என்றார்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் பேசுகையில்,

யாழ்.குடாநாட்டில் விளையாட்டுககும், வீரத்துக்கும் அன்றும் இன்றும் பெயர்பெற்ற இடமாக வல்வெட்டித்துறை விளங்குகின்றது. வீரத்தை வெளிக்கொணர்வதில் வல்வெட்டித்துறை முன்னணி வகிக்கின்றது. சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கி வரும் நெடியகாடு விளையாட்டுக் கழகம் 50 ஆண்டுவிழாவைக் கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன் என்றார். (ப-173)



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 02 - 03 - 1945



மறைவு 12 - 09 - 2003

**கனகரத்தினம் பாக்கியநாதன்**

திதி: துதியை 01.09.2004

நெஞ்சிருக்கும் காலமெல்லாம் நினைவிருக்கும்
நினைவிருக்கும் காலமெல்லாம்
நினைத்திருப்போம் நெஞ்சினிலே.

தகவல்:
*பருத்தித்துறை.* (35935)(39-29-12-17) **மனைவி, மக்கள்.**

---

# கசிப்பு வைத்திருந்தவருக்கு 6 மாதக் கடூழியச் சிறை

கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் கைதடி, கோவிலாக்கண்டி வாசி ஒருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றினால் ஆறு மாதக் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பொலீஸார் கோவிலாக்கண்டிப் பகுதியில் மேற்கொண்ட திடீர் சோதனையின் போது 55 டிராம் கசிப்பு வைத்திருந்தார் என்று கூறி மேற்படி நபரைக் கைதுசெய்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இந்நபரை சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்செய்தபோது நீதிவான் அவருக்கு 6 மாதக் கடூழியச் சிறைத் தண்டனை விதித்தார். (ஒ-117)

# சட்டவிரோத ஆயுதங்களை கைப்பற்ற நடவடிக்கை

நாட்டின் சகல பகுதிகளிலுமுள்ள சட்டவிரோத ஆயுதங்களை உடனடியாகக் கைப்பற்றுமாறு பதில் பாதுகாப்பு அமைச்சர் ரட்ண சிறி விக்கிரமநாயக்க உத்தரவிட்டுள்ளார்.

தற்சமயம் 35 ஆயிரம் சட்டவிரோத சுடுகலன்களும், ஆயுதங்களும் நாட்டில் உள்ளதாகத் தெரியவந்துள்ளது. இத்தகைய சட்டவிரோத ஆயுதங்கள் இருப்பதே நாட்டில் தற்போது இடம்பெற்றுவரும் படுகொலைகளுக்குக் காரணம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அண்மைக் காலத்தில் சட்டவிரோத ஆயுதங்களை ஒப்படைக்குமாறு அரசு விடுத்தகோரிக்கை பெருமளவில் பயனளிக்காத அதேவேளை, கொலைகள் அதிகரித்து வருகின்றன எனவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

# விசர் நாயினால் மூவர் கடியுண்டனர்

தென்மராட்சி,செப்.1

வீதியில் நடந்து சென்ற மூன்று பெண்கள் விசர் நாயினால் கடியுண்ட சம்பவம் கடந்த சனிக்கிழமை சாவகச்சேரி, கல்வயலில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த ச.லலிதாம்பாள் (வயது 50), சி.ரமா (வயது21), வீ.நீலாம்பிகை (வயது 56) ஆகியோரே விசர் நாயினால் கடியுண்டவர்களாவர். மூவரும் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.(9-117)

---

# முதலாவது 01.09.2004 பிறந்தநாள் வாழ்த்து

சுவிஸில் வசிக்கும்
விஜயகுமார் - ஜெயந்தி தம்பதிகளின்
செல்வப் புதல்வன் அர்ஷாத்
தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று
(01.09.2004) புதன்கிழமை சுவிஸில்
உள்ள தனது இல்லத்தில் வெகு
விமரிசையாகக் கொண்டாடுகிறார்



**அர்ஷாத்**

அர்ஷாத் குட்டியை அன்பு அப்பா, அம்மா,
அம்மப்பா, அம்மம்மா, மாமாமார், அத்தைமார்,
மச்சாள்மார், சஜீவா, சோனியா, அப்பப்பா,
அப்பம்மா, சித்தப்பாமார், சித்தி மற்றும்
உறவினர்கள் அனைவரும் துர்க்கை அம்மன் அருளால்
சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம்
வாழ வாழ்த்துகின்றனர்.

தகவல்:
கைதடி தெற்கு,
கைதடி. (33945) **சந்திரன் ஜெயராஜ்.** (மாமா) (லண்டன்)

---

**தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
**கொடிகாமம்**

கிளை முகாமையாளர் (தற்காலிகம்)

# பதவி வெற்றிடம்

01. சம்பள அளவுத் திட்டம்: 3750 - 5200 (கூ. வே. ஆ. சுற்று 70/10 - 75/10 நிருபம் 31/99 இன்படி (குறியீட்டு இல. 208/14 165/88இன்படி
02. வயது: 18 தொடக்கம் 25 வரை
03. விண்ணப்ப முடிவு திகதி: 15-09-2004
04. பிணைப்பணம்: ரொக்கம் 5,000/- ஆதனம் 10,000/-

05.1. சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

06. விண்ணப்பங்கள் பொதுமுகாமையாளர், தென்மராட்சி கிழக்கு பல நோ. கூ. சங்கம் வரைவுள்ளது, பருத்தித்துறை வீதி, கொடிகாமம என்ற முகவரிக்கு *கிளை முகாமையாளர் (தற்காலிகம்) பதவிக்கான விண்ணப்பம* என கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் எழுதப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல்வேண்டும்.

07. தகைமைகள்:

அ) கூட்டுறவுப் பணியாளரின் 15 ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 02 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 16 ஆவது சம்பளத் திட்டத்தில் நான்கு வருடத்திற்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணம்) பத்திரம்/க. பொ. த (சாதாரண தரத்தில் 2 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம்/வர்த்தக கணிதம்/தூய கணிதம், சிங்கள/தமிழ்ப் பாஷை என்பன வற்றினை உள்ளடக்கியதாக 6 பாடங்களில் சித்தி.

**- பொதுமுகாமையாளர்.**

**தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம்,**
**பருத்தித்துறை வீதி,**
**கொடிகாமம்.**
**27.08.2004.** (சி-37344)(34-29-12-17)

---

# தவறிவிட்டது

101 - தொடர் இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் காப்புறுதிப் பத்திரம், 2004 ஆம் ஆண்டுக்கான வரிப்பத்திரம் என்பன அடங்கிய பொலித்தீன் பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரிகளில் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (35944)(26)

| | |
|---|---|
| மா. ஜெயசீலன் | ச. மோகனதாஸ் |
| **ஸ்ரீதுர்க்கா இருப்பகம்** | **தனுஜா கொமினிக்கேஷன்ஸ்** |
| இல.186. பாங்ஷால் வீதி. | அராலி மத்தி. |
| சின்னக்கடை. யாழ்ப்பாணம். | வட்டுக்கோட்டை. |

---

# விற்பனைக்கு

புதிய மொடல் DT YAMAHA 125
Trailer Bike (Field Bike)
Made in Japan
**தொடர்புகளுக்கு: 077 6622053** (35910)

---

தென்மராட்சி கிழக்கு பல நோக்குக்
கூட்டுறவுச் சங்கம் - கொடிகாமம்

## உள்ளகக் கணக்காய்வாளர் பதவி வெற்றிடம்

01. சம்பள அளவுத் திட்டம்: 4750 - 6850 (கூ.வே.ஆ.சுற்று நிருபம் ---------------- 31/99 இன் படி) (100/10-110/10) (குறியீட்டு இல. 165/88 இன்படி)
02. வயது: 23 தொடக்கம் 40 வரை (சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை பொருந்தாது)
03. விண்ணப்ப முடிவுதிகதி: 15.09.2004
04. பிணைப்பணம்: ரொக்கம் 10,000/- ஆதனம் 15,000/-
05. 1. சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
    2. சங்கத்தில் ரூபா 10/- செலுத்திப் பெற்றுக்கொண்ட விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பிக்கவேண்டும்.
    3. கணனி அறிவும், திறனும் அவசியமாக இருத்தல்வேண்டும்.
06. வேறு சங்கங்களில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் தங்களுடைய சங்கத்தின் ஊடாக விண்ணப்பிக்கவேண்டும்.
07. விண்ணப்பங்கள் 'பொதுமுகாமையாளர், தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் வரைவுள்ளது, பருத்தித்துறை வீதி, கொடிகாமம்' என்ற முகவரிக்கு *உள்ளகக் கணக்காய்வாளர் பதவிக்கான விண்ணப்பம்* எனக் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் எழுதப்பட்டு பதிவுத் தபால்மூலம் அனுப்பி வைக்கப்படல்வேண்டும்.
08. அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:

அ) கூட்டுறவுப் பணியாளரின் 11 ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்குப் பதிவாளர் அல்லது கணக்கு அல்லது கணக்காய்வு இலிகிதர் பதவியில் 03 வருடங்களுக்குக் குறையாத அனுபவமும் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 12 ஆவது சம்பளத் திட்டத்தில் கணக்கியல் சம்பந்தமான துறையிலான பதவியில் 06 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனமொன்றின் கணக்கியல் சம்பந்தமான துறையிலான பதவியில் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்), க.பொ.த. (உயர்தரம்) இல் கணக்கியலை ஒரு பாடமாகக் கொண்ட மூன்று பாடங்களிலான சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக /கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் மேற்பார்வை மட்டத்திலான கணக்கியல், கணக்காய்வு துறையிலான பதவியில் 04 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

**தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம்,** **- பொதுமுகாமையாளர்.**
பருத்தித்துறை வீதி, கொடிகாமம்.
**30.08.2004** (சி37343)(34-29-12-17)

---

உ
சிவமயம்

# திருமண அழைப்பு

**அன்புடையீர்!**

சுவஸ்த்தி ஸ்ரீ தாரண வருடம் ஆவணித்திங்கள் 16 ஆம் நாள் இன்று (01.09.2004) புதன்கிழமை காலை 5.00 மணிமுதல் 6.00 மணிவரை சமாவர்த்தனம், அதனைத் தொடர்ந்து காலை 9.35-11.30 இற்குள் வரும் கன்னிலக்கினமும் திருதியைத் திதியும் உத்தரட்டாதி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபவேளையில்,

**பிறவுண் வீதி, முதலாவது லேன்,**
**யாழ்ப்பாணம்**
பிரம்மஸ்ரீ சிவராச சர்மா
சுலோசனாதேவி தம்பதிகளின்
கனிஷ்ட புத்திரன்

**பிரபாகரசர்மா**

**அவர்களுக்கும்**



**வேப்பங்குளம், வவுனியா முதலாவது லேன்**
**யாழ்ப்பாணம்**
பிரம்மஸ்ரீ நடராசசர்மா இராசாம்பாள்
தம்பதிகளின்
கனிஷ்ட புத்திரி

**லக்ஷ்மி**

**அவர்களுக்கும்**

திருவருளும் குருவருளும் துணை நிற்க செட்டித்தெரு புதிய கதிரேசன் கோயில் மண்டபத்தில் கன்னிகாதாரண மாங்கல்ய தாரண பாணிக்கிரகணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் இனபந்துக்கள் அனைவரும் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் உங்கள் நல்வரவை நாடும்:

**சிவராசசர்மா சுலோசனா தேவி தம்பதிகள்,** யாழ்ப்பாணம்.
**(இரு வீட்டார் அழைப்பு)**
**நடராசசர்மா இராசாம்பாள் தம்பதிகள்,** வவுனியா.

**தங்கள் நல்வரவை நாடும்:**
**(இருவீட்டார்)**

1. புஷ்பராச சர்மா தம்பதிகள் - ஜேர்மன்
2. சந்திரகாந்த சர்மா தம்பதிகள் - ஜேர்மன்
3. மகேந்திர சர்மா தம்பதிகள் - கொழும்பு
4. வசந்தகுமார குருக்கள் தம்பதிகள் - யாழ்ப்பாணம்
5. கிருபாகர சர்மா தம்பதிகள் - கொழும்பு

1. கோபாலகிருஷ்ண குருக்கள் தம்பதிகள் - வவுனியா
2. ஜெயந்திநாதக் குருக்கள் தம்பதிகள் - வவுனியா
3. ஞானமூர்த்தி சர்மா தம்பதிகள் - பிரான்ஸ்
4. வேணுகோபால குருக்கள் தம்பதிகள் - கண்டி
5. சனார்த்தன சர்மா தம்பதிகள் - வவுனியா
6. மதனகோபால சர்மா - பிரான்ஸ்

**வரவேற்பாளர்கள்: யோகேஸ்வர சர்மா தம்பதிகள் ~ கொழும்பு**
**ஜெகதீஸ்வர குருக்கள் தம்பதிகள் ~ கொழும்பு**

04.09.2004 சனிக்கிழமை வரவேற்பு மாலை 5.00 மணிக்கு மணமகள் இல்லத்தில்.
"சந்தியா வாசம்"
இல:97, கல்குழி, வவுனியா. (35702)(29-12-17)

---

# MASTER NUMEROLOGY

## அதிர்ஷ்டம் உங்களை அழைக்கிறது

மாணவர்கள் பரீட்சையில் சித்திபெற்று உயர்கல்விவாய்ப்புப் பெறவும், நோயாளர்களின் வருத்த துன்பங்கள் கட்டுக்குள் அடங்கவும் அல்லது நீங்கவும், வர்த்தகப் பிரமுகர்கள் வர்த்தகத்துறையில் இலாபமீட்டவும், அரச உத்தியோகத்தர்கள் உத்தியோக உயர்வுபெறவும், திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நிகழவும், திருமணம் முடித்து கருத்துவேறுபாடு காரணமாக மனம்நொந்து வாழும் கணவன் - மனைவி மனமொருமித்த தம்பதிகளாக மகிழ்ச்சியுடன் வாழவும், காதலர்கள் காதலில் வெற்றி பெற்றுத திருமணம் முடிக்கவும், வெளிநாட்டுப் பிரயாணம் மேற்கொள்வோருக்கு பிரயாணமுயற்சி தடையின்றி வெற்றிபெறவும், புதிய தொழில் ஆரம்பிப்பவர்களுக்கு எந்தத் தொழில்துறை பொருந்தும் அதிர்ஷ்டந்தரும் என்கின்ற வழிகாட்டலும் அத்துடன், அதிர்ஷ்டம் தரும் ஸ்தாபனப் பெயர், விலாசமும்

மேலே குறிப்பிட்ட அனைத்துத் தரப்பினரும் நன்மைபெற்று அதிர்ஷ்டசாலிகளாகத் திகழவும் வெற்றிகரமாக மகிழ்ச்சியுடன் வாழவும் எண் சோதிடக் கலையின் அதிர்ஷ்ட இரகசியங்களைப் பிரயோகித்து அதிர்ஷ்ட சக்தியை வரவழைத்து உங்கள் ஒவ்வொருவரையும் திட்டமான அதிர்ஷடசாலிகளாகத் திகழ அனைத்து வழிவகைகளையும் அமைத்துத் தருவோம்.

சலுகைக் கட்டணம் ரூபா 450/= குறிப்பிட்ட சில தினங்களுக்கு மட்டுமே. தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு சந்திக்கும் இடம், திகதி, நேரத்தை முன்பதிவுசெய்துகொள்ளலாம்.

**T.P.: 021-222 2810**

**மிலேனியம் உல்லாசப் பயணிகள் விடுதி உங்களை அன்புடன் வரவேற்கின்றது.**

76/60, இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம்.
யாழ். வலிகாமம். தீவக மக்களுக்காக
புதன். வியாழன். வெள்ளி. சனி ஆகிய தினங்களில்
10.00 a.m. - 4.00 p.m.

"புவன ஜோதி"
நடராசா வீதி,
வல்வெட்டித்துறை.
வடமராட்சி, தென்மராட்சி மக்களுக்காக
ஞாயிறு, திங்கள், செவ்வாய்
ஆகிய தினங்களில் 7.00 a.m. - 2.00 p.m

**MASTER NUMEROLOGIST**
**SREE MASTER**
(35914)(34-29-12-17) **CKKSR RAJESWARAN.**

# வட்டக்கச்சியில் இன்று தொடக்கம்
# மாபெரும் விவசாயக் கண்காட்சி

வட்டக்கச்சி, செப்.1

தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், விவசாயத்திணைக்களம், கால்நடை உற பத்தித் திணைக்களம், யாழ்.பல்கலைக் கழக விவசாயபீடம் ஆகியன இணைந்து இன்று தொடக்கம் எதிர்வரும் 4ஆம் திகதி வரை மாபெரும் விவசாயக் கண்காட்சி ஒன்றை நடத்துகின்றன.

வட்டக்கச்சியிலுள்ள ஒருங்கிணைந்த மாதிரிப்பண்ணையில் நடைபெறுகின்ற இந்தக் கண்காட்சியில் செய்கை முறைகள், ஒளிப்பட புகைப்படக் காட்சிகள், திட்டவிளக்க உரைகள என்பவற்றின் மூலம் விவசாயிகளின் சந்தேகங்கள் தீர்த்துவைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஆர்வமுள்ள விவசாயிகள் தம்மிடம் உள்ள சிறந்த விவசாய உற்பத்திகள், கால்நடை உற்பத்திகளை இதில் காட்சிப்படுத்த முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாகத் தமிழீழபொருண்மிய மேமபாட்டு நிறுவனத்தின் யாழ்.மாவட்டப் பிரிவினர் வெளியிட்டிருக்கும் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

01.09.2004 முதல் 04.09.2004 ஆம் திகதி வரை ஒருங்கிணைந்த மாதிரிப்பண்ணை வட்டக்கச்சியில் மாபெரும் விவசாயக் கண்காட்சி ஒன்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், விவசாயத் திணைக்களம், கால்நடை உற்பத்தித் திணைக்களம், யாழ்.பல்கலைக் கழக விவசாயபீடம் என்பவற்றின் அனுசரணையுடன் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

போரின் பிடியில் அகப்பட்டு மீளப்புத்துயிர் பெற்றுவரும் எம்மண்ணின், மக்களின் விவசாய அறிவினைப் பெருக்குவதற்கும், புதிய தொழில நுட்ப அறிவினைப் பெறுவதற்கும், விருத்தி செய்வதற்குமாக இக்கண்காட்சி நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சி அனைத்து சமூக மட்டங்களுக்குமாகக் குறிப்பாகப் பாடசாலை மாணவா களுக்கும் விவசாயப் பெருமக்களிற்கும் மிகுந்த பயனுள்ளதாக அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கண்காட்சியில் பூரண தகவல்களை அளிப்பதற்கு ஆக்கங்கள், செய்கை முறையிலும், ஒளிப்பட புகைப்பட காட்சிகளாயும், திட்டவிளக்கவுரைகளாயும் தயாராக உள்ளன.

இக்கண்காட்சி மக்கள் மத்தியிலே பூமியின் பசுமை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி எம்மால் முடிந்தளவிற்கு நமது சமூகத்தை பசுமை நிறைந்த ஆரோக்கியப் பாதையில் இட்டுச்செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்துடன், எமது பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் விவசாய வளத்தினுடைய பல்வேறு உச்சப் பயன்பாட்டையும் இவ்வளங்களைப் பேணிப் பாதுகாப்பது பற்றியும் பூரண விளக்கங்களும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.

இந்த நோக்கங்களை நிறைவேற்று முகமாக பயிர்வளர்ப்பு, விலங்குவளர்ப்பு, அவற்றின் முகாமைத்துவம், நோய்க் கட்டுப்பாடு, விதைத் தெரிவு, விதை உற்பத்தி போன்ற பல அரிய பகுதிகள் காட்சிக்கு ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.

விவசாயப் பெருமக்களிற்கு உதவும் பொருட்டு ஆர்வம் உள்ளவர்கள், சிறந்த உற்பத்தியாளர்கள், புதிய தொழில்நுட்பக் கருவி உற்பத்தியாளர்கள், தங்களிடமுள்ள விவசாய உற்பத்திகள், கால்நடை உற்பத்திகள் போன்றவற்றைக் காட்சிக்கு உட்படுத்தும் அதேவேளை, விற்பனைக்கும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

எனவே, இந்தக் கண்காட்சியில் பங்கு பற்றுவதன் மூலம் மக்களே உங்கள் விவசாய வாழ்வில் ஏற்படும் சந்தேகங்கள், பிரச்சினைகள தொடர்பான பூரண அறிவைப் பெற்றுக்கொளளுங்கள் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (4)

## மாற்றுப் பயிர் அறுவடை விழா

ஒட்டுசுட்டான்,செப்.1

முல்லை.மாவட்ட விவசாயத் திணைக்களமும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் இணைந்து தச்சடம்பன் சிறுகுளத்தின் கீழ் செய்கை பண்ணப்பட்ட மாற்றுப்பயிர் செய்கையின் அறுவடை விழா கடந்த 21 ஆம் திகதி சனிக்கிழமை தச்சடம்பன் கிராமத்தில் நடைபெற்றது.

ஒட்டுசுட்டான் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் தயா தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் மங்கள விளக்கினை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் திருமதி ந.செல்வராசா, பிரதி விவசாயப் பணிப்பாளர் கோகுலதாஸன், முத்துஐயன்கட்டு நீர்ப்பாசன பொறியியலாளர் சண்முகராசா, ஒலுமடு கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் இராசலட்சுமி, முல்லை மாவட்ட விவசாயப் பணிப்பாளர் ஆகியோர் ஏற்றிவைததனர்.

தமிழீழத் தேசியக் கொடியினை முல்லை மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் பூங்குன்றன் ஏற்றி வைத்தார். தொடர்ந்து அகவணக்கத்துடன் முல்லை மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் கோகுலதாஸன் தலைமையில் ஏனைய நிகழ்வுகள் ஆரம்பமாகின.

வரவேற்புரையினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன ஒட்டுசுட்டான் இணைப்பாளர் தயா ஆற்றியதைத் தொடர்ந்து கருத்துரைகளை வடக்கு - கிழக்கு பிரதி விவசாயப் பணிப்பாளர் சுப்பிரமணியம், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், ஒலுமடு விவசாயப் போதனாசிரியர், ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் திருமதி ந.செல்வராசா, ஒட்டுசுட்டான் நீர்ப்பாசன பொறியியலாளர் சண்முகராசா, கமநல உதவி ஆணையாளர் தர்மலிங்கம், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன், முல்லை மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஆகியோர் ஆற்றினர்.

மாற்றுப் பயிர்ச்செய்கை அறுவடை நிகழ்வினை அரச அதிபர் இமெல்டா சுகுமாருடன் ஏனைய உத்தியோகத்தர்களும் ஆரம்பித்து வைத்தனர். (4-341)

## வளத்தட்டுப்பாடுகளுடன் இயங்கும் கண்டாவளைப் பிரதேச செயலகம்

பரந்தன், செப்.1

கண்டாவளை பிரதேச செயலகத்தில் பெரிய அளவிலான வளத் தட்டுப்பாடு நிலவுவதாக பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பிரதேச செயலகத்திற்கென சொந்தக் காணியோ நிரந்தரக் கட்டடமோ இல்லாமலேயே இதுவரை இயங்கி வருகின்றது.

அலுவலகத்துக்கு வேண்டிய தளபாட வசதிகளும் குறைவாக உள்ளதோடு நாற்காலிகள் உடைந்த நிலையிலேயே உள்ளன.

மாநாட்டு மண்டபமும் ஓலைக் கொட்டகையாக இருக்கின்றது.

இதனால், அங்கு பணியாற்றும் உத்தியோகத்தர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இங்குள்ள வசதியீனங்களை நீக்குவதற்கு ஆவண செய்யுமாறு சம்பந்தப்பட்டோரிடம் கேட்டுக்கொண்ட போதிலும் பலனேதும் கிட்டவில்லை என்று கூறப்பட்டது. (4-341-202)

## வன்னிப் பகுதியில் கடும் வரட்சி

தற்போது நிலவிவரும் கடும் வெப்பத்தினால ஏற்பட்டுள்ள வரட்சி காரணமாக வன்னிப் பகுதிகளில் உள்ள கிணறுகளின் நீர்மட்டம் குறைந்து வருகின்றது. பயன்தரும் மரங்களும் அழிவடையக்கூடிய அபாயநிலை தோன்றியுள்ளது.

அத்துடன், குறிப்பிட்ட சில பகுதிகளிலே இருக்கும் ஆறுகள் குளங்களும் வற்றிக்கொண்டு செல்கின்றன. இதனால், கால்நடைகள் நீரினைத் தேடி அலைந்து திரியும் நிலைமை ஏற்பட்டுள்ளது. (9-341)

## விசுவமடுப் பிரதேச எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வு

விசுவமடு பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வு கடந்த சனிக்கிழமை 28ஆம் திகதி றெட்பானாவில் நடைபெற்றுள்ளது.

நிகழ்வில் பொதுச்சுடரினை கிராம சேவையாளர்களான பொ.சுந்தர்லிங்கம், ஜெயதாஸ் ஆகியோர் ஏற்றிவைக்க, தேசியக்கொடியினை விசுவமடு பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளரும் லெப். கௌதமனின் திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரை அவரது சகோதரி திருமதி அஞ்சனன் ஏற்றி மலர்மாலை அணிவித்தார்.

தொடர்ந்து உரைகளினை கிராம சேவையாளர் மாசிலாமணி, விசுவமடு பிரதேச பொருண்மிய இணைப்பாளர் கார்த்திக் ஆகியோர் வழங்கினர்.

சிறப்புரையினை கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஆதவனும் நிகழ்த்தினார். இந்த நிகழ்விற்குப் பெருமளவானோர் கலந்துகொண்டனர். (4-402)




## 'யுனிசெவ்'வின் எதிர்காலத் திட்டங்கள் நீண்டகால நோக்கிலேயே அமையும்

### நடைமுறைப்படுத்தல் அதிகாரி தெரிவிப்பு

கிளிநொச்சி,செப்.1

தற்போதைய காலத்தில் மக்கள் வளர்ச்சி நோக்கிய பாதையில் செல்வதனால் யுனிசெவ்வின் எதிர்காலத் திட்டம் முழுவதும் நீண்டகால வளர்ச்சி நோக்கிய பாரிய திட்டங்களாகவே இருக்கும்.

- இவ்வாறு தெரிவித்தார் யுனிசெவ்வின் நடைமுறைப்படுத்தல் அதிகாரி வெனி புரூல். கடந்த வாரம் கிளிநொச்சி செயலக மாநாட்டு மண்டபத்தில் யுனிசெவ் நிறுவனத்தினரின் திட்ட ஆய்வுக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

அந்த நிகழ்வினைத் தலைமைதாங்கி அங்கு உரையாற்றும்போதே வெனி புரூல் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கல்வி, சுகாதார, சிறுவர் உரிமைகள், நீர்ப்பாசனம் போன்றவற்றின் திணைககள அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

யுனிசெவ் நிறுவனத்தினால் 2002 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டுவரை கிளிநொச்சியில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைத் திட்டம் குறித்து கலந்துரையாடலில் ஆராயப்பட்டது. (9-203)

## பாடசாலை மாணவருக்கு மருத்துவப் பரிசோதனை

### கிளிநொச்சி மருத்துவர் சங்கம் நடத்துகிறது

வட்டககச்சி,செப்.1

கிளிநொச்சி மருத்துவர் சங்கத்தினரால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள பாடசாலை மாணவர்களுக்கான மருத்துவப் பரிசோதனைத் திட்டத்தின் முதல் கட்டமாக கிளிநொச்சி மத்திய கல்லூரி, புனித திரேசா மகளிர் கல்லூரி, கனகபுரம் ம.வி. ஆகிய பாடசாலைகளில் கடந்த 6ஆம் திகதி மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இப்பரிசோதனையில் தரம் ஒன்று தொடக்கம் தரம் 5 வரையான அனைத்து மாணவர்களும் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டனர்.

ஆரோக்கியமான சிறுவர்களைக் கல்வியல் இலகுவாக முன்னேற்ற முடியும் என்பதன் அடிப்படையிலேயே இப்பரிசோதனைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாகவும் - தொடர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தின் அனைத்துப் பாடசாலைகளுக்கும் இத்திட்டம் விஸ்தரிக்கப்படும் எனவும் கிளிநொச்சி மருத்துவர் சங்கத்தினர் தெரிவித்தனர். (4-405)

## ஸ்கந்தபுரம் முருகன் பெருந்திருவிழா

ஸ்கந்தபுரம்,செப்.1

ஸ்கந்தபுரம் ஸ்ரீமுருகன் ஆலயப் பெருந திருவிழா கடந்த 20 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றது.

28 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தம், பொன்னூஞ்சல், கொடியிறக்கம் என்பனவும் இடம்பெற்றன.

இத்தினத்தில் அக்கராயன் பல நோக்குக் கூ.சங்கத்தினர் அன்னதானம் வழங்கினர். (4-381)

## மூன்று பிரிவுகளிலும் வட்டக்கச்சி ம.வி. முதலிடம்

வட்டக்கச்சி,செப்.1

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் 'யுனிசெவ்' நிறுவனமும் இணைந்து நடத்திய சிறுவர் நலத்திட்டம் தொடர்பான நாடகப் போட்டியின் மூன்று பிரிவுகளிலும் வட்டக்கச்சி மகாவித்தியாலயம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது. (4-405)

## கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரிப்பு

பரந்தன்,செப்.1

பளை, பச்சிலைப்பள்ளி பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்து வருகின்றது. இப்பிரதேசத்தில் விசர் நாய்க்கடிக்கு உள்ளாகுபவர்களுக்கு நீர் வெறுப்பு நோய்க்கான ஏ.ஆர்.வி. தடுப்பூசி மருந்தும் பளை அரசினர் வைத்தியசாலையில் இல்லை என்று இப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (4-352)

## தையல் பயிற்சிநெறியின் ஆரம்ப நிகழ்வு

ஒட்டுசுட்டான்,செப்.1

கற்சிலைமடு இளைஞர்கழகம் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் மன்ற உத்தியோகத்தரின் அனுசரணையுடன் ஒழுங்கமைக்கப்பட்ட தையல்பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வு கடந்த 14 ஆம் திகதி கற்சிலைமடு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெற்றது.

முல்லை மாவட்ட இளைஞர் மன்ற உத்தியோகத்தர் சி.சண்முகவடிவேல் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் திருமதி க.செல்வராசா, முல்லை மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் வேளினி, ஒட்டுசுட்டான் சமாதான நீதிவான் சிவஞானலிங்கம், கனகரத்தினபுரம் கிராம அலுவலர் மு.சிவனேசன், முத்துவிநாயகபுரம் கிராம அலுவலர் சோமசுந்தரம், கற்சிலைமடு கிராமப் பொறுப்பாளர் கதிரவன் மற்றும் தையல் ஆசிரியை மனோகரன் சுபாஜினி உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

தையல் பயிற்சியில் சுமார் 40 மாணவர்கள் பங்குபற்றுகின்றனர். (4-341-202)

## 'எயிட்ஸ்' நோய் குறித்த கருத்தரங்குகள்

வட்டக்கச்சி,செப்.1

கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் கடந்த 21 ஆம் திகதி காலை 10 மணிக்கு எயிட்ஸ் தொடர்பாக ஊடகவியலாளர்களுககான கருத்தரங்கு பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி தலைமையில் ஆரம்பமாகியது.

இக்கருத்தரங்கில் வரவேற்புரையினை பணிமனையைச் சேர்ந்த நமசிவாயம் வழங்கினார். தொடர்ந்து தலைமையுரை இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து வைத்திய கலாநிதி ந.சத்தியமூர்த்தி எயிட்ஸ் தொடர்பான அறிமுக விளக்கத்தினையும் அது பரவும் வழிமுறைகளையும் விளக்கினார்.

தொடர்ந்து வைத்திய கலாநிதி சுயந்தன் எயிட்ஸின் வரலாறு பற்றியும் அண்மைக் காலப் போக்குப் பற்றியும் விளக்கமளித்தார். அதனைத் தொடர்ந்து வைத்திய கலாநிதி பிறைற்றன் எயிட்ஸுக்கான சிகிச்சையும் பராமரிப்புப் பற்றியும் விளக்கினார்.

இக்கருத்தரங்கில் தமிழர் தாயகப் பகுதியைச் சேர்ந்த பெருமளவான ஊடகவியலாளர்கள் பங்குகொண்டனர்.

இதுதொடர்பான கருத்தரங்கு ஏற்கனவே அரச ஊழியர்களுக்கும் வைத்தியர்கள், தாதியர்கள், மருந்தாளர்களுக்கும் நடத்தப்பட்டமையும் தொடர்ந்து வைத்தியசாலையினதும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஊழியர்களுக்கும் நடத்தப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். (4-405)

## கிடுகுகள் அன்பளிப்பு

வட்டக்கச்சி,செப்.1

கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவனம் வருமானம் குறைந்த இராமநாதபுரம் மாவடி கிராம மக்களுக்கு அவர்களது வீடுகளை வேய்வதற்காக கிடுகுகளை அன்பளிப்புச் செய்துவருகின்றது.

இதன் கீழ் 40குடும்பங்களுக்கு தலா 200 - 250 வரையான மட்டைக் கிடுகுகள் அவர்களது வீடுகளின் அளவுகளுக்கு ஏற்ப கடந்த 19ஆம் திகதி தொடக்கம் வழங்கப்பட்டு வருகின்றது. (4-405)

# கடவத்தையில் மூவர் கோரமாகக் கொலை!

கொழும்பு கடவத்தையில் அருகருகில் உள்ள இரண்டு இடங்களில் இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவர் உட்பட மூவர் கோரமாக வெட்டிக்கொலை செய்யப்பட்டனர்.

ஏழு பேரடங்கிய - பாதாள உலகக் கோஷ்டி ஒன்றே - முகமூடி அணிந்து வந்து - சுமார் ஒன்றரை மணிநேர வித்தியாசத்தில் இவ்வாறு கோரமாகத் தமது கைவரிசையைக் காட்டிவிட்டுத் தப்பிச் சென்றிருக்கின்றது.

கடவத்தை, இஹலபியனவில பகுதியில் உள்ள வீடொன்றினுள் கடந்த ஞாயிறு இரவு 10 மணியளவில் புகுந்த இக்கோஷ்டி, எல்.பி.அல்விஸ் சிங்கோ (வயது 60) என்பவரையும் அவரது மருமகனான அனோமா நொரிஸ் (வயது30) என்பவரையும் மேற்படி பெண்ணின் நான்கு வயது, ஒன்பது வயதுப் பிள்ளைகளும் மற்றும் உறவினர்களும் பார்த்திருக்க மோசமாக வெட்டிக் கொலை செய்துவிட்டுத் தப்பிச் சென்றது.

சுமார் ஒன்றரை மணி நேரம் கழித்து அரை மைல் தொலைவில் உள்ள மாமரமண்டிய என்ற இடத்தில் இதே போன்ற முகமூடி அணிந்த குழுவால் ரொஷான் சிறீமாந்த (வயது 33) என்பவர் வெட்டிக் கொல்லப்பட்டார்.

இரண்டு இடங்களிலும் ஒரே கொலைஞர் குழுவே கைவிசையைக் காட்டியிருப்பதாகக் கருதப்படுகின்றது.

படுகொலை செய்யப்பட்ட பெண்ணின் கணவரும் பாதாள உலகக் கோஷ்டியைச் சேர்ந்தவர் என்றும் அவரும் சிலவருடங்களுக்கு முன்னர் வெட்டிக் கொலை செய்யப்பட்டார் என்றும் கூறப்பட்டது.

## ஏழாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 10 - 06 - 1934



மறைவு 20 - 08 - 1997

அமரர்

**சின்னத்தம்பி சின்னையா** (இராசையா)

(இளைப்பாறிய தபாலதிபர், Radio officer Foreign Ship)

திதி: துதியை

*அன்பால் எம்மை அணைத்து அறிவால் எம்மை உயர்த்தி*
*பண்பால் பலர் போற்ற பாரினில் வந்திட்ட எம் தெய்வமே!*
*ஆண்டுகள் ஏழு ஓடி மறைந்தாலும் ஆறாதப்பா உங்கள் பிரிவு*
*என்றும் உங்கள் முகம் நெஞ்சினிலே நின்று நிலைத்திருக்கும்.*

மீசாலை வடக்கு,
கொடிகாமம்,
வேம்பிராய். (35862)(39-15-19-26)

- குடும்பத்தினர்.

## விபத்தில் காயம்!

வரணிப் பகுதியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற சைக்கிள் - மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் காயமடைந்தார்.

மீசாலை வடக்கைச் சேர்ந்த செல்லத்துரை ரமேஸ்குமார் (வயது 28) என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பததிரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மூன்று பேருடன் வந்த மோட்டார் சைக்கிள் இருவர் வந்த சைக்கிளுடன் மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது. (117)

## பாலம் புனரமைப்பு தொடர்பாக ஆலோசனை

யாழ்ப்பாணம்,செப்.1

யாழ்.குடாநாட்டிலுள்ள பாலங்களைப் புனரமைப்புச் செய்வது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் யாழ்.செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

யாழ்.செயலகத் திட்டப் பணிப்பாளர் பு. சுந்தரம்பிள்ளை தலைமையில் இடம்பெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில் யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன், பலாலி படைத்தளத்தைச் சேர்ந்த பிரிகேடியர் ரணவீர, தென்மராட்சிப் பிரதேச இராணுவத் தளபதி பிரிகேடியர் ரத்நாயக்கா, யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புத் தளபதி பிரிகேடியர் வீரதுங்க மற்றும் வீதி அதிகாரசபை அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

வல்லை, நாவற்குழி, கைதடி ஆகிய இடங்களிலுள்ள பாலங்களைப் புனரமைப்புச் செய்வதற்கு அவற்றில் அமைந்துள்ள இராணுவக் காவலரண்களைப் பின்நகர்த்துவது தொடர்பாக இக்கூட்டத்தில் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-5)

## நீங்காத் துயரில் 31ஆம் நாள்

பிறப்பு 02 - 01 - 1940



இறப்பு 02 - 08 - 2004

திருமதி

**உபகார றீற்ரா கொலின்ஸ் ராணி**

அன்னையைப் போலொரு செல்வம் இல்லை
காலங்கள் மறைந்தாலும் ~ அம்மா
கவலைகள் மறக்கவில்லை!
பாசத்தால் அம்மா நீங்கள்
என்றும் எங்களோடுதான் ~ அம்மா
நித்திய பேரின்ப வாழ்வைப் பெற்று விண்ணக
மகிமையில் புனிதர்களின் தோழமையில்
உம்மோடு வாழ அனுக்கிரகஞ் செய்தருளும்
ஆமென்.

**அன்னாரின் ஆன்மா இளைப்பாற்றிக்காக இன்று (01.09.2004) புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு சாந்த லூசியா பேராலயம், கொட்டாஞ்சேனையில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.**

திரு. வில்லியம் கொலின்ஸ்,
B - 4,F12,
புளூம்மென்டோல் தொடர்மாடி,
கொட்டாஞ்சேனை,
கொழும்பு - 13,
T.P. 011-2458411 (35965) (43-26-19-15)

பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள்,
சகோதரி, மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

10ஆவது ஆண்டில்
முல்லை நகரில்.....

01-09-2004 முதல்

உங்கள் நம்பிக்கையின் சின்னம்

வைப்பு வசதிகள்

கடன் வசதிகள்

தமிழீழ வைப்பகம்
BANK OF TAMILEELAM

தேட்ட வைப்புக்கள்

தங்க அடைவுக் கடன் சேவை

தமிழீழ வைப்பகம்

மேலும் பல வைப்பகப் பணிகள்

நிலையான வைப்புக்கள்

ஏனைய கடன் வசதிகள்

வாருங்கள் உங்கள் வளமான வாழ்வுக்கு வழிகாட்டுகின்றோம்.

தமிழீழ வைப்பகம் தமிழரின் காப்பகம்

(சி-37350) (26-15-19)

# இடர் நிவாரணக் குழுவை மீளச்செயற்படுத்த வேண்டும்

## வலியுறுத்துகிறார் ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு,செப்.1

நாட்டில் அவ்வப்போது ஏற்படும் இயற்கை அனர்த்தங்கள் தொடர்பாகப் பரிசீலனை செய்து நிவாரணங்களை வழங்குவதற்கு ஏதுவாக இடர் நிவாரணக் குழு மீண்டும் செயற்படுத்தப்பட வேண்டும்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் ஆட்சியின்போது உருவாக்கப்பட்ட இடர் நிவாரணக் குழுவை ஜனாதிபதி கலைத்துவிட்டார். இதனால் இப்பொழுது பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணங்களை வழங்க முடியாமல் திக்குமுக்காடுகின்றது அரசாங்கம்.

- இவ்வாறு குற்றஞ்சாட்டுகின்றார் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

வரட்சியால் பாதிக்கப்பட்ட தந்திரிமலைப் பிரதேசங்களுக்கு நேற்றுமுன்தினம் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் பாதிக்கப்பட்டவர்களை நேரடியாகச் சந்தித்து ஆறுதல் கூறினார்.

அதன் பின் செய்தியாளர்களிடம் நிலைமைகள் தொடர்பாக விவரித்தார். இலங்கையில் வரட்சியும், வெள்ளமும், மண்சரிவுகளும் எப்பொழுது ஏற்படும் என்பதை எவராலும் கண்டறிய முடியாது.

எனவே, திடீரென இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும்போது உடனடியாக நிவாரணங்களை வழங்குவதற்காகவே எமது அரசாங்கம் இடர் நிவாரணக்குழு ஒன்றை நிரந்தரமாகவே உருவாக்கி எந்த நேரத்திலும் தயார்நிலையில் வைத்திருந்தது.

வெள்ளம், வரட்சி, மண்சரிவு எனத் தனியான பிரிவுகளை அமைத்து செயற்பட்டோம். இதனால், பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி நிவாரணங்களை வழங்க முடிந்தது. ஆனால், இன்றைய அரசு அந்தக்குழுவை செயலிழக்கச் செய்துவிட்டு இப்பொழுது தடுமாறுகின்றது. எனவே, அரசாங்கம் உடனடியாக நிரந்தர இடர் நிவாரணக்குழு ஒன்றை உருவாக்கிச் செயற்படவேண்டும்.

நாட்டில் ஒரு பக்கம் வரட்சி, மறு பக்கம் விலைவாசி உயர்வு, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு என்பன உள்நாட்டில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

அதேவேளை, தடைப்பட்டிருக்கும் சமாதானப் பேச்சுக்கள் சர்வதேச மட்டத்தில் நாட்டின் நம்பகத்தன்மையை இழக்கச் செய்துள்ளன.

இவற்றிற்கெல்லாம் பரிகாரம் காண வேண்டுமானால் ஜனாதிபதி யதார்த்தத்தைப்புரிந்து விட்டுக்கொடுப்புடன் செயற்படவேண்டும் - இப்படி அவர் செய்தியாளர்களிடம் கூறினார். (க)

# சட்டவிரோத ஆயுதங்கள் கைப்பற்ற நடவடிக்கை

கொழும்பு,செப்.1

நாட்டின் சகல பகுதிகளிலுமுள்ள சட்டவிரோத ஆயுதங்களை உடனடியாகக் கைப்பற்றுமாறு பதில் பாதுகாப்பு அமைச்சர் ரட்ண சிறி விக்கிரமநாயக்க உத்தரவிட்டுள்ளார்.

தற்சமயம் 35ஆயிரம் சட்டவிரோத சுடுகலன்களும், ஆயுதங்களும் நாட்டில் உள்ளன எனத் தெரியவந்துள்ளது. இவ்வாறு சட்டவிரோத ஆயுதங்கள் இருப்பதே நாட்டில் தற்போது இடம்பெற்றுவரும் படுகொலைகளுக்குக் காரணம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அண்மைக்காலத்தில் சட்டவிரோத ஆயுதங்களை ஒப்படைக்குமாறு அரசு விடுத்த கோரிக்கை பெருமளவில் பயனளிக்காத அதேவேளை, கொலைகள் அதிகரித்து வருகின்றன எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது. (க)

# தமிழக மிருதங்கக் கலைஞர்களுக்கு வெள்ளியன்று கௌரவிப்பு வைபவம்

வலி.தெற்கு.செப்.1

தமிழ்நாட்டிலிருந்து யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள மிருதங்க வித்துவான் ஏ.எஸ்.இராமநாதனையும், அவரது மகனான சங்கீதபூஷணம் ஆர்.யோகராஜனையும் கௌரவிக்கும் நிகழ்ச்சி எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலையில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழக இசைத்துறை மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்வினை 'மிருதங்க விரிவுரையாளர்' எஸ்.மகேந்திரன் ஒழுங்குபடுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக நுண்கலைத் துறையில் நீண்டகாலம் மிருதங்க வித்துவானாகக் கடமையாற்றிய ஏ.எஸ்.இராமநாதன், மிருதங்கக் கலைக்குச் சேவையாற்றி சிறந்த மிருதங்கக் கலைஞர்களை உருவாக்கியவர்.

கடந்த இருபது வருடங்களாக தாயகம் சென்று வாழ்ந்த ஏ.எஸ்.ராமநாதனும் அவரது மகனான சங்கீத பூஷணம் ஆர்.யோகராஜனும் தற்போது யாழ்ப்பாணம் வருகைதந்துள்ளனர். (ஐ-152)

# மலையகத் தமிழர்களை தம்வசப்படுத்தி வளைத்துப் போட முயல்கின்றது ஜே.வி.பி.

வடக்கு - கிழக்கு தமிழர்களால் ஓரங்கட்டப்பட்ட ஜே.வி.பி., மலையகத் தமிழரைத் தம்வசப்படுத்தி இனவாதச் சேறைக் கழுவிக் கொள்ள எத்தனித்துள்ளது.

மலையகத் தோட்டப்புறங்களில் பரவலான ரீதியில் பிரசார நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ள ஜே.வி.பி., தோட்டத் தொழிலாளர்களுக்கு நவம்பர் மாதம் அரசு சமர்ப்பிக்கவிருக்கும் வரவு - செலவுத் திட்டத்தில் சம்பள உயர்வு பெற்றுத் தருவதாக உறுதியளித்துவருகின்றது.

ஹட்டன், மஸ்கெலியா, தலவாக்கலை, நுவரெலியா மற்றும் பதுளை போன்ற பகுதிகளில் தீவிர பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் ஜே.வி.பியின் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரசேகரனின் தலைமையிலான அக்கட்சியின் முக்கிய உறுப்பினர்கள், சம்பள உயர்வு மட்டுமன்றி தோட்டத் தொழிலாளர்களுக்கு பல்வேறு சலுகைகளையும் பெற்றுத் தருவார்கள் எனவும் உறுதியளித்து வருகின்றனர்.

ஜே.வி.பியினரின் பிரசாரத்துக்கு அமைய தோட்டத்தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு கிட்டுமானால் இனிவரும் தேர்தல்களின் போது மலையகத்தில் அக்கட்சிக்கு கணிசமான வாக்குகள் கிடைக்கக்கூடும். மலையகத் தமிழர்களால் புறக்கணிக்கப்பட்ட ஜே.வி.பி., அடுத்து வரும் தேர்தல்களை இலக்குவைத்தே அங்கு தனது பிரசார நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளது என தோட்டத் தொழிற்சங்கங்களின் தலைவர்கள் சிலர் தெரிவித்தனர்.

நடந்துமுடிந்த தேர்தல்களின்போது மலையகப் பகுதிகளில் ஜே.வி.பியினருக்கு தமிழர்களின் வாக்குகள் கிடைக்கவில்லை. தொடர்ந்தும் இப்பிரதேசத்தில் தமிழர்களின் ஆதரவு குறைந்து வருவதால் அதை நிவர்த்தி செய்யும் கைங்கரியத்தில் அக்கட்சி இறங்கியுள்ளது.

நவம்பர் மாதம் அரசு சமர்ப்பிக்கவிருக்கும் வரவு - செலவுத் திட்டத்தில் மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படவேண்டும் என ஜே.வி.பியினரால் நிதியமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ள வரவு - செலவுத் திட்டம் தொடர்பான ஆலோசனைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது என நம்பத் தகுந்த வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.(க)

# போலி டொலர் நோட்டுக்கள் தயாரித்த மாணவன் கைது!

பெருந்தொகையான போலி அமெரிக்க டொலர்களை தாயரித்து அதை மாற்ற முற்பட்ட 16 வயதுப் பாடசாலை மாணவன் ஒருவனைக் கண்டி குற்றப்புலனாய்வுப் பொலீஸார் கைதுசெய்திருக்கின்றனர்.

அந்த மாணவன் வசமிருந்து பல லட்சம் ரூபா பெறுமதியான போலி டொலர் நோட்டுக்களும். அவற்றைத் தயார் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட கணனிகள் மற்றும் உபகரணங்களும் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டன.

கண்டி செயலகத்துக்கு முன்னால் உள்ள ஒரு ஸரூடியோக் கட்டடத்திலேயே இந்தப் போலி டொலர்கள் தயாரிக்கப்பட்டனவாம்.

இந்த மாணவனின் தந்தையார் இராணுவத்தில் கோப்ரலாக இருந்து, பின்னர் இராணுவத்தை விட்டு ஓடியவர். அவருக்கு எதிராக பல வழக்குகளில் நீதிமன்ற பிடியாணை உள்ளது. தந்தையைக் காப்பாற்றவே இவ்வாறு குறுக்கு வழியில் பணம் சம்பாதிக்கத் தாம் முயன்றார் என பல, மில்லியன் ரூபா பெறுமதியான டொலர் நோட்டுக்களைத் தயாரித்த அந்த மாணவன் கூறியிருக்கிறார். (க)

# புலோலியில் கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

வடமராட்சி,செப்.1

புலோலிப் பகுதியில் சுமார் 75 கட்டாக்காலி நாய்கள் அழிக்கப்பட்டன.

பருத்தித்துறை பிரதேச சபையும் புலோலிப் பகுதிக்கான பொதுச் சுகாதாரப் பரிசோதகரும் இணைந்து இதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மந்திகையில் உள்ள அரசினர் ஆதார வைத்தியசாலை, மந்திகை கிராமக் கோட்டடி, புற்றளை ஆகிய இடங்களில் கடந்த இரண்டு தினங்களாக கட்டாக்கலி நாய்களைத் தேடிக் கண்டுபிடித்து அழிக்கப்பட்டன.

கட்டாக்காலி நாய்களைப் பிடிப்பதற்கும் அழிப்பதற்கும் என சாவகச்சேரி நகரசபையைச் சேர்ந்த இரு சுகாதாரத் தொழிலாளர்கள் விசேடமாகக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர். (ஐ-173)

# பொலீஸாருக்கு எதிரான வழக்குகள்: விசாரிக்கும் அதிகாரம் ஆணைக்குழுவுக்கு

பொலீஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராகப் பொதுமக்களிடமிருந்து முன்வைக்கப்படும் முறைப்பாடுகளை விசாரித்துத் தண்டனைகளை வழங்கும் அதிகாரத்தைப் பொலீஸ் ஆணைக் குழுவிடமே வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த வழக்குகளை விசாரணை செய்வது தொடர்பாக விசாரணைக் குழு ஒன்றை பொலீஸ் ஆணைக்குழுவுக்கு நியமனம் செய்வதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தேசியப் பொலீஸ் ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் சிங்களப் பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

பொலீஸாருக்கு எதிராகப் பொதுமக்களிடமிருந்து கிடைக்கும் முறைப்பாடுகள் இதுவரையில் பொலீஸ் ஆணைக்குழுவினால் விசாரணை செய்யப்படவில்லை. அவ்வாறு கிடைக்கும் முறைப்பாடுகள் யாவும் பொலீஸ் ஆணைக்குழு மூலமாகப் பொலீஸ்மா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளதோடு பின்னர் அவை பொலீஸ் திணைக்களத்திலுள்ள சம்பந்தப்பட்ட பிரிவுகள் மூலமாகவே விசாரணை செய்யப்பட்டு வந்துள்ளன.

என்றாலும், அந்த செயன்முறைகள் பின்பற்றப்பட்ட விதத்தில் பெருமளவு முறைப்பாடுகள் காணப்பட்டுள்ள காரணத்தால் பொலீஸாருக்கு எதிராகப் பொதுமக்களிடமிருந்து கிடைக்கும் முறைப்பாடுகளை விசாரணைசெய்யும் முழு அதிகாரத்தையும் தேசியப் பொலீஸ் ஆணைக் குழு தனதாக்கிக் கொண்டுள்ளது.

பொலீஸாருக்கு எதிரான பெரும் எண்ணிக்கையான குற்றச்சாட்டுக்கள் ஏற்கனவே பொலீஸ் ஆணைக்குழுவுக்கு கிடைத்துள்ளன. விரைவில் அந்த வழக்குகளை விசாரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று பொலீஸ் ஆணைக்குழுவின் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இந்த விசாரணைகளை அடுத்து குற்றவாளிகளாகக் காணப்படும் பொலீஸாரை சேவையிலிருந்து நிறுத்துவதற்கு அல்லது பதவி நீக்கம் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (ஐ)

# ஏழாலையில் வாக்காளர் பதிவு

வலி.தெற்கு,செப்.1

வலிகாமம் தெற்கு பிரதேச செயலாளர் பிரிவினுள் அடங்கும் ஏழாலை மத்தி (ஜே.206) கிராம சேவையாளர் பிரிவில் 2004ஆம் ஆண்டுக்கான வாக்காளர்களைப் பதியும் நடவடிக்கைகள் தற்போது நடைபெறுகின்றன.

18 வயதிற்கு மேற்பட்டவர்களும் இதுவரை காலமும் எப்பகுதியிலாவது வாக்காளர்களாகத் தம்மைப் பதிவுசெய்து கொள்ளாதவர்களும் கிராம அலுவலரிடம் சென்று உரிய படிவங்களைப் பெற்றுப் பூர்த்திசெய்து செப்ரெம்பர் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கிராம அலுவலர் சி. பத்மநாதன் தெரிவித்துள்ளார். (ஐ-152)

# ஆகக்குறைந்த பஸ் கட்டணம் மீண்டும் விரைவில் அதிகரிக்கும்

கொழும்பு,செப்.1

தனியார் பஸ்கட்டணங்களின் ஆகக் குறைந்த கட்டணம் ரூபா 3.50 சதம் ஆகும். இன்று முதல் புதிய கட்டணம் நடைமுறைக்கு வருகிறது.

ஆகக்குறைந்த கட்டணமான மூன்று ரூபா ஐம்பது சதம், இரண்டு மாதங்களின்பின் மேலும் கூடும் எனத் தனியார் பஸ் சங்கத் தலைவர் கெமுனு விஜயவர்த்தன நேற்றுத் தெரிவித்தார்.

நான்கு ரூபாவாக பஸ் கட்டணம் அதிகரிக்கும். இதனை இருமாதங்களின் பின் கூட்டுவோம். அரசும் இதில் உடன்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார் தனியார் பஸ் சங்கத் தலைவர்.

எனினும், போக்குவரத்து பதில் அமைச்சர் வசந்த அழகியவண்ண, தனியார் பஸ் சங்கத் தலைவரின் கூற்றை மறுத்தார்.

இதேவேளை, டீசலின் விலை அதிகரிக்க, அதிகரிக்க பஸ்கட்டணத்தையும் கூட்டுவோம் என்றார் கெமுனு விஜயவர்த்தன.

டீசலின் விலை அதிகரித்தால், இரண்டு மாதங்கள் வரை நாம் காத்திருக்கமாட்டோம். உடனே பஸ் கட்டணத்தை அதிகரித்து விடுவோம். இதற்கு எமக்கு அதிகாரமுண்டு என்றும் தனியார் பஸ் சங்கத் தலைவர் கெமுனு தெரிவித்தார். (க)

# 37 தற்கொலைப் போராளிகளுக்கு போலி அடையாள அட்டைகளாம்!

கொழும்பு,செப்.1

கடந்த காலங்களில் ஆள்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் மூலம் விடுதலைப் புலிகள் அமைப்பின் 37 தற்கொலைப் படையினருக்கும் ஒரு தொகைப் பாதாள உலகத் தலைவர்களுக்கும் சட்டத்துக்கு முரணான வகையில் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன என்று இரகசியப் பொலீஸாரின் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.


திணைக்களத்திலுள்ள அதியுயர் அதிகாரி ஒருவரால் போலி அடையாள அட்டைகள் தொடர்பான சகல ஆவணங்களும் அழிக்கப்பட்டிருப்பதும் தெரியவந்துள்ளது.

இவ்வாறான போலி அடையாள அட்டைகளை வழங்குவதற்காக கொழும்பு பான்ஸ் பிளேஸில் புறம்பான அலுவலகம் ஒன்றும் இயங்கி வந்துள்ளது என்று சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கின்றது.

போலி அடையாள அட்டைகளைத் தயாரிப்பதில் நேரடிப் பங்களிப்புச் செய்துள்ள மேலதிகத் தொழிலாளி ஒருவரும் அலுவலக உதவியாளர் ஒருவரும் தலைமறைவாகியுள்ளனர்.


இந்த அடையாள அட்டை மோசடி தொடர்பாக மேற்படி திணைக்களத்தில் பணிபுரியும் உத்தியோகத்தர்களை இரகசியப் பொலீஸார் விசாரித்துள்ளனர். அவர்களுள் பல முக்கிய தகவல்களை வழங்கியுள்ள பெண் எழுதுவினைஞர் ஒருவருக்குக் கொலைப் பயமுறுத்தல்களும் விடுக்கப்பட்டு வருகின்றன - என்று கூறப்படுகிறது. (ஐ)

# முதலாம் ஆண்டு நிறைவில்



பலரது நன்மதிப்பைப் பெற்ற....

# Power Gym



Body Care & Fitness Centre

Power Gym ஆரம்பித்து முதலாவது ஆண்டு நிறைவில் காலடி எடுத்து வைத்திருக்கும் இவ்வேளையில்

இதுவரை காலமும் எமது நிறுவனத்தில் அங்கத்தவராக இருந்து நிறுவனத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்




01.09.2004 ல் இருந்து 01.10.2004 வரை இணைபவர்களுக்கு விசேட கட்டணச்சலுகையாக அங்கத்துவ கட்டணத்தில் **50%** கழிவு வழங்கப்படும்



பெண்களுக்கு பிரத்தியேக நேரம்.
பிரத்தியேக பெண் பயிற்றுவிப்பாளர்கள்





நவீன உடற்பயிற்சிக் கருவிகளுடன்
கூடிய சிறந்த உடற்பயிற்சி அரங்கம்
பிரபல உடற்பயிற்றுவிப்-
பாளர்களின் ஆலோசனைகள்



உங்கள் உடல் பருமனை குறைப்பதற்கும், கட்டுடல் மேனியுடன் வலம் வருவதற்கும்
நீங்கள் அங்கத்தவராக வேண்டியது



**Power Gym**
Body Care & Fitness Centre
*230/1, Navalar Road, Jaffna.*
*T.P.No: 0777252098*





ஓ
சிவமயம்

# இரண்டாவது சிரார்த்தம்

## தெய்வர் கந்தையா செல்வராசா

(ஆசிரியர்)



| தோற்றம் | திருநிழல் |
|---|---|
| 11-06-1936 | 25-08-2002 |

ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், ஏழாலை மேற்கு நாக்கியம்புலத்தை வாழ்விடமாகவும் கொண்ட

**தெய்வர் கந்தையா செல்வராசா** (ஆசிரியர்)

**திதி: ஆவணி தேய்பிறை திருதியை**

- அன்புக்கும் அறத்திற்கும் பண்பிற்கும் பயனுக்கும் இலக்கணமாக வாழ்ந்த, எங்கள் தெய்வப்பிறவி அப்பாவே!
- "அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை, அஃதும் பிறன் பழிப்பதில்லாயின் நன்று" என்று சொன்னாரே வள்ளுவர்!
- ஆம்! "இல்லறம் துறவறம் என்ற இருவகை அறத்தினும், அறன் இழுக்கா இல்வாழ்க்கை - அறநெறி பிழையாதாற்றின்" என மதுரைக் காஞ்சியும்,
- "இல்லற மன்று நல்லறம் மன்று" என்று கொன்றை வேந்தனும்,
- "இல்லறம் என்பது கற்புடை மனைவியோடு இருந்து செய்யும் அறம்" என சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லாறும் கூறியவற்றைக் கற்றுக் கேட்டீர்களே!
- கற்றபடி ஒழுகிப் பல அறப்பணிகளை ஆற்றினீர்களே! 25.08.2002இல் புண்ணிய உலகம் புகுந்துவிட்டீர்களே!
- தங்களால் விட்ட தொட்ட அறப்பணிகள் எங்களாலும், எங்கள் வருங்கால எச்சங்களாலும் செய்து வரப்படும் என்பதை எங்கள் குல தெய்வமாகிய திருவாலங்காட்டுச் சித்திவிநாயகர் அடியில் சாந்நித்தியம் பெற்றிருக்கும் தங்கள் ஆத்மாவிற்கு அசரீரியாகக் கேட்கப் பிரார்த்திக்கின்றோம்.
- இன்று ஏழாலை மேற்கு நாக்கியம்புல இல்லத்தில் அன்னாரின் ஆத்மசாந்திக் கிரியா பூசைகளும், மாகேஸ்வர பூசையும் பக்தி சிரத்தையுடன் நடைபெறுகின்றன.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் தங்கள் நினைவில் வாழும்:
**மனைவி, பிள்ளைகள்,**
**பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.**

நாக்கியம்புலம்,
ஏழாலை மேற்கு, சுன்னாகம்.

(35988)(42-21-18)

# பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்த வலி.தென்மேற்கு பிரதேசசபை நடவடிக்கை

வலிகாமம் தெற்கு, செப்.1

பொலித்தீன் உற்பத்திப் பொருள்களின் பாவனையை கட்டுப்படுத்தவும் அவற்றால் சூழலுக்கேற்படும் கேடுகளை குறைப்பதற்கும் வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபை உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

பொலித்தீன் உறைகளைப் பொது மக்களிடம் இருந்து விலைகொடுத்து வாங்கவும் மேற்படி சபையின் திட்டமிடல் பிரிவினர் நடவடிக்கைகளை எடுத்துவருகின்றனர்.

பொதுமக்கள் பொலித்தீன் உறைகளைக் கண்டகண்ட இடங்களில் எல்லாம் வீசிவிடாது அவற்றை ஒன்று சேர்த்து பிரதேசசபைக் காரியாலயத்தில் ஒப்படைத்தால் ஒரு கிலோ பொலித்தீன் உறைகளை 50ரூபா விலைகொடுத்துப் பிரதேச சபையினர் பெற்றுக்கொள்ளுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பொலித்தீன் உற்பத்திப் பொருள்கள் பாவனையால் சூழலுக்கேற்படும் கேடுகளைக் குறைப்பதற்கு பொலித்தீன் பைகள் உட்படச் சகல பொலித்தீன் உற்பத்திகளை அரச அலுவலகங்கள், பாடசாலைகள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் பொது இடங்களில் பாவிப்பதனை கட்டுப்படுத்துமாறும் சோடனைகளுக்குப் பொலித்தீன் மாலைகள் உபயோகிப்பதைக் கைவிடுமாறும் அரச நிர்வாக முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் சீ.மான்னப்பெரும ஏற்கனவே அறிவித்திருந்தார்.

இந்த அறிவித்தலையடுத்து வலி. தென்மேற்குப் பிரதேச சபை திட்டமிடல் பிரிவினர் மேற்படி நடவடிக்கைகளை மேற்கொண்டு பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்தத் தீர்மானித்துள்ளனர். (8-152)

# இடம்பெயர்ந்த பெண்களின் கருத்து வெளிப்பாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம்,செப்.1

இடம்பெயர்ந்து முகாம்களில் வசிக்கும் பெண்களின் மன எண்ணங்களைப் பகிர்ந்து கொண்டு எதிர்காலம் பற்றித் திட்டமிடும் அரங்கு கடந்த 22ஆம் திகதி நலலூரில் உள்ள பெண்கள் பண்பாட்டு மையத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பல நலன்புரி முகாம்களிலும் இருந்து ஏராளமான பெண்கள் பங்குபற்றினர்.

அகவணக்கத்தின் பின்பு அரங்கப் பாடலுடன் நிகழ்வு ஆரம்பமாகியது.

மனஇறுக்கம் தளர்த்தப்பட்ட நிலையில் உற்சாகமாக நடைபெற்ற சந்திப்பில் நலன்புரி முகாம்களில் தங்கி வாழும் தாங்கள், சொந்த இடங்களுக்குச் சென்று, நிரந்தரமாக வாழ வழி செய்யவேண்டும் என்பதை முன்னிறுத்திப் பலரும் தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

இந்நிகழ்வில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் மற்றும் யாழ். மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் கயல்விழி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த அரங்க நிகழ்வின் தொடர்ச்சியாக இடம்பெயர்ந்து முகாம்களில் வசித்துவரும் பெண்கள் தமது பிரச்சினைகளை சுதந்திரமாக வெளிப்படுத்த வாய்ப்பளிக்குமுகமாக அங்கத்தவர்களைக் கொண்ட குழுக்கள் தெரிவுசெய்யப்படவுள்ளன.

(ஐ.203 -204)



இடம்பெயர்ந்த பெண்கள் பங்குபற்றிய அரங்க நிகழ்வில் எடுக்கப்பட்ட படம்.

## நல்லைக்கந்தன் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,செப்.1

சரித்திரப் பிரசித்திபெற்ற நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவையொட்டி மாநகரசபையின் சைவசமய விவகாரக்குழு வருடந்தோறும் வெளியிடும் "நல்லைக் குமரன்" நூல் வெளியீட்டுவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10மணிக்கு நல்லை ஆதீன திருஞானசம்பந்தர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா தலைமையில் நடைபெறும். இந்நூல் வெளியீட்டுவிழாவில் ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசமபந்த பரமாசார்ய சுவாமிகள், மாவையாதீன கர்த்தா மகாராஜஸ்ரீ சு.து.ஷணமுகநாதக் குருக்கள், பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா, கலாநிதி சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் வழங்கு வர்.

நூலின் முதற்பிரதியினை தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தினர் பெற்றுக் கொள்வர்.

தொடர்ந்து கலைநிகழ்வாக வயலின் வித்துவான் அ.ஜெயராமனின் வயலின் கச்சேரியும் இடம்பெறும். (3-13)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று நடப்பவை

யாழ்ப்பாணம்,செப்.1

நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவையொட்டி நல்லூர் இளங் கலைஞர் மன்றத்தினர் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக இசையரங்கு நிகழ்வில் இன்று புதன்கிழமை மாலை 6.30 மணிக்கு எஸ்.இராமநாதனின் பாட்டுக் கச்சேரி இடம்பெறும்.

இதில் பக்கவாத்தியதாரர்களாக வயலின் எஸ்.திவாகரன், மிருதங்கம் கே.அனந்த கோபன், கடம் ஏ.செல்வரத்தினம் ஆகியோர் பங்கேற்பார்கள்.

(8-13)

◆ ◆ ◆

யாழ்ப்பாணம்,செப்.1

நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்தப் பெருந் திருவிழாவையொட்டி இந்துகலாசார அமைச்சின் யாழ்.மாவட்ட அலுவலகம் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் தினமும் 7 மணிக்கு நடத்திவரும் ஆன்மீக நிகழ்வில் இன்று சங்கீத லலித கானமணி எஸ்.ஈ.பத்மநாதனின் பாட்டுக் கச்சேரி இடம்பெறும்.

(8-13)

◆ ◆ ◆

நல்லூர்க் கந்தன் ஆலயப் பெருந்திருவிழாவையொட்டி நல்லூர் மேற்கு வீதியிலுள்ள ஸ்ரீமுத்துவிநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெறும் கம்பராமாயணத் தெய்வீகத் தொடர் இசைப்பேருரையில் இன்று புதனகிழமை மாலை 6 மணிக்கு கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்தசர்மா 'அகலிகை சாபவிமோசனம்' என்னும் பொருளில் பற்றி உரையாற்றுவார்.

(8-13)


இன்று நல்லைக் கந்தன் ஆலயத்தில்
பன்னிரண்டாம் திருவிழா



பகல் திருவிழா காலை 10.30 மணிக்கு
இரவுத் திருவிழா மாலை 5.30 மணிக்கு
வள்ளி – வேல் – தெய்வானை வீதிவலம்
ஞானவடிவேலவனே நல்லூர் முருகனே
நல்வரந் தந்தே எமை ஆண்டிட வருவாய்!

நவீன ரக டிசைன்களிலான தங்க நகைகள்
குறித்த தவணையில் செய்து பெற்றிட
சிறந்த இடம்.
வைஷ்ணவி நகைப்பூங்கா



இல்லங்கள் தோறும் இனிமை தரும்
நாள் இத்திருநாள் என
நல்லூர்க் கந்தனை வேண்டுகின்றோம்.
(C/37347) பிரதான வீதி, நெல்லியடி.


## வேலைத் தூக்கி விளையாடும் தெய்வம்

இராகம்: எதுகுலகாம்போதி தாளம்: மிசிரம்

பல்லவி

வேலைத் தூக்கிவிளை யாடுந் தெய்வமே - யென்
வினைப் பகை தீர் தெய்வமே

அனுபல்லவி

காலைத்தூக்கி யாடும் கண்ணுதல் தந்த
கதிர்காமத் தையனே கழலடி நம்பிவந்தேன்
(வேலை)

சரணம்



எங்கெங்குந் திருமுகம் எங்கெங்குந் திருவிழி
எங்கெங்குந் திருச்செவி எங்கெங்குந் திருக்கரம்
எங்கெங்குந் திருவடி எங்கே நீ அங்கே நான்
ஈசனே கதிர்காம வாசனே முருகேசா.
(வேலை)

- யோகர்சுவாமிகள்.

# நல்லூர்க்கந்தன்

பெருந்திருவிழாக் காலச் சிறப்பம்சம்

(12 ஆம் திருவிழா)



## நல்லைக் கந்தன்

இராகம்: கல்யாண வசந்தம் தாளம்: ஆதி

பல்லவி

தேனென இனிப்பான் திருநல்லைக் கந்தன்
நான் எனுள் அவனைக் காணிடும் போது (தேன்)

அனுபல்லவி

ஊன்புள கெய்தும் ஓம்முரு காவென
ஒருதரம் அவன்புகழ் ஓதிடும் போது (தேனென்)

சரணம்

ஆலம் துண்டோன் அருளிண சேயோன்
அம்பிகை வாரி அணைத்திட்ட கந்தன்
காலையும் மாலையும் அன்பர்கள் வந்து
கடிமலர் தூவி கைதொழும் கந்தன் (தேனென)

முந்தை வினைகள் முற்றுமே தொலைத்து
பந்த பாசம் பாறிடச் செய்து
வந்தினிப் பாசம் தொடரா வண்ணம்
சிந்தை திருந்தவே செய்திடு கந்தன் (தேனென)

வானவர் தானவர் வந்து வணங்கிட
மான்வீழி வள்ளியும் யானையும் மருங்காய்
கான மாமயில் தோகை சுமந்திட
தானொரு வேலுடன் தோன்றிடு கந்தன் (தேனென)

பண்டிதர் சி.கா.சேந்தன்.

## எழில்மிகு நல்லையின் முருகே!

அன்பினை மறந்தோம் அறிவினைத் துறந்தோம்
அயலவர் துயரினில் மகிழ்ந்தோம்
ஆட்டிடும் சூத்ர தாரிக னாகி
அரசியல் செய்பவர் பலரால்
நன்றென உள்ள யாவையும் தீய
நரிகளால் பாழ்பட எங்கள்
நண்பரும் பகைவர் ஆயினர் வெறுப்பாம்
நஞ்சினை அறுவடை செய்தோம்
கொன்றிடல், கொள்ளை, குடியினைக் கெடுத்தல்
குதூகல மாகவே செய்யும்
குணமிலாக் கீழோர் கொட்டங்கள் கண்டும்
குமைவதொன் றன்றிவே றறியோம்.

- சொக்கன்.

## மூலாதரத்தில் வேலாய் இருப்பாய்

| | | | |
|---|---|---|---|
| மூலா | தரத்தில் | வேலாய் | இருந்து |
| | மூர்த்தம் | கொடுக்கும் | முருகா! |
| கோலா | கலமாய்க் | கோயில் | நடுவே |
| | கொலுவீற் | றிருக்கும் | குமரா! |
| ஏலா | திருந்த | எனைநீ | அணைத்தாய் |
| | ஏற்றம் | தந்தாய் | குழகா! |
| நாலா | புறத்தும் | அருளைச் | சுரக்கும் |
| | நல்லூர்க் | கந்தா | வருக! |

- முருகனடியான்.

## சிங்காரத் திருமுருகன்

"தாராளன் தண்ணருளன் தங்கவடிவேல் அழகன்
சீராளன் சின்னையன் சிங்காரத் திருமுருகன்.
பேராளன் பேரின்பன் பெண்ணிருவர் பாகங்கொண்டு
ஓராறு முகங்காட்டும் ஒருவனடீ நல்லூரான்!"

- தேவி. கணேஸ்.

## நாடுவோம் அவனருளை

நல்லை நகரானை.......
நாளும் தொழுதிட.....
தொல்லைகள் பறந்தோடிவிடும்
தொடர்துன்பம் அகன்றுவிடும்
வல்லவனருள் சேர்ந்திட
வாழ்வு வளம்பெறும்
நல்லறிவுடன் நாலும்
நமை வந்தடைந்திடும்
பொல்லாவினை யகன்றிடும்
பொழுதெல்லாம்....
அவன் பாதம் பற்றிட
எல்லையில்லாப் பேறின்பமும்
எமை.... வந்தடைந்திடும்
நல்லருள் பெற்றிட
நாடுவோம் அவன் திருவருளை
எந்நாளுமே........

க.நாகேஸ்வரா.

## தமிழ்த் தெய்வமென மகிழ்ந்தோம்

மரமாகக் கடலாக மிருகமாகப்பகை
பல உருவெடுத்துவரினும்
தளராத தன்னம்பிக்கையினும்
உன் கைவேலால் – துன்பம்
பஞ்சாகப் பறந்தோடல் கண்டு
நல்லை முதல்வாவுனை
நெஞ்சாரத் தமிழ்த் தெய்வமெனக்
கொண்டாடி மகிழ்ந்தோம்.

- நயினையான்.

# எட்டு சர்வதேச நிவாரணப் பணியாளர்கள் தார்பூரில் கிளர்ச்சியாளர்களால் கடத்தல்!

## நைஜீரியா தனது துருப்புக்களை சூடானுக்கு அனுப்பியது

தார்பூர்,செப்.1

சூடானின் தார்பூர் பிராந்தியத்திலுள்ள அகதி முகாம்களில் பணியாற்றிவந்த எட்டு சர்வதேச நிவாரணப் பணியாளர்கள் கிளர்ச்சியாளர்களால் நேற்றுக் கடத்தப்பட்டுள்ளனர் என்று சூடான் அரசு தெரிவித்திருக்கிறது. இவர்களில் மூவர் வெளிநாட்டவர்கள் என்றும் - ஏனையோர் சூடானைச் சேர்ந்தோர் என்றும் - தெரிவிக்கப்படுகிறது.

தார்பூர் பிராந்தியத்தின் தென்பகுதியில் வைத்தே இவர்கள் கடத்தப்பட்டுள்ளனர் என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

கடத்தப்பட்டவர்களில் மூவர் ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத் திட்டத்தின் பணியாளர்கள் மற்றையவர்கள் சூடான் செஞ்சிலுவைச் சர்வதேச குழுவின் ஊழியர்கள்.

சர்வதேச நிறுவனங்களில் பணியாற்றும் சூடான் பிரஜைகளை கிளர்ச்சியாளர்கள் கடத்தியுள்ளனர் என்று அந்நாட்டு அரசு உத்தியோக பூர்வ அறிவிப்பை நேற்று வெளியிட்டது.

ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக சூடான் அரசுக்கு இம்மாதம் 30ஆம் திகதி வரை காலக்கெடு விடுத்திருந்தது.

சூடான் அரசுக்கெதிராக நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பாகத் தீர்மானிக்கும் நோக்கில் ஐ.நா. சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான் தலைமையிலான குழுவினர் நாளை கூடவுள்ளனர்.

இதேவேளை -

சூடானின் தார்பூர் பகுதியிலுள்ள ஆபிரிக்க ஒன்றியத்தின் போர்நிறுத்தக் கண்காணிப்பாளர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக நைஜீரியா தமது துருப்புக்களை அங்கு அனுப்பியுள்ளது.

அங்கு ஏற்கனவேயுள்ள ருவாண்டா நாட்டுப் படையினருடன் சேர்ந்து நைஜீரியத் துருப்பினர் சுமார் நூற்றைம்பது பேர் பங்காற்றுவார்கள் என்று கூறப்படுகின்றது.

தார்பூரில் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக சூடானிய அரசுக்கு ஐ.நா. பாதுகாப்பு சபை வழங்கியிருந்த காலக்கெடு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை நேரத்துடன் முடிவடைந்துவிட்டது.

ஆயிரக்கணக்கான பொதுமக்களின் படுகொலைக்கும் லட்சக்கணக்கான மக்கள் ஊரை விட்டு இடம்பெயர்ந்து செல்லவும் காரணமானவர்கள் என்று குற்றஞ்சாட்டப்படுகின்ற அரசு ஆதரவு ஆயுதக்குழுக்களிடம் இருந்து சூடான் அரசு ஆயுதங்களைக் களையத் தவறினால் கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று ஐ.நா. எச்சரிக்கிறது.

ஐ.நா. சபை, இவ்விவகாரம் பற்றி அடுத்த வாரம் முடிவு எடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனிடையே சூடானிய அரசுக்கும் தார்பூர் கிளர்ச்சிக்காரர்களும் இடையில் நைஜீரியத் தலைநகர் அபூஜாவில் சமாதானப் பேச்சுக்கள் தொடர்ந்தும் நடைபெற்றுவருகின்றன. (க)

## அமெரிக்க உளவாளி மீது தீவிரவாதிகள் தாக்குதல்

பக்தாத்,செப்.1

அமெரிக்க இராணுவத்தினருக்கு அல்கெய்டா அமைப்பினர் தொடர்பாக தகவல் வழங்கிவந்த உளவாளி ஒருவர் தீவிரவாதிகளால் தாக்கப்பட்டுள்ளார்.

இந்தத் தாக்குதலையடுத்து இவர் மனோநிலை பாதிக்கப்பட்டுள்ளார். என தெரிவிக்கப்படுகிறது. 27வயதான இந்த இளைஞர் தந்த தகவல்களின் அடிப்படையில் ,தொடர்ச்சியான பல இராணுவ முன்னெடுப்புக்களை தாம் தொடர்ந்ததாக அமெரிக்க இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

இவர் தொடர்பான தகவல்களை அல்கெய்டா அமைப்பாளர்களிடம் எவ்வாறு சென்றது குறித்து தம்மால் ஊர்ஜிதம் செய்யமுடியாதுள்ளதாக இராணுவ அதிகாரிகள் குறிப்பிடுகின்றனர். (6)

# அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷிற்கு எதிராக நியூயோர்க் நகரில் பெரும் ஆர்ப்பாட்டம்!

## ஆயிரம் சவப்பெட்டிகளோடு ஊர்வலம் நடந்தது

நியூயோர்க்,செப்.1

ஈராக்கில் யுத்தம் நடத்தி அந்நாட்டை ஆக்கிரமிப்புச் செய்தமைக்காக அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷுக்கு கண்டனம் தெரிவித்து நியூயோர்க் நகரில் சவப்பெட்டி ஊர்வலம் நடைபெற்றது.

அமெரிக்க அதிபர் புஷ்ஷின் குடியரசுக் கட்சி மாநாடு நியூயோர்க் நகரில் நேற்றுமுன்தினம் தொடங்கியது. இதுதொடங்குவதற்கு சிறிது நேரத்திற்கு முன்பு புஷ்ஷின் ஈராக் கொள்கைகளுக்குக் கண்டனம் தெரிவித்து சவப்பெட்டி ஊர்வலம் நடத்தப்பட்டது.

லட்சக்கணக்கானவர்கள் இந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். சுமார் 4லட்சம்பேர் இந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டனர் என ஊர்வலத்திற்கு ஏற்பாடு செய்த அமைதி மற்றும் நீதிக்கான ஐக்கிய அமைப்பு என்ற குழு கூறியுள்ளது.

ஈராக்கில் கொல்லப்பட்ட ஒவ்வொரு அமெரிக்கச் சிப்பாயையும் நினைவுகூரும் வகையில் ஆயிரம் மாதிரி சவப்பெட்டிகள் இந்த ஊர்வலத்தில் எடுத்துச்செல்லப்பட்டன. சவப்பெட்டிகள் மீது அமெரிக்கத் தேசியக்கொடி போர்த்தப்பட்டிருந்தது.

சினிமா நடிகர் மைக்கேல் மூர், ஜனாதிபதி வேட்பாளர் தேர்வுப் பந்தயத்தில் இடம்பெற்றிருந்த ஜெஸ்சி ஜாக்சன் ஆகியோர் ஊர்வலத்துக்குத் தலைமை தாங்கினர்.

ஈராக் மீது தேவையில்லாமல் போர் தொடுத்ததாக ஆர்ப்பாட்டக்காரர்கள், புஷ் நிர்வாகத்தின்மீது குற்றஞ்சாட்டினர்.

இந்த ஊர்வலம் குடியரசுக்கட்சியின் 4 நாள் மாநாடு நடக்கவிருக்கும் மாடிசன் சதுக்கம் வழியாகச் சென்றது. அப்போது அங்கு கூடியிருந்த குடியரசுக்கட்சிப் பிரதிநிதிகள் புஷ்ஷுக்கு மேலும் 4ஆண்டுகள் என்று குரல் எழுப்பினர்.

உடனே ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆண்டது போதும் வீட்டுக்குப் போங்கள் என்று கத்தினர். ஊர்வலப்பாதை முழுவதும் பொலீஸ் பாதுகாப்பு பலமாக இருந்ததால் அசம்பாவிதம் ஏதுவும் நடக்கவில்லை.

மாடிசன் சதுக்கம் அருகே ஒரு காகிதப் பொம்மை தீவைத்துக் கொளுத்தப்பட்டது. பொலீஸார் உடனே தீயை அணைத்தனர்.

இதில் இரண்டு பொலீஸ் அதிகாரிகளுக்கு லேசாகக் காயம் ஏற்பட்டது. இது தொடர்பாக 10பேர் கைதுசெய்யப்பட்டனர். போக்குவரத்தை மறித்ததாக மேலும் 200 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (க)

## கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

பங்குச்சந்தை புள்ளிவிவரங்களும் கம்பனி அறிவித்தல்களும் செவ்வாய்க்கிழமை, ஓகஸ்ட்-31-2004

| சந்தைப்புள்ளிவிவரம் | இன்று | முந்திய நாள் | புள்ளி மாற்றம் | %மாற்றம் |
|---|---|---|---|---|
| அனைத்துப்பங்கு விலைச்சுட்டி (ASPI) | 1,370.43 | 1,375.17 | (4.74) | (0.3) |
| மிலங்கா விலைச்சுட்டி (MPI) | 2,054.60 | 2,059.88 | (5.28) | (0.26) |
| மொத்த வருவாய்ச்சுட்டி (TRI) ASTRI - அனைத்துப் பங்குகள் | 1,417.72 | 1,422.33 | (4.61) | (0.32) |
| MTRI - மிலங்கா பங்குகள் | 2,134.31 | 2,138.93 | (4.62) | (0.22) |
| சந்தைப்புரள்வு (மில்லியன் ரூபாயில்) | 95.10 | 47.80 | | |
| கைமாற்றப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை (மில்லியனில்) | 8.40 | 3.40 | | |
| மொத்தக் கொடுக்கல் வாங்கல் | 2,130.00 | 1,449.00 | | |
| சந்தை மூலதனம் (பில்லியன் ரூபாயில்) | 335.70 | 336.80 | | |

குறிப்பு: குறித்த திகதியில் கம்பனி அறிவித்தல்கள் இடம்பெறவில்லை.

விவசாயக் கண்காட்சி. வட்டக்கச்சி பண்ணை, கிளிநொச்சி.
1-9-2004 முதல் 5-9-2004 வரை



அல்ஜிபோல்
(ஜேர்மன் ஓர்க்கனிக்)
ALGIFOL™
German Organics
அமெரிக்கா. ஜப்பான், இந்தியா போன்ற நாடுகளில் அங்கீகரிக்கப்பட்டதும் உலக பிரசித்தி பெற்ற நிபுணர்களால் ஜேர்மனியில் உற்பத்தி செய்யப்பட்டதும் நச்சுத்தன்மையறதுமான
Algifol
100%
ஆழ்கடல் தாவரங்களினால் உற்பத்தி செய்யப்பட்ட இயற்கையான திரவப்பசளை.




Piccaso
இறக்குமதியாளர்கள்
BCPE CO (PVT) LTD பிரிட்டிஷ் சிலோன் லிமிட்டெட்.
35-1/1, தேவநம்பியதிஸ்ஸ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி : 011-4717360, 4717361
பெக்ஸ் : 011-2693206
ஈமெயில் : teacom@slt.lk / teacom@dynaweb.lk

Jayoda ஜயோதா ජයෝද
உத்தியோகபூர்வ முடிவுகள்
டிக்கட் தொடர் இல. 6384552 முதல் 6396984 வரை
சீட்டிழுப்பு இல. 63 திகதி 30-08-2004
வெற்றி எண்கள் 5 7 9 0 3 0 சுப்பர் எண் 17
சுப்பர் ஜக்பொட் பரிசு 1,66,13,225/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,66,13,225/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 11 | 50,000/- | 5,50,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 108 | 5,000/- | 5,40,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,086 | 500/- | 5,43,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,821 | 50/- | 5,41,050/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 1,07,260 | 10/- | 10,72,600/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 11 | 5,000/- | 55,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 108 | 1,000/- | 1,08,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,091 | 100/- | 1,09,100/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,727 | 20/- | 2,14,540/- |
| மொத்தம் | 1,31,224 | | 47,33,290/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 56,63,800/-

இந்த வியாழக்கிழமைக்கான சுப்பர் ஜக்பொட்
ரூ. 1,69,14,200/-

தொடர் இல. 7356871 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 செப்டம்பர் 02 ஆம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ஜயோதா சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் வீட்டுப் பாவனைப் பொருட்களை வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்
6387948-9-43
6391392-7-01
6387527-1-37
6386346-0-85
6395338-5-42

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்


## விற்பனைக்கு

Pulsar 180 Dts Black மோட்டார் சைக்கிள (1000km இற்குள் ஓடியது) விற்பனைக்குண்டு. தொடர்பு: ஸ்ரீ, இல. 30, பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி (எரிபொருள் நிலையம் முன்பாக) T.P. 0777 178708. (35964)

## கோழிக்குஞ்சு விற்பனைக்கு

தரமான Prima பேட்டுக்குஞ்சுகள் (4நாள்/3 மாதம்) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: தபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முததிரைச்சந்தையடி, நல்லூர். (35981)

## OFF -SET MACHINE OPERATORS

OFF -Set மெசின் இயக்குநர்கள் தேவை.நேரில் வரவும்.
பாரதி பதிப்பகம்
430.காங்கேசன்துறை வீதி. யாழ்ப்பாணம்.
(சி-37358) (21-13)

## தவறிவிட்டது

கொக்குவில், சம்பியன் லேனைச் சேர்ந்த பத்மநாதன் கணநாத் என்பவருடைய கமரா, 2 பிலிம் றோல் என்பன அடங்கிய கைப்பை நேற்று 30-08-2004 திங்கட்கிழமை யாழ்ப்பாணத்துக்கும் சம்பியன் லேனுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உயர் தொழில்நுட்பக் கல்லூரியில் ஒப்படைத்துதவவும். T.P. 0777 146787 சன்மானம் வழங்கப்படும். (35966)

## கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2 Kg இற்கு மேல் வளர்ச்சியடையக்கூடிய நம்பர் - 1 பகிரா இன புறொயிலர் குஞ்சுகள் இன்று 01-09-04 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். றாஜீவ் ஆனைக்கோட்டைச் சந்தி. T.P. 3529, 2867, P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. ஸ்ரீராம பருத்தித்துறை பஸ்நிலையம் முன்பாக. (35929)


## மாணவர்களுக்கு செலான் வங்கியின் பரிசு

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளிடையே நடத்தப்பட்ட வலயமட்ட கல்வி ஆக்கக கண்காட்சியில் ஆரம்பப் பிரிவில் முதல் இடங்களைப் பெற்ற 30 மாணவர்களுக்கு செலான் வங்கியினர் டிக்கிரி சேமிப்பு கணக்குப் புத்தகங்களை பரிசாக வழங்கவுள்ளனர்.

தரம் 1 முதல் தரம் 5 வரையான வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்களின் ஆக்கங்களில் முதலிடம் பெற்ற மாணவர்களுக்கே பரிசுகளை செலான் வங்கி வழங்கவுள்ளது.

தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் பிறப்புச சான்றிதழுடன் விவரங்களை அனுப்பி வைக்குமாறு செலான் வங்கி தென்மராட்சி கல்வி வலயத்தைக் கேட்டுள்ளது.

இதேவேளை-வலய மட்டக் கல்விக் கண்காட்சியில் தெரிவு செய்யப்பட்ட ஆக்கங்களைத தயாரித்த 250 மாணவர்களுக்கு வலயக் கல்வி அலுவலகத்தினால் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதாக வலயக் கல்வி அலுவலகத்தினர் அறிவித்துள்ளனர். (8-117)


## தேவை

தனியார் அலுவலகமொன்றிற்கு பெண் எழுதுவினைஞா தேவை. 40 வயதிற்குட்பட்ட க.பொ.த. சாதாரண தரம் சித்தியுள்ளவர்கள் எதிர்பார்க்கப்படுகின்றார்கள். ஆங்கில அறிவும் அவசியம்.
தகுதியானோர் இரவு 7.00மணிக்குப் பின் தொடர்புகொள்ளவும்.
S.சுகசீலன்,
T.P.: 222 6286 396. நாவலர் வீதி. யாழ்ப்பாணம்.
(35978) (36-12-15-21)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த கனடாவில் நிரந்தர பிரஜாவுரிமையுடைய நற்குணமும், நற்பண்புமுடைய 1968ஆம் ஆண்டு பிறந்த கணனிப் பொறியியலாளருக்கு (I.B.M) (விவாகரத்துப பெற்றவர்)30வயதுக்குள் அழகான (குறைந்தது A/Lகணக்கியல்) படித்த மணமகள் தேவை.
தொடர்பு: 27/11, இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர் மடம். T.P.021-222 5131
15.09.2004 ஆம் திகதிக்குப்பின்
21,A.V.HENRI BARBUSSE
93120 LACOURNUVE, FRANCE
T.P-0033148351321
(35940)


## கல்லுண்டாயில் புதிய பிள்ளையார் ஆலயம்

யாழ்ப்பாணம்,செப்.1

கல்லுண்டாய் பிரதான வீதிக்கு அருகில் புதிய பிள்ளையார் ஆலயம் அமைககப்பட்டுள்ளது.

இதற்கான நிதியினை ஆனைக்கோட்டை சிவன் கோயிலடியைச் சேர்ந்த ஜெயக்குமார்-நந்தினி தம்பதிகள் வழங்கியுள்ளனர்.

இதேவேளை - கல்லுண்டாய் நரசிங்க வைரவர் ஆலயம் நீண்டகாலத்திற்கு பின்னர் மீள் புனரமைப்பு செய்யப்பட்டு கடந்த 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. (8-185)


## இணையத் தளம் ஊடாக 24 மணி நேரமும் உலகெங்கும் ஒலிக்கிறது

WORLD TAMILAR
உலகத் தமிழர் வானொலி

இணைய முகவரி: WWW.Wtrfm.com
அதன் ஒரு வருட பூர்த்தியைச் சிறப்பிக்க
நல்லூர் திருவிழாக்கால நேரடி ஒலிபரப்பு
26 உற்சவ நாள்களிலும்
(ஒகஸ்ட் 21 முதல் செப்ரெம்பர் 16 வரை)
உலகின் எந்த மூலையிலிருந்தும் இணையத்தளம் மூலம் செவிமடுத்து மகிழலாம்).

### உலகத் தமிழர் வானொலியுடன்

நேரடியாக இணைய
MSN messenger chat மூலம்: live @ wtrtm.com
தொலைபேசி மூலம்: 2673969
(சி-36863)

உலகத் தமிழர் உறவுப் பாலமாக
உலகத் தமிழர் வானொலி

ஊடக அனுசரணை:- 'உதயன்'


## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை

யாழ்ப்பாணம்,செப்.1

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளை வியாழக்கிழமை முற்பகல்11 மணிக்கு இடம்பெறும்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணியசர்மா தலைமையில் செயலக மாநாட்டு மண்டபத்தில் இக்கூட்டம் இடம்பெறும். (3-185)

## உலக வங்கி ஆலோசகர் யாழ்.வருகை

யாழ்ப்பாணம்,செப்.1

வடக்கு - கிழக்கு வீடமைப்பு, புனரமைப புத்திட்டத்தின் கீழ் குடா நாட்டில் மேற்கொள்ளப படும் ஆரம்ப கட்ட வேலைகளைப் பார்வையிடுவதற்காக உலக வங்கியின் சிரேஷ்ட வீடமைப்பு ஆலோசகர் டாக்டர் நாராயணன் நாளை வியாழக் கிழமை யாழ்.வருகை தரவுள்ளார். உலக வங்கியின் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலக பிரிவுகளில் தலா நூறு வீடுகள் அமைககப்பட்டு வருகின்றன. இதன் ஆரம்பக் கட்ட வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதனைப் பார்வையிடுவதற்காகவே இவர் யாழ்.வருகின்றார். (3-202-204)


## 25 ஆவது ஆண்டு திருமண நிறைவு விழா



திரு.திருமதி குணலிங்கம் - யோகேஸ்வரி தம்பதிகள்

01-09-2004

என்றும் இன்பமுடன் வாழவேண்டுமென்று உளமார வாழ்த்துபவர்கள்:

திருமதி இ.பரமேஸ்வரி, திரு.திருமதி உதயமனோகரன் சாநதி (சுவிஸ்), திரு.திருமதி செல்வராஜா சாரதா, திரு.திருமதி பாஸ்கரன் திருஞானவதி, திரு.திருமதி சாந்தலிங்கம் புஸ்பலதா, திரு.திருமதி முருகமூர்த்தி சுஜாதா (பிரான்ஸ்), திரு.திருமதி விஜயகுமார் திலகா (ஜேர்மனி), திரு.திருமதி சசிகுமார் இராஜேஸ்வரி, செல்வி கவிதா.

(35977)(43) கோட்டைக்காடு, மல்லாகம்.

## திருமண அழைப்பு

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது" (குறள்)

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஸ்ரீ தாரண வருடம் ஆவணி மாதம் 19 ஆம் நாள் (03.09.2004) வெள்ளிக்கிழமை பஞ்சமி திதியும் அச்சுவினி நட்சத்திரமும் அமிர்த சித்தயோகமும் கூடிய நன்னாளன்று காலை 8.30 மணிமுதல் பகல் 11.19 மணி வரையுள்ள துலா இலக்கின சுபமுகூர்த்த நல்வேளையில்

திரு-திருமதி சிவரத்தினம் தம்பதிகளின் செல்வப் புதல்வன் திருநிறை செல்வன்
சுகந்தன் (சுகு) அவர்களுக்கும்



திரு-திருமதி பகவான் தம்பதிகளின் செல்வப் புதல்வி திருநிறை செல்வி
சௌமினி (சௌமி) அவர்களுக்கும்

தெய்வத் திருவருள் துணைகொண்டு பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு மேற்படி சுபமுகூர்த்தத்தில் மாங்கல்யதாரணம் அருள்மிகு லண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில் திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெறவுள்ளது என்பதை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

திரு.திருமதி சிவரத்தினம் குடும்பத்தினர்
டாக்டர் சுப்பிரமணியம் வீதி
சுன்னாகம்.இலங்கை
தொ.இல :- 0094 212222834

திரு.திருமதி பகவான் குடும்பத்தினர்
4280 கின்டன் # 3
H3S 1T6. மொன்றியல். க்யுபெக்
கனடா. தொ.இல :- 514 7336507

இருவீட்டார் அறிவிப்பு (37358)

## துயர் பகிர்கின்றோம்



வடபிராந்திய போக்குவரத்துச்சபை தலைமைக காரியாலயத்தின் நிர்வாக உத்தியோகத்தர்
செல்வி தேவகிராணி
இரத்தினசபாபதி
அவர்களின் அன்புச்சகோதரர்
நடிகர், கவிஞர்
கலாநிதி சிலோன் விஜயேந்திரன்
அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தவருடன் நாமும் துயர் பகிர்கின்றோம். அத்துடன் அவரது ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

பொது முகாமையாளரும்,
உத்தியோகத்தர்களும்,
ஊழியர்களும்.

வ.பி.போ.சபை,
கோண்டாவில்.
(35976)(43-15-12)

## மரண அறிவித்தல்

### கலாநிதி சிலோன் விஜயேந்திரன்

M.A.D.Lit (கவிஞரும், நடிகரும்)

வசாவிளானைப் பிறப்பிடமாகவும் சென்னையைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கலாநிதி சிலோன் விஜயேந்திரன் நேற்று முன்தினம் (31.08.2004) அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினசபாபதி - ஜெயசீலி தம்பதியினின் புதல்வரும் காலஞ்சென்ற புலவர் ஆசுகவி கல்லடிவேலுப்பிள்ளை ஆச்சிமுத்து தம்பதியினரின் பேரனும் காலஞ்சென்றவர்களான இராதாகிருஷ்ணன்,, விஜயலட்சுமி மற்றும் ஸ்ரீ, நடராஜா (பத்திரிகையாளர்), பாலசரஸ்வதி (கொழும்பு), தேவகிராணி (வ.பி.போ.சபை. கோண்டாவில்), சகுந்தலா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சந்திரன் (கோல்ட்ஸ் - உரும்பிராய்) மற்றும் யசோதரன் (பிரான்ஸ்), செல்வமணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் பாலமுரளிகிருஷ்ணா, கிருஷ்ணவேணி, ராதிகா, பிரதீபன், உமாரமணன், உமாகிருஷ்ணன் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் பிரான்ஸில் வசிக்கும் பார்த்தீபன் ஹரிஹரன், தர்மிளா, சஞ்சீவ், பிரவீன் மற்றும உமாசங்கர் (கனடா), பாமினி (நோர்வே), பிரபு (கொழும்பு) ஆகியோரின அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.09.2004) புதன்கிழமை சென்னையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
குடும்பத்தினர்.

(C/35975)(43-21-12-15)

## பகிரங்க அறிவித்தல்

பருத்தித்துறை, வியாபாரிமூலையில் பிறந்து வசித்துவந்த **பெரியதம்பி முருகுப்பிள்ளை கனகசபாபதி குமரகுரு** ஆகிய நான் பின்வரும் பகிரங்க அறிவித்தலைத் தரவிரும்புகிறேன்.

கௌரவ யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் **எம்.கே.சிவாஜிலிங்கம்** அவர்கள் 25-08-2004 திகதியிட்ட 'உதயன்' பத்திரிகையில் பிரசுரித்த விளம்பரத்திற்கு என்னுடன் சகோதரங்களையும் சேர்த்து அறியத்தருவதாவது -

'உதயன' பத்திரிகையில் குறிப்பிட்ட வரைபடத்தில் காண்பித்த வடக்கே றோட்டை வடக்கெல்லையாகக் காணப்படும் காணி இதன் கீழ் காண்பிக்கப்பட்ட நிலப்பரப்பு 25 குளி 21 கொண்ட ஆதனம் எனக்கும் எனது சகோதரர் றகுநாதன், சுந்தரேசன், பாஸ்கரன், மோகனதாஸ் ஆகிய எங்கள் ஐவருக்கும் எங்கள் தந்தை கனகசபாபதி பெயரில் எழுதப்பட்ட 23.06.1943 திகதியிட்டு எம்.எஸ். கந்தையா பிரசித்த நொத்தாரிசு அத்தாட்சிப்படுத்திய 10944ஆம் இலக்கச் சாதனத்தாலும் 02.02.1953 திகதியிட்டு எம்.எஸ். கந்தையா பிரசித்த நொத்தாரிஸ் அத்தாட்சிப்படுத்திய 12901ஆம் இலக்க சாதனத்தாலும் உரித்துடையவராக இருந்து மரண சாதனமின்றியும் தத்துவப் பெறுமதிக்கு குறைவான சொத்துக்களை விட்டிறந்தமையால் எங்கள் ஐவருக்கும் முதுசமாக சமபங்காகக் கிடைக்கப்பெற்றதென்றும் இக்காணி தோட்டக்காணியாக இருப்பதனால் இக்காணியைச் சுவீகரிக்க எங்கள் மறுப்பைத் தெரிவிப்பதுடன் நாங்கள் ஐவரும் இலங்கையில் யாழ்ப்பாணத்திற்கு வெளியால் தொழில் புரிவதினாலும் நான் தற்பொழுது எனது தொழிலைப் பலகாலமாக திருகோணமலை புளியங்குளம் இலக்கம் 76, பிரதான வீதியில் தொழில் நடத்திக் கொண்டிருக்கின்ற படியாலும் தோட்டக் குத்தகைகாரர் கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், வல்வெட்டித்துறை, நகரசபை, தலைவர் என்ற பதவியிலிருக்கும் பொழுது செய்த விளம்பரத்தைப்பற்றி குத்தகையில் இருப்பவர்கள் தெரிவிக்காமல் விட்டமையாலும் எனக்குத் தெரியாமலிருந்தமையாலும் அளப்பனவு செய்து நில அளவையாளர் ஒருவர் தயாரித்த படத்தில் காண்பிக்கப்பட்ட எனக்கும் எனது சகோதரங்களுக்கும் சொந்தமான ஆதனத்தைக் காண்பித்து ஆட்சேபனை தெரிவிக்காதுவிட்டாலும் தோட்டக்காணியைச் சுவீகரிக்க எங்கள் மறுப்பைத் தெரிவிக்கின்றேன் என்றும் நாங்கள் விரும்பியவாறு குறித்த ஆதனத்தை விற்கவோ, ஈடுவைக்கவோ நிபந்தனை அறுதி எழுதவோ, நன்கொடை கொடுக்கவோ எங்களுக்கு உரிமை உண்டென்று இத்தால் வெளிப்படுத்துகின்றோம். எனக்கு எனது சகோதரம் வைத்தியகலாநிதி றகுநாதன், சுந்தரேசன், பாஸ்கரன், மோகனதாஸ் நால்வரும் அற்றோணித் தத்துவம் 05-05-1994 திகதியிட்ட 887 ஆல் தந்து நான் ஆட்சி செய்கின்றேன். எங்கள் சொந்தமான காணிக்கு நில அளவையாளர் வீ.ஞானகுருவால் வீந்தாரிக்கப்பட்ட படம் 591 ஏ திகதி 06-06-1990 உம் காண்பிக்கப்படுகிறது.

வரைந்தவர்: **இ.உருத்திரா,** சட்டத்தரணி.
30.08.2004

R.Rudra B.Sc.(London)
Attorney - at Law
502390686V

க.குமரகுரு.
502390686V

(35955) (26-21-12-15)



# ஸ்ரீ வல்லிபுரம் ஆழ்வார் சுவாமி கோயில்
## துன்னாலை வடக்கு, புலோலி
## மஹோற்சவ தற்காலிகக் கடை

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் மஹோற்சவத்தை முன்னிட்டு பின்வரும் கடைகள் 04.09.2004 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தல் வழங்கப்படவுள்ளன.

கேள்விக்காரர்கள் அன்றைய தினம் காலை 9.30 மணிக்கு கரும பீடத்தில் சமுகமளித்து தம்மைப் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம். தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்வித் தொகையை கரும பீடத்தில் செலுத்தி எம்முடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

1. ஐஸ்கிறீம் கடை
2. மிட்டாஸ் கடை
3. கச்சான் கடை

*துன்னாலை வடக்கு,*
*புலோலி.*
(சி-37360)(42-43-18-19)

தலைவர்,
அறங்காவலர் சபை.

## ஆசிரியர்கள் இடமாற்றம்

தென்மராட்சி,செப்.1

கைதடி குருசாமி வித்தியாலயத்தில் கடமையாற்றிய விஞ்ஞான ஆசிரியர் தி. கிருஷ்ணமூர்த்திக் குருக்கள் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்திற்கும், சங்கீத ஆசிரியை திருமதி ய.சிவபாதசக்தி நுணாவில் மேற்கு அ.த.க.பாடசாலைக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

கொடிகாமம் அ.த.க.பாடசாலையில் கடமையாற்றிய விஞ்ஞான ஆசிரியர் நா. மகேந்திரன் கைதடி குருசாமி வித்தியாலயத்திற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

(எ-117)

## கதிர்காமருடன் இந்தியத் தூதர் சந்திப்பு

இலங்கைக்கான புதிய இந்தியத் தூதராகப் பொறுப்பேற்றுள்ள நிருபமா ராவோ நேற்றுமுன்தினம் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரைக் சந்தித்து உரையாடினார். இலங்கையின் தற்போதைய அரசியல் நிலை குறித்து இந்தச் சந்திப்பின்போது பேசப்பட்டதாகக் கூறப்படுகிறது. இலங்கைக்கான முதல் பெண் இந்தியத் தூதர் நிருபமாராவோ (வயது 53) ஆவார்.

(ஒ)

## ஈராண்டு நினைவலைகள்

மலர்வு 20 - 07 - 1949



உதிர்வு 24 - 08 - 2002

### தெய்வேந்திரசிங்கம் அருள்நந்தி
(ஆயுள்வேத வைத்தியர் நவாலி- மயிலிட்டி)
திதி: 01.09.2004 புதன்கிழமை

**அன்பால் எமை அணைத்து அறிவுரைகள் கூறி**
**பண்பால் பலர் போற்றிட எமை உயர்த்தி**
**புனிதப் பணி செய்து நல்ல புகழுடன் வாழ்ந்தீர்!**
**காலங்கள் பல கடந்து சென்றாலும்**
**அழியாது உங்கள் நினைவலைகள்!**

*மானிப்பாய்.*
(35957)(39-42-18-19)

உங்கள் பிரிவால் துயருறும்:
**மனைவி, மகன், மகள்.**

# பொதுமக்களின் கவனத்திற்கு.... பகிரங்க அறிவித்தல்
## காரைநகர் சிவகாமி அம்பிகா சமேத ஸ்ரீசிதம்பரேஸ்வரர் தேவஸ்தான ஆதீனகர்த்தாக்கள்
## பொதுமக்களுக்கு விடுக்கும் பகிரங்க அறிவித்தல்

மேற்படி ஆலயத்தின் தேர்த்திருவிழா உபயகாரர்கள் பொதுமக்களிடம் தேர்த்திருப்பணிக்கு நிதி சேர்த்துவருகின்றார்கள் என்று அறியவந்துள்ளது. ஆலய ஆதீனகர்த்தக்கள் ஆகிய நாம் தேர்த்திருவிழா உபயகாரர்கள் தேர்த்திருப்பணிக்கு என்று பொதுமக்களிடம் நிதி சேகரிப்பதற்கு எத்தகைய அனுமதியையும் வழங்கவில்லை என்பதைப் பொதுமக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றோம்.

மேலும் மேற்படி தேவஸ்தானத்தின் பெயுரை உபயோகித்து எவருக்கும் எத்தகைய நிதியையும் சேகரிப்பதற்கு ஆலயத்தின் ஆதீனகர்த்தாக்கள் ஆகிய நாம் அனுமதி எதுவும் வழங்கவில்லையென்றும் அவ்வாறு நிதிகோரி வருபவர்களுக்கு எவ்வித நிதியையும் வழங்கவேண்டாம் என்றும் பொதுமக்களை அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

மேற்கூறப்பட்ட வேண்டுகோளினை மீறி நிதி சேகரிப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் இத்தால் எச்சரிக்கை விடப்படுகின்றது.

மேலும் மேற்படி தேவஸ்தானத்தின் திருப்பணி வேலைகள் தொடங்க இருப்பதால் திருப்பணிகளுக்காக அன்பளிப்புச் செய்யும் அம்பிகை அடியார்கள் குறித்த ஆலயத்தின் வங்கிக் கணக்கிற்கோ அல்லது எம்மால் நியமிக்கப்பட்ட ஆலய தர்மகர்த்தா பரிபாலன சபையினரிடமோ நேரடியாகவே அன்பளிப்புத் தொகைகளை அனுப்பிவைக்கலாம் என்றும் இத்தால் அறியத்தருகின்றோம்.

**ஆலயத்தின் வங்கிக் கணக்கின் விவரம்:**

வங்கி: இலங்கை வங்கியின் காரைநகர் கிளை. காரைநகர்

வங்கிக் கணக்கின் பெயா: **சிவகாமி அம்பிகா சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் தேவஸ்தான பரிபாலன சபை**

கணக்கு இலக்கம்: **846**

மேற்படி தேவஸ்தானத்தின் பெயரை உபயோகித்து திருவிழா உபயகாரர்களோ அல்லது ஏனையோரோ எவ்வித திருப்பணிக்கும் எமது பூரண அனுமதியின்றி நிதி சேர்க்கமுடியாது என்பதை பகிரங்க அறிவித்தல் மூலம் மீண்டும் வலியுறுத்துகின்றோம். இதனை மீறிச் செயற்படுபவர்களுக்கு தேவஸ்தான அடியார்களாகிய நீங்கள் அவர்களை ஊக்குவிக்காஙு விழிப்புடன் செயற்பட வேண்டுமென்று பணிவுடன் வேண்டுகின்றோம்.

சிவகாமி அம்பிகா சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் தேவஸ்தானம்.
பண்டத்தரிப்பான்புலம்.
காரைநகர்.
(35962) (26-42-18-19)

**ஆதீனகர்த்தாக்கள்**
சிவஞானம் - சிவபாலன்,
சிவஞானம் - சிவநேசன்.

## ஓராண்டு நினைவினில்...

மண்ணில் 10 – 01 – 1931



விண்ணில் 12 – 09 – 2003

### அமரர் ஐயன் வைரமுத்து

**கண்ணீருடன் கரைந்து சென்றது ஓராண்டு**
**நிறைந்து நிற்கிறது உங்கள் நினைவுகள்**
**எங்கள் நெஞ்சங்களில்**
**ஐயா! உங்கள் ஆத்மா சாந்தியடைய**
**ஓராண்டு பூர்த்தியாகும் இந்நாளில்**
**இறையடி பிரார்த்திக்கிறோம்.**

*காளிகோயில் வீதி,*
*கொக்குவில் கிழக்கு,*
*கோண்டாவில்.*

- குடும்பத்தினர்.
(35961)(39-42-18-19)

உ



# சண்டிலிப்பாய் வடக்கு அரசடி
# ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய மஹாகும்பாபிஷேகம்

உலகம் முழுவதும் வாழும் தமது பக்தர்களைக் காத்து ரட்சிக்கும் கருணைத் தெய்வமாகிய ஸ்ரீசித்தி விநாயகப் பெருமானுக்கு -

**03.09.2004 வெள்ளிக்கிழமை காலை 6.15 மணிமுதல் 7.05 மணிவரையுள்ள சுபவேளையில் மஹாகும்பாபிஷேகம் நடைபெறும்.**


☞ ஐம்பொன்னாலான விநாயகர் விக்கிரகம் 15.12.2003 அன்று திருடர் கைவரிசையில் அகப்பட்டு பின்பு அவர்களிடமிருந்து மீட்டெடுக்கப்பட்டு இப்போது மீண்டும் இந்த ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றேன்.

**அடியார்கள் எம்பெருமானைத் தரிசித்து சகல செல்வங்களும் பெற்றுப் பெருவாழ்வு வாழும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.**

*சண்டிலிப்பாய் வடக்கு,*
*சண்டிலிப்பாய்.*
(37348)(42-19-18)

-செல்வி மு.ஜயந்தி,
-தலைவர்-

## ஆசிகூறி வாழ்த்துகின்றோம்



**சண்டிலிப்பாய் வடக்குப் பதியிலே கோயில் கொண்டெழுந்தருளி அருள் பாலிக்கும் அரசடி ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமானின் எழுந்தருளி விக்கிரகம் வெள்ளிக்கிழமை அன்று பிரதிஷ்டை செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மிக்க மகிழ்ச்சியுடன் அருளாசிகூறி வாழ்த்துகின்றோம்.**

**மண்டும் அதே இடத்தில் எம்பெருமான் அருள் வழங்க எழுந்தருளச் செய்த பரிபாலன சபையினருக்கும் நன்றியும் ஆசியும் வழங்கக் கடமைப்பட்டுள்ளோம்.**

*479,கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

திரு.சு.பாஸ்கரன்
ஆச்சாரி.


COMPUTER
SALES




புத்தம் புதிய அதிநவீன கணனிகள்
AMD/Intel P4 Computers
39,000 /= onwards
மேலும் அனைத்து கணனி உதிரிப்பாகங்கள்

MICRO PC SYSTEMS
நெல்லியடி பிரதான வீதி (பொலிஸ் நிலையமருகில்) 0773039536
யாழ் நகர் 175/3, கஸ்தூரியார் வீதி, தொலை: 021 222 5893

தொழில் சார் பயிற்சி
M.M.I.C யின்
அறிவிப்பாளர் பயிற்சி
புதிய வகுப்பு
4 ம் திகதி ஆரம்பம்
இதுவரை பதிவு செய்யாத மாணவர்கள்
பதிவுகளை
செய்து கொள்ளலாம்
20% சிறப்புக்கழிவு
15. சிறாம்பியடி ஒழுங்கை,
ஸ்ரான்லி வீதி,
மணியம்ஸ் பில்டிங், யாழ்ப்பாணம்.
T.P. 0777- 316258

# சமய சந்நிதிகளில்

வண்ணார்பண்ணை, காட்டுத்துறை அம்பலவாண விக்கினேஸ்வரப் பிள்ளையார் கோயில் கும்பாபிஷேக தின மணவாளக்கோல விழா நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. அன்று மதியம் அஷ்டோத்தர சதசங்காபிஷேகம் நடைபெற்று, மாலை விக்னேஸ்வரப் பெருமாள் பூந்தண்டிகையில் தெரு வீதிவலம் வருவார் (10)

★ ★ ★

புன்னாலைக்கட்டுவன் வடக்கு, ஸ்ரீதுர்க்காதேவி ஆலய கட்டுக்குளி கந்தசுவாமி ஆலய வருடாந்த மணவாளக்கோலத் திருவிழா இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு சகஸ்ரசங்காபிஷேகத்துடன் நடைபெறவுள்ளது. நண்பகல் 12 மணிக்கு மாகேஸ்வர பூஜையும் இடம்பெறும். (10-201)


## ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் சரவணை மேற்கு
ஸ்ரீ அருள்வரத காளி அம்பாளின் தொண்டனுமாகிய

**நடராசா முத்துராசா** (ஆசாரி)

அவர்கள் 30.08.2004 இல் இயற்கையெய்திவிட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஸ்ரீ அருள்வரத காளி அம்பாளின் பாதாரவிந்தங்களைப் பணிகின்றோம்.

ஐ.கோ. சந்திரசேகரம் (J.P)(தர்மகர்த்தா சபை சார்பாக)
ஸ்ரீ அருள்வரத காளி அம்பாள் தேவஸ்தானம்,
சரவணை மேற்கு 2 ஆம் வட்டாரம், வேலணை.
(35803)

## ஜீவா திருமண சேவை

இன்று (01.09.2004) புதன்கிழமையிலிருந்து எமது சேவையை மீண்டும் ஆரம்பிக்கின்றோம். எம்மிடம் சகல தரத்திலும் மணமக்கள் இருக்கின்றார்கள். எமது வாடிக்கையாளர்களும் ஏனையோரும் தினமும் முற்பகல் 10.00 மணிக்கும் பிற்பகல் 3.00 மணிக்கும் இடையில் நேரில் தொடர்புகொள்ளவும்.

முகவரி
திருமதி ய.யெயானந்தம்,
ஜீவா திருமண சேவை,
சாத்தாவத்தை வைரவர் கோயிலடி,
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.
(35980)(40-14-16)

## பாண் விலை மாற்றம்

இன்று (01.09.2004) புதன்கிழமை தொடக்கம் 450 கிராம் நிறைகொண்ட பாணின் ஆகக்கூடிய சில்லறை விலை ரூபா 19/- என்பதனை அங்கத்தவர்களுக்கும் பாவனையாளர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

நிர்வாகம்,
யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்,
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(சி-37379)(40-14-16,29)

யா/புனித ஹென்றியரசர் கல்லூரி
இளவாலை

## பரிசளிப்புவிழா-2004

இடம்: கல்லூரி மண்டபம்
காலம்: இன்று (01.09.2004) புதன்கிழமை பி.ப. 3.00 மணி
தலைவர்: அருட்தந்தை க.ஜேம்ஸ்சிங்கராயர் (அதிபர்)
பிரதமவிருந்தினர்: அதிவண.கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை (யாழ்.மறைமாவட்ட ஆயர்)
சிறப்பு விருந்தினர்: திருவாளர் சு.சுந்தரசிவம் {உதவிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி நிர்வாகம்), வலிகாமம் கல்வி வலயம்}
திருவாளர் செவாலியர், வித்துவான் ச.அ.அடைக்கலமுத்து

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

-அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.
(சி-37382)(29-40-14-16)

## ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

சரவணை மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் காளி
அம்பாளின் ஆலய மணிக்கூட்டுக் கோபுர உபயகாரரும்
திருமதி மகாதேவியின் அன்புக் கணவருமாகிய

**மு.சோமசுந்தரம்** (துரைராசா ஆசாரி)

அவர்கள் 28.08.2004 இல் இயற்கையெய்தியதையிட்டு துயருறும் குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவித்து ஆத்மாசாந்தியடைய ஸ்ரீ அருள்வரத காளி அம்பாளின் பாதாரவிந்தங்களைப் பணிகின்றோம்.

ஐ.கோ. சந்திரசேகரம் (J.P.)
(தர்மகர்த்தா சபை சார்பாக)
ஸ்ரீ அருள்வரத காளி அம்பாள் தேவஸ்தானம்
சரவணை மேற்கு 2 ஆம் வட்டாரம், வேலணை.

LONDON ENGLISH COLLEGE

## WALK IN INTERVIEW

**IMMEDIATE APPOINTMENT**

**YOUNG, ENERGETIC LADY TEACHERS TO CONDUCT ENGLISH TEACHING PROGRAMMES FOR CHILDREN**

Qualifications: G.C.E. 'A Levels'
Good at English Speech,
Training OR Experience in Music,
Plays and Games Preferred.

**Date: Saturday, 4th September 2004**
**Time: 3.p.m.**

Principal
No: 105, Arasady Road, Jaffna.
T.P.: 021 222 5889
(C/37374)(40-14-16)


## பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணத்தில் உள்ள மதத்தலைவர்களுக்கு சிறுவர் உரிமைகள் தொடர்பான ஒருநாள் பயிற்சிப்பட்டறை நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டப்படிப்புப் பிரிவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (10)

## இன்றைய ஆட்டங்கள்

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிமுதல் கழக மைதானத்தில் இடம் பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:

பிற்பகல் 3.30 மணிக்கு - வல்வெட்டி ஒற்றுமை விளையாட்டுக் கழக அணி எதிர் வல்வை விளையாட்டுக் கழக பி அணி. மாலை 4.30 மணிக்கு ஒற்றுமை விளையாட்டு கழக அணி எதிர் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக்கழக அணி.(10-5)


## தொலைத்தொடர்பு நிலைய உரிமையாளர்களே!!

வெளிநாடுகளுக்கான
**CONECTING CALL**
(மிகக்குறைந்த கட்டணம்)
விவரங்களுக்கு:
குட்வில் கொமினிகேசன்
**T.P.:021 222 3332**
48, சென்.பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(C37363)

## நெல்லை சில்க்

நெல்லியடி நெல்லை சில்க் மாதாந்த
பட்டுச்சேலைக்கான இந்தமாத
அதிர்ஷ்டலாபச் சீட்டு இல.0241
உரியவர் நேரில் வந்து பட்டுச் சேலையைப்
பெற்றுக்கொள்ளலாம்.
சி.அகிலதாஸ்
உரிமையாளர். (சி-37383)

## தவறிவிட்டது

இல.239, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஈஸ்வரக் குருக்கள் பரமேஸ்வரன் என்பவருடைய தேசிய அ.அட்டை (இல.763614875V) மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம், பிரயாண அனுமதிப்பத்திரம் முதலியன 30.08.2004 அன்று யாழ். முகமாலை பஸ் பயணத்தின்போது பேர்ஸுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியில் அல்லது T.P 077 6287483, 021-222 2317 என்ற இலக்கத்தில் தொடர்புகொள்ளவும். (35804)

## விற்பனைக்கு

புதிய, பழைய தமிழ், ஆங்கில திரைப் படங்கள் CD களிலும், கொப்பிகளிலும் 3 நிமிடங்களில் பதிவுசெய்யும் CD றைற்றர் விற்பனைக்குண்டு.

தொடர்புகொள்ள வேண்டிய
முகவரி:
N.ராஜா வீடியோ சென்ரர்,
32, சின்னக்கடை வீதி,
யாழ்ப்பாணம்.
(35995) T.P. 077 6282909

## விவசாய பீட மாணவர் ஒன்றியத்தின் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்


விவசாயபீட விரிவுரை மண்டபத்தில் எமது ஒன்றியத்தால் நடத்தப்பெற்ற சீட்டிழுப்பு முடிவுகள் வருமாறு:

முதலாம் பரிசு இல. 5004
இரண்டாம் பரிசு இல.15749
மூன்றாம் பரிசு இல. 6115
ஆறுதல் பரிசுக்குரிய
இலக்கங்கள்:
9430, 2011, 1595,
5822, 14574.

☞எதிர்வரும் 06.09.2004இற்குப் பின்னர் பரிசுகளை எமது பீடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விவசாயபீட மாணவர்
ஒன்றியத்தினர்.
(C/37380)(40-14-16)

நிறைஞ்சனால் சங்கானை



அர்ஜுன். மீனா நடித்த
அன்பு சகோதரன்
தினசரி: 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி.சனி.ஞாயிறு.
STRIKE FORCE (இரவு 8.45பு.நே)
(C/36305) (12)

ராஜா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரேதின வெளியீடு
விஜய், சோனியா அகர்வால்,
வடிவேல்
நடித்த
மதுர



பு.நே.:10.30, 2.30, 6.30, 9.30

நாகம்ஸ் சுன்னாகம்



இன்று முதல்
கமலஹாசன். சிநேகா. பிரபு.
பிரகாஸ்ராஜ் நடிப்பில்
வசூல்ராஜா MBBS
(சி-36415)
காட்சிநேரம்: 11.00,3.00, 7.00 (பு.நே.)

'PEACE THROUGH SPORTS'

Jaffna College Cordially Invites You to be Presen at the Inter - Schools' Invitation Peace Soccer tournament 2004

## OPENING CEREMONEY

2nd September 2004 at. 8.00 a.m.
CHIEF GUEST
**RT.REV.DR.THOMAS SAVUNDARANAYAGAM**
Bishop of Jaffna.
4th September 2004 at 3.30 p.m.
**FINAL DAY**
CHIEF GUESTS
**MR.& MRS.G.RAJANAYAGAM**
Principal, Emeritus, Jaffna College.
**PATRON-Mr.N.A.Vimalendran**
Principal, Jaffna College.
SPORTS COMMITTEE
JAFFNA COLLEGE ,Vaddukoddai.
(C/37381)(40-16-14)


# மரண அறிவித்தல்கள்

## வைத்திலிங்கம் இராசரத்தினம்



29-08-2004 சிவபதம் எய்திய வைத்திலிங்கம் இராசரத்தினத்தின் இறுதிக்கிரியைகள் இன்று (01.09.2004) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் குப்பிளானில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காடாகரம்பை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கேணியடி, குப்பிளான்.*
தகவல்:
இ.துரைராசா
மருமகன்.
(35806)(40-16-14-30)

## திருமதி இராசம்மா நல்லதம்பி

வேலணை கிழக்கு, 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி இராசம்மா நல்லதம்பி 29.08.2004 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற முத்துக்குமாரு செல்லமுத்து அவர்களின் அன்பு மகளும் கமலேஸ்வரி, நாகேஸ்வரி (கனடா), துரைராசா, போசராசா (காலஞ்சென்ற விஜயலட்சுமி), ராஜேஸ்வரி (ஜேர்மனி), சுதாமதி (ஜேர்மனி), வரதராஜா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான நடராஜா சண்முகராஜா, புனிதவதி, ராஜேஸ்வரி, மாணிக்கவாசகர் (ஜேர்மனி), நாகேஸ்வரன் (ஜேர்மனி), வவா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.09.2004) புதன்கிழமை 10 மணியளவில் வேலணை சாட்டி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*2 ஆம் வட்டாரம்,*
*வேலணை.*
(35810)(40-16-14)
தகவல்:-
ந.துரைராசா (மகன்).

## திருமதி புனிதவதி திருநாவுக்கரசு



அல்வாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் அரியாலை, நொத்தாரிஸ் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புனிதவதி திருநாவுக்கரசு நேற்று (31.08.2004) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை கதிராசி (முத்துக்குட்டி)யின் கனிஷ்ட புத்திரியும் அமரர் மு.திருநாவுக்கரசுவின் (ஆர்மோனிய வித்துவான்) அன்பு மனைவியும் ஜெயானந்தன் (டென்மார்க்), அமரர் ஜெயாதரன், ஜெயந்தன் (தபால் திணைக்கள ஊழியர், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் மரிய கொறற்றி, சசிகலா, தி.சிவானந்தன் (யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் தர்ஜான், மாலதி, நிலவன் ஆகியோரின் பேர்த்தியாரும் க.பாலசண்முகம், திருமதி இராசரத்தினம் கெங்காதேவி, திருமதி அந்தோணிமுத்து மதுரைத்தேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் திருமதி நவரத்தினம் திரவியம், ந.இராசரத்தினம், ப.அந்தோணிமுத்து, திருமதி புஷ்பராணி பாலசண்முகம் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01-09-2004) புதன்கிழமை நண்பகல் 12மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும் .

*நொத்தாரிஸ் வீதி,*
*அரியாலை. யாழ்ப்பாணம்.*
(சி-35805)(14-16-40)
தகவல்:
தி.ஜெயானந்தன் (மகன்).
தி.ஜெயந்தன் (மகன்).

## கந்தையா கந்தசாமி

**(முன்னாள் மோட்டர் மெக்கானிக். திருச்செல்வம் கொம்பனி)**



யாழ்.44/2, கல்லூரி வீதி நீராவியடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தையா கந்தசாமி அவர்கள் நேற்று (31-08-2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வாலாம்பிகை (கற்கண்டு), சின்னத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற கந்தசாமி யோகம்மா மற்றும் இரத்தினம் (மானிப்பாய்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் இராசலெட்சுமியின் அன்புக் கணவரும் இரட்ணராஜா (சுங்கத்திணைக்களம், கொழும்பு), மகேந்திரதாசன் (பிரான்ஸ்), நிர்மலாதேவி (ஜேர்மனி), இரவீந்திரதாசன் (தாஸ் நீரிறைப்பி திருத்தக உரிமையாளர், முனீஸ்வரன் வீதி, யாழ்.), சுசீலாதேவி (ஜேர்மனி), கஜேந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கிருஷ்ணகுமாரி, செல்வராணி, சாந்தலிங்கம், விஜயகுமாரி, யோகானந்தம், துமிர்லா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் திவியா, சுதர்சன், சுபி, பிரணவன், பிரியதர்ஷினி, பிரதீபன், கிருஷ்ணவேணி, வத்சலா, நிரோஜன், பகீரதன், தயானி, வர்ஷா, சஞ்சயன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02-09-2004) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும் .

*44/2, கல்லூரி வீதி,*
*நீராவியடி, யாழ்ப்பாணம்.*
*T.P.:No. 021-4590971.*
தகவல்:
மனைவி, பிள்ளைகள்.
(35808)(40-14-16)

## கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவங்கள் இடம்பெறாமல் தடுக்க - தவிர்க்க - முடியும் என்று கூறிவந்த கண்காணிப்புக்குழுத் தலைவர், அத்தகைய சந்திப்புக்களை மீண்டும் ஏற்படுத்தச் செய்யும் வகையில் பல முயற்சிகளை எடுத்துவந்தார். கொழும்பில் பாதுகாப்பு அதிகாரிகளோடும்,

கிளிநொச்சியில் புலிகளின் தலைமையோடும் இது தொடர்பாக அவர் விரிவாகக் கலந்துரையாடல்களை நடத்தினார்.

நேற்றுக்காலை கண்காணிப்புக் குழுவின் மற்றைய இரு அதிகாரிகளை அழைத்துக்கொண்டு பொன் புரூஹொவ்டே மட்டக்களப்புக்குச் சென்றார். காலை 9.30 மணி முதல் 10.30 மணிவரை மட்டக்களப்பு மாநகரசபைக் கட்டடத்திலுள்ள 233ஆவது பிரிகேட் அலுவலகத்தில் மட்டக் களப்பு இராணுவ அதிகாரிகளை அவர் சந்தித்தார். அந்த பிரிகேட்டின் தளபதி கேணல் எல்.ஆர்.அமரதுங்க, வாழைச்சேனையில் உள்ள பிரிகேட்டின் தளபதி கேணல் தயா இரட்ணாயக்கா மற்றொரு இராணுவ அதிகாரி கேணல் ஜானகவல்கம ஆகியோருடன் கண்காணிப்புக் குழுத் தலைவர் புரூஹொவ்டே முதலில் விரிவாகக் கலந்துரையாடினார்.

அப்போது கிழக்கில் விடுதலைப் புலிகள் கொல்லப்படுவது பற்றிய சர்ச்சையைக் கண்காணிப்புக் குழுத் தலைவர் பிரஸ்தாபித்தார் என்று கூறப்படுகிறது. அதற்கு இராணுவத் தரப்பில் பதில் தரப்பட்டது.

"இக்கொலைகளுக்கும் இராணுவத்துக்கும் சம்பந்தமேயில்லை. கிழக்கில் நடப்பது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உள்வீட்டுப் பிரச்சினை. விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பு இல்லாமல் கிழக்கில் படுகொலைகளை எம்மால் தனித்து தடுத்து விடமுடியாது.

"புலிகள் ஒத்துழைப்பார்களாயின் அவற்றைத் தடுக்கலாம்.

"அதுகுறித்து புலிகளுடன் விரிவான சந்திப்புக்களை, கலந்துரையாடல்களை நடத்த விரும்புகிறோம்" - என்று படைத்தரப்பில் கூறப்பட்டதாகத் தெரியவந்தது.

இதையடுத்து, புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள கொக்கட்டிச்சோலை சோலையகத்துக்குக் கண்காணிப்புக்குழுத் தலைவர் சென்றார்.

அங்கு அவர் புலிகளின் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் கௌசல்யன், மட்டு. - அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஷ், மாவடி முன்மாரிக் கோட்டத் தளபதி ரமணன் ஆகியோரை அவர் சந்தித்தார்.

அச்சமயம், கிழக்கு நிலைமையைப் புலிகளின் பிரதிநிதிகள் கண்காணிப்புக்குழுத் தலைவருக்கு விளக்கினர்.

கிழக்கில் வன்முறைகளை படைத்தரப்பே பின்னணியில் நின்று ஊக்குவித்து, வழிநடத்துகின்றது. கொலைகளுக்குக் காரணம் அரச இராணுவத்தின் புலனாய்வுப்பிரிவினரே என்று குற்றம் சுமத்திய புலிகள், அதற்கான காரணங்களையும், ஆதாரங்களையும் முன்வைத்து விலாவாரியாக விளக்கம் கொடுத்தனர் என்று கூறப்பட்டது.

"புலிகள் போராளிகள் கொல்லப்படுவது நிறுத்தப்பட வேண்டும். இக்கொலைகளினால் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் புலிகள் தமது அரசியல் நடவடிக்கைகளில் சுதந்திரமாக ஈடுபடமுடியாமல் உள்ளது. இத்தகைய நிலையில், அரசுப்படை அதிகாரிகளோடு பேச்சு நடத்துவதும் சந்திப்பு, கலந்துரையாடல்களை மேற்கொள்வதும் அர்த்தமற்றது என்று கண்காணிப்புக்குழுத் தலைவருக்குப் புலிகள் சுட்டிக்காட்டினர்.

இதனைச் செவிமடுத்த கண்காணிப்புக் குழுத் தலைவர், எது எப்படியென்றாலும் அரசுப் படைகளின் பிரதிநிதிகளும் புலிகளின் பிரதிநிதிகளும் நேரில் சந்தித்துப் பேசினால்தான் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். எனவே, அத்தகைய சந்திப்புக்கு இணங்குங்கள் என்று புலிகளை வற்புறுத்தினார்.

அதனை ஏற்றுக்கொண்ட புலிகள் சந்திப்புக்கு இணங்கினர்.

இந்தச் சந்திப்புப் பெரும்பாலும் நாளைமறு தினம் வெள்ளிக்கிழமை இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (க-3)


D.C.M பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

B.A. Final

பொருளியல்

S.வரதராஜன்

ஆரம்பம்: 04-09-04 சனி 7.00 ப.நே.

(35873)



புதிய பிரிவு

ஆரம்பம்: 05.09.2004 10a.m.

**Diploma Courses**

- ★Diploma in Microsoft office
- ★Diploma in Internet Technology
- ★Diploma in Desk Top Publishing
- ★Diploma in Hardware Engineering
- ★Diploma in Java programming

புலமைப்பரிசில் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான விசேட பிரிவு

பதிவுகளுக்கு முந்துங்கள்

மேலதிக விபரங்களுக்கு:
தலைமை அலுவலகம்:
IBMS,
# 410,K.K.S. Road,
Jaffna. (சி-37375)

கிளை நிறுவனங்கள்:
-NMMV Road, Nelliady.
-Sangaththanai,
-Chavakachcheri,


## கலைஞர்கள் ஒன்றுகூடல்

நல்லூர் கந்தசுவாமி ஆலய கார்த்திகைத் திருவிழாவின்போது இவ்வருடமும் இசை அர்ச்சனை நிகழ்வு இடம்பெறவுள்ளது

இந்த இசை அர்ச்சனை நிகழ்வில் பங்கேற்கவுள்ள கலைஞர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வு இன்று மாலை 4மணிக்கு நல்லை ஆதீனத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-4)

## பட்டதாரிகள் எதிர்ப்பு

யாழ்ப்பாணம்,செப்.1

பட்டதாரிகள் பணி நியமனத்திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்புப் பயிற்சி நெறிக்கான நியமனக்கடிதங்களை வழங்க நாளை முற்பகல் 9மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ள விழாவின்போது எதிர்ப்புத் தெரிவிப்பதென யாழ். வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது. (ஒ-201)

## குருநகர்ப் பகுதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன்தினம் கடலில் நடத்தப்பட்ட தாக்குதலில் குருநகர் மீனவர்களின் ட்றோலர் படகு ஒன்று பலத்த சேதமடைந்தது. அதில் இருந்த இரண்டு மீனவர்கள் காயமடைந்தனர்.

குடாக்கடலில் ட்றோலர் படகுகளில் மீன் பிடிப்பது தொடர்பாக குருநகர் மற்றும் பூநகரி - பாலாவி பிரதேச மீனவர்களிடையே இணக்கப்பாடு ஒன்று கடைப்பிடிக்கப்பட்டு வந்தது என்று கூறப்படுகிறது.

இந்த இணக்கப்பாட்டின் பிரகாரம் பாலாவி கடற்கரையில் இருந்து ஐந்துமைல் தொலைவுக்குள் குருநகர் மீனவர்கள் ட்றோலர் படகுகளில் வந்து தொழில் செய்வது கட்டுப்படுத்தப்பட்டுவதாகவும் கூறப்படுகிறது.

கடலில் இடம்பெற்ற சம்பவத்துக்கும் இந்த இணக்கப்பாட்டுக்கும் தொடர்பு இருக்கிறதா என்பது குறித்து உடனடியாகத் தகவல் எதுவும் தெரியவரவில்லை.

இருபகுதி மீனவர்களிடையேயும் இணக்கத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. (ஜ-3-51-88-173)


**Computer Express**

Hardware Sales & Service Center

No.328 stanly Road, Jaffna.

0777-222422 021-2227866

அதிரடி விலையில்

100% உத்தரவாதம் நம்பிக்கையான விற்பனைக்குப் பிந்திய சேவைகளுடன்

Pentium II 18000/=

கொழும்பு விலையில்

Pentium III, Pentium IV

கணனிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.



**A/L DAY CLASS**

Com.- Mr.பசில் B.B.A

Acc.-Mr. தவா B.Com (Hons) (Acc. Spl.)

A/L '06 கணிதப்பிரிவு

'05 DAY PHY.,CHE.

SHAMROCK , J/ஈச்சமோட்டை

(35973)



**D.C.A**

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள் கல்வியாண்டு 2003-2004 இற்கான G.A.Q 1st in Com.

விரிவுரைகள் ஆரம்பமாகி அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

கணக்கீடு: D.SAM 10.00-11.00 a.m.

வர்த்தகம்: பசீல் 12.00-1.00 p.m.

பொருளியல்: இராஜேஸ்வரன் ஜெயக்குமார் 11.00-12.00

கணிதம்: தவசேகர் 9.00-10.00

ஆங்கிலம்: சுதர்ஷன் 1.00- 2.00

விவரங்களுக்கு: D.C.A (D.M.I) வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

(35953)



இன்று ஆரம்பம்

பிரிவு 2

விக்னா கல்வி நிறுவனம்

**A/L DAY CLASS**

வணிகக் கல்வி திரு.முரளி

ஆரம்பம்: 01-09-2004

1மணி S.L.T.

(35993)



**விக்னா கல்வி நிறுவனம்**

பொருளியல்

திரு.K.உதயன்

A/L 2005 பகுதி II 10.30

A/L 2006

பிரிவு 1 விலைக்கோட்பாடு 8.30

பிரிவு 2 நெகிழ்ச்சி 11.30

ஆரம்பம்: 04-09-04 சனி

(35992)



**இன்று முதல் விலைமாற்றம்**

யாழ்ப்பாணத்தில் -

ஐஸ்கிறீம் ~ குளிர்பானம் ஆகியவற்றின் விலைகள் இன்று 01~09~2004 புதன்கிழமை முதல் (மூலப் பொருள்களின் விலை அதிகரிப்பையிட்டு) அதிகரிக்கப்பட்டுள்ளன.

பாவனையாளர்கள் அன்புடன் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(35998) யாழ்.நகர ஐஸ் கிறீம் வியாபாரிகள்.


## சமாதான முயற்சிக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டு, புரிந்துணர்வின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டுமானால் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அரசு தனது நல்லெண்ண நடவடிக்கைகள் மூலம் அந்த விருப்பத்தை முதலில் வெளிப்படுத்த வேண்டும்.

அதைவிடுத்து தமது இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவு மூலம் - துணைப்படைகளைப் பயன்படுத்தி -புலிகள் மீது ஒளிவுமறைவுத் தாக்குதல்களைத் தூண்டிவிட்டு நடத்திக்கொண்டு புலிகள் கொலை செய்கிறார்கள் என்று அபாண்டமாகக் குற்றம் சுமத்தி கூப்பாடு போட்டுக்கொண்டு இருப்பதில் அர்த்தமில்லை.

இன்றைய நிலையில் யுத்த நிறுத்தத்தைச் செம்மையாகக் கடைப்பிடிப்பதே சர்ச்சைக்குள்ளாகியிருக்கின்றது. யுத்த நிறுத்தம் பேணப்படுவதற்கும் சமாதானப் பேச்சுக் களை முன்னெடுப்பதற்கும் முதலில் புரிந்துணர்வு சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டு, பரஸ்பர நம்பிக்கை கட்டி வளர்க்கப்படவேண்டும். ஆனால், சந்திரிகாவின் அரசு ஆட்சிக்கு வந்த நாள் முதல் நிலைமையைச் சீர்கெடுக்கும் வேலையையே மும்முரமாகச் செய்துவருகிறது.

கிழக்கில் ஆயுதக் குழுக்களை - புரிந்துணர்வு ஒப்பந் தத்திற்கு அமைய -அரசு அகற்றுமானால் சகல சிக்கல்களுக்கும் ஓரளவு முடிவு வந்துவிடும். ஆனால், அதைச் செய்யாமல் நிலைமையை மேலும் மோசமடையச் செய்து வருகிறது அரசு.

பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டுமானால் முதலில் அதற்கான ஆக்கபூர்வமான சூழ்நிலையை - சொல் மூலமும், செயல்மூலமும் - அரசு உருவாக்கவேண்டும் என் பதை அரசுத் தரப்புக்குச் சொல்லுங்கள்.

புலிகளைப் பலவீனப்படுத்துகின்றோம் என்ற நினைப்பில் கிழக்கில் மேற்கொள்ளும் சதி நாசவேலைகளைக் கைவிட்டு-

புலிகள் கொலைகாரர்கள் என்ற பாணியில் செய்யும் பரப்புரைகளை நிறுத்திவிட்டு - நல்லெண்ண சமிக்ஞைகளை வெளிப்படுத்தும் நடவடிக்கைகளை எடுக்கும்படி அரசுத் தரப்புக்கு கூறுங்கள்.

யுத்த நிறுத்தத்தை முழு அளவில் கடைப்பிடிக்க புலிகள் உறுதி பூண்டுள்ளார்கள். அவர்களைக் குழப்பு வதற்கு முயல்வதை அரசு நிறுத்த வேண்டும்.

யுத்தம் மீள வெடிக்கும் என்று நான் நம்பவில்லை.

புலிகளுக்கு எதிரான சதிவேலைகளை முடிவுக்குக் கொண்டுவந்து புலிகளைச் சீண்டுவதை நிறுத்தி பரஸ்பர நம்பிக்கையை ஏற்படுத்தும் நல்லெண்ண நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் அமைதி முயற்சிகளை ஜனாதிபதி உயிரூட்ட முடியும். - இப்படி மதியுரைஞர் பாலசிங்கம், சொல்ஹெய்முக்குத் தெரிவித்தார்.

சொல்ஹெய்முக்கும், ஹான்ஸ் பிரட்ஸ்கருக்கும் நேற்று அன்ரன் பாலசிங்கம் - அடேல் பாலசிங்கம் தம்பதியர் வழமைபோல மதியவிருந்து வழங்கிக் கௌரவித்தார். (க)


கணக்கீடு A/L 2005

திரு.பாலவாசன்

B.B.A.(FM.Spl.)

கம்பனி

Mon.-Fri. 3.30 p.m

ஆரம்பம்:

03.09.04 ⇨Fri.

STAR கல்வி நிலையம்


## சமாதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர்களையும் சந்தித்து சமாதான முயற்சிகள் குறித்து அவர் கலந்துரையாடுவார் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்று லண்டனில் பாலசிங்கத்தை சந்தித்து, சொல்ஹெய்ம் பேச்சு நடத்தியபோது உடனிருந்த இலங்கைக்கான நோர்வேத் தூதர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் எதிர்வரும் சனிக்கிழமை இலங்கை திரும்புவார்.

சமாதானத்துக்குப் புத்துயிர் அளிக்கும் முயற்சியில் சொல்ஹெய்ம் ஈடுபடு வதற்குத் தேவையான முன்னேற்பாடுகளை அவர் கவனிப்பார் என்று தெரிவிக்கப்பட்டது.

இறுதியாக சொல்ஹெய்ம் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது சமாதான முயற்சிகளில் எந்தவித முன்னேற்றத்தையும் ஏற்படுத்த முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## உளங்கனிந்த நன்றிகள் உரித்தாகட்டும்

யா/உடுவில் அம்பலவாணர் வீதியைச் சேர்ந்த

**செல்வி பிறிந்தினி அருணோதயராஜா**

ஆகிய நான் ஆற்றொணாத நோய்வந்து அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சையளிக்கப் பெற்றேன்.

நோயின் கடுமையால் உயிருக்குப் போராடிய வேளையில் என்னைக் குணப்படுத்தும் ஒரே நோக்கில் பல்வேறு சிகிச்சையளித்து உதவிய யாழ்.போதனாவைத்தியசாலை டாக்டர்கள் வைத்திய கலாநிதி பேரானந்தராஜா அவர்களுக்கும் வைத்தியகலாநிதி கணேசமூர்த்தி அவர்களுக்கும் இவர்களோடு சேர்ந்து ஒத்துழைப்பு நல்கிய சக வைத்தியர்களுக்கும் தாதியர்களுக்கும் எனது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதுமாத்திரமன்றி, நான் சுகமடைய வேண்டும் என்று வேண்டி பல்வேறு ஆலயங்களிலும் எனக்காகத் திருப்பலி ஒப்புக்கொடுத்து செபித்த அனைத்து அருட்தந்தையர்களுக்கும் அருட்சகோதரிகளுக்கும் பிறநாடுகளிலிருந்தும் எனக்காகச் செபித்து வேண்டிய அன்புள்ளங்களுக்கும் பிற மத சகோதரர்களுக்கும் மற்றும் அன்பு நண்பர்களுக்கும் உற்றார், உறவினர்களுக்கும் என் அன்பு கலந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக அற்புதமான முறையில் நான் சுகமடைந்து உயிர்பெற்றெழச் செய்த இறைவனுக்கும் என்நன்றிகள்.

அம்பலவாணர் வீதி,
உடுவில். (35938)(32-11-17)

செல்வி
பிறிந்தினி அருணோதயராஜா

## மரண அறிவித்தல்கள்

### மார்க்கண்டு ஏரம்பமூர்த்தி

குப்பிளான், கன்னிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் சுவிற்ஸர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு ஏரம்பமூர்த்தி நேற்று (31-08-2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் வசந்தாதேவியின் அன்புக் கணவரும் மருசீயா, சைத்தியா ஆகியோரின் அன்புத் தந்தையும் மார்க்கண்டு-இராசமணி தம்பதிகளின் அன்புப் புதல்வனும் சுசீலாதேவி, லலிதாதேவி, ரஞ்சனாதேவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாலகிருஷ்ணன், தயாளச்சந்திரன், தவநீதராசா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுவிற்ஸர்லாந்தில் நடைபெறும். குப்பிளானில் பாலகிருஷ்ணனின் இல்லத்திலும் துக்கம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும் .

குப்பிளான் தெற்கு.
சுவிற்ஸர்லாந்து
0041244632971 (சி-37384)(32-14-16)

தகவல்:
ச.பாலகிருஷ்ணன்

### வைரமுத்து செல்வம் (காந்தி)



அரசடிப் பிள்ளையார் கோயிலடி, கட்டுடை, மானிப்பாயைச் சேர்ந்த வைரமுத்து செல்வம் (காந்தி) 29-08-2004 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் ஜமுனாவதியின் அன்புக் கணவரும் சுயந்தினி காலஞ்சென்றவர்களான சியாமினி, சிவாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சுதேஸகுமாரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும் .

அரசடி வீதி,
கட்டுடை,
மானிப்பாய். (35809)(32-11-17)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.09.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.